

# மாநில சுயாட்சி

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

# 'மாநில சுயாட்சி'



தமிழக முதல்வர்
டாக்டர்
**மு. கருணாநிதி**

# பதிப்புரை

மைய—மாநிலங்களின் உறவு குறித்துத் தெளிவான கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக—முன்னாள் தலைமை நீதிபதி திரு. ராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், முன்னாள் தலைமை நீதிபதி திரு. சந்திரா ரெட்டி, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவினைத் தமிழ்நாடு அரசு 22-9-1969ல் நியமித்தது. அந்தக் குழு ஓராண்டுக் காலத்துக்கு மேல் ஆய்வுகளை மேற்கொண்டு 10-3-1971 அன்று தனது அறிக்கையை அளித்தது. (அந்த அறிக்கையைத் தமிழக அரசு ஏற்கெனவே நூலாக வெளியிட்டுள்ளது).

அந்த அறிக்கையை மைய அரசின் பார்வைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் முதல்வர் கலைஞர் அவர்கள் 15-6-1971ல் அனுப்பினார்கள், அதைப் பெற்றுக்கொண்டு, இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, 22-6-1971ல் எழுதிய கடிதத்தில் ''இது குறித்துத் தமிழ் நாடு அரசின் கருத்தினை எனக்குத் தெரியப்படுத்துங்கள்'' என்று தெரிவித்திருந்தார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டது தமிழ்நாடு அரசு.

ஏப்ரல் 16 ஆம் நாளன்று, மாநில சுயாட்சித் தீர்மானத்தை, முதல்வர் கலைஞர் சட்டப்பேரவையில் முன்வைத்து, நீண்ட உரையாற்றினார்கள். அந்த உரைமீதான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கு எடுத்துக் கொண்டனர். மேலவையிலும் மாநில சுயாட்சி குறித்து உறுப்பினர்கள் வாதிட்டனர். உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதிலளித்து 20-4-'74ல் சட்டப் பேரவையிலும், 28-4-'74ல் சட்டமன்ற மேலவையிலும் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பதிலுரைகள் தொகுக்கப்பெற்று ''மாநில சுயாட்சி'' என்ற மகுடத்துடன், 'தமிழரசு' 16-5-'74 இதழின் இலவச இணைப்பாக வெளியிடப் பெறுகிறது.

321.022

தமிழக மக்கள் அனைவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலம் இது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*செய்தி-மக்கள் தொடர்புத்துறை,*
*தமிழ்நாடு அரசு.*

# தீர்மானம்

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, 3962

''பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று--மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

16—4—74 **மு. கருணாநிதி**

# சட்டப் பேரவையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! என்னுடைய அரசியல் பொது வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே முன்மொழிந்து, ஐந்து நாட்கள் விவாதம் நடைபெற்று, தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்ற கட்டத்தில், இதுவரையில் பேசப் பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், நான் இந்தத் தீர்மானத்தைப் பற்றி முன்னுரையிலே குறிப்பிட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களுக்கும் தொடர்பாக இன்னும் சில கருத்துக்களை இந்த அவையிலே கூற விரும்புகின்றேன். நான் முன் மொழிந்த தீர்மானத்தைப் பலர் இங்கே வழி மொழிந்திருக்கின்றார்கள். சிலர் என் மீதும், ஆளும் கட்சியின் மீதும் பழி மொழிந் திருக்கின்றார்கள். இந்த மாமன்றத்திலே இருக்கின்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள், வழி மொழிந்து பேசி, தோழமைக் கட்சியினுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் வழி மொழிந்து பேசி எதிர்த் தரப்பிலிருந்து பல்வேறு கருத்துக்கள் அவரவர்கள் கொண்டிருக்கிற கொள்கைக்கு ஏற்ப, இங்கே எடுத்து உரைக்கப்பட்டிருக்கின்றன.

பழைய காங்கிரஸ் கட்சி, 'மாநில சுயாட்சியே ஒரு பயங்கரமான பூதம்' என்கின்ற அளவுக்கு, இங்கே தங்களுடைய வர்ணனையைச் செய்திருக்கின்றார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சி, டில்லியிலே அவர்கள் இன்றைக்கு அரசோச்சுகின்ற காரணத்தினால், 'எதையும் விட்டுத் தர முடியாது' என்கின்ற அந்த மனப்பான்மையில் தங்களுடைய கருத்துக்களை மிகத் தீவிரமாக இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். கம்யூனிஸ்ட் கட்சி — இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சிகளோடு இணைந்து 'அரசியல் சட்டம் திருத்தப்படத் தேவையில்லை, மத்திய மாநில உறவுகளுக்காக' என்ற ஒரு திருத்தத்தை அவர்கள் சார்பாக இரண்டு காங்கிரஸ் கட்சிகளோடு இணைந்து, இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கின்றார்கள்.

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும், பார்வர்டு பிளாக் கட்சியும், தமிழரசுக் கழகமும், சுயேச்சை உறுப்பினர்களும் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டிய இன்றியமையாமையையும் மாநில சுயாட்சியினுடைய அவசியத்தையும் இங்கே வலியுறுத்திப் பேசியிருக்கின்றார்கள். 'மாநிலத்திற்கு சுயாட்சி தேவை இல்லை; அதை அண்ணா எந்தக் காலத்திலும் சொல்லவில்லை ; மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தேவை ; அதிக அதிகாரங்கள் தேவை ; ஆனால் அந்த அதிகாரங்களைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் கொடுக்கக் கூடாது' என்கின்ற ஒரு கெழுமிய ஜனநாயகக் கருத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தரப்பட்ட அதிகாரங்கள் பயன் படுத்தப்பட்டனவா? மக்களுடைய நல்வாழ்வுக்கு அந்த அதிகாரங்கள் உபயோகமாக இந்த அரசால் செயல்படுத்தப்

பட்டனவா? என்ற கேள்வி எழுந்தது. அதன் தொடர்பாக இன்னொரு கேள்வி — என்னென்ன நல்ல காரியங்களைச் செய்வதற்கு இன்றைக்கு இருக்கின்ற அரசியல் சட்டம் இடம் தரவில்லை? என்கிற மற்றொரு கேள்வி எழுந்தது. நான் என்னுடைய பேச்சின் முதல் பகுதியாக இந்த இரண்டு கேள்விகளுக்கும் சுருக்கமாகப் பதில் அளிக்க வேண்டியது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

நான் நண்பர் செழியன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், குறிப்பிட்டதைப் போல என்னென்ன காரியங்கள் செய்தீர்கள்? என்னென்ன செய்து முடித்தோம் என்ற வாதப் பிரதிவாதங்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்திலே நடைபெற வேண்டும் என்றாலும் கூட பல நண்பர்கள் இங்கே என்னென்ன காரியங்கள், இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டு செய்யப்பட்டன என்ற கேள்விகளை, விளக்கம் பெறுவதற்காக அல்ல—எந்தக் காரியங்களும் செய்யப்படவில்லை என்று அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிடுவதற்கு அந்தக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். அதைப்போலவே என்னென்ன காரியங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் அரசியல் சட்டம் இன்றைக்குக் குறுக்கே நிற்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி, அதையும் விளக்கம் பெறுகின்ற முயற்சியாக அவர்கள் எடுத்துக் கொள்ளாமல், அரசியல் சட்டம் குறுக்கே நிற்கவில்லை என்று அவர்களுடைய வாதத்திற்கு ஆதாரமாக அந்தக் கேள்வியை எழுப்பினார்கள்.

இந்த விவாதத்தைத் தொடங்கிவைத்த என்னுடைய அருமை நண்பர் ஆலடி அருணா அவர்கள், எத்தகைய அதிகாரங்கள் இன்றைக்கு மாநில அரசுக்கு இல்லாத காரணத்தினால் நாம் வளமான வாழ்வினைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதனையும், இருந்த அதிகாரங்களை எல்லாம் எப்படி எப்படி மத்திய அரசு அவ்வப்போது பறித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் வெகு விளக்கமாக இங்கே எடுத்துக் கூறினார்கள். இன்றைக்கு நாம் இங்கே நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகின்ற தீர்மானம், நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகின்ற தீர்மானம், நிறைவேற்றப்பட்டதும் உடனடியாக நாளைக்கே மத்திய அரசு அதை நடைமுறைக்குக் கொண்டு வந்து, மாநில சுயாட்சியைத் தந்துவிடும் என்கின்ற அந்த அவசரமான நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வர வில்லை. இந்தியாவிலே தோன்ற இருக்கின்ற ஜனநாயகப் புரட்சியினுடைய தோற்றுவாயாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நாளாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் அந்தத் தீர்மானத்தை இங்கே ஆளும் கட்சியின் சார்பாக இந்தப் பேரவையின் முன் வைத்திருக்கிறோம்.

அதிகாரங்கள், கூடுதலாக மாநிலங்களுக்கு வேண்டுமென்று கேட்பதால் மத்திய சர்க்காரிலே குறைவான அதிகாரங்கள் தான் இருக்க வேண்டுமென்று பொருள் அல்ல. மத்திய சர்க்காருக்கு அதனுடைய வலிவு காக்கப்படுவதற்கான அதிகாரங்கள் அங்கே இருக்க வேண்டுமென்பதும், மாநில சர்க்கார்களுக்கு அந்த மாநிலங்களின் வளம் பெருக்கப்படுவதற்குத் தேவையான அதிகாரங்

கள் இருக்கப்பட வேண்டுமென்பதுதான் மாநில சுயாட்சியினுடைய நோக்கம் என்பதை நான் தொடக்கத்திலேயே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இருக்கின்ற அதிகாரங்களை என்ன பயன்படுத்திச் சாதித்து விட்டீர்கள் என்று கேள்விக்குப் பதிலாகத்தான், இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற பல மாநிலங்களுக்கு உணவு தானியங்களை நாம் வழங்கி அவர்களுடைய பசியை—முழுமையாக இல்லாவிட்டாலும் — ஓரளவு குறைக்கின்ற அளவுக்கு கடந்த 5,6, ஆண்டுக் காலத்தில் பசுமைப் புரட்சி மூலமாக, உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்று, மற்ற மாநிலங்களுக்கும் வழங்கு கின்ற அந்தப் பெருமையை உடைத்ததாகத் தமிழக அரசு விளங்கி வருகிறது. அது, இருக்கின்ற அதிகாரங்களை (மாக்சிமம்) — அதாவது அதிகப் பட்சம் நாம் பயன்படுத்தியதன் விளைவு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இருக்கின்ற அதிகாரத்தைப் பயன் படுத்தியதன் கூறுதான் பி.யு.சி வரையிலே இலவசக் கல்வி என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி அதை நடைமுறைக்குக் கொண்டுவந்ததாகும். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்திய தன் விளைவுதான் 103 கல்லூரிகளாக 1967-க்கு முன்பு இருந்ததை இன்றைக்கு 178 கல்லூரிகளாக வளரச் செய்திருப்பது, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் விளைவுதான்.

இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியதன் விளைவுதான் குடியிருப்புக்கான ஏழை எளிய மக்களுக்கான வீட்டுமனைப் பட்டாக் கள் 4,50,000-க்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும், நிலப் பட்டாக்கள் 3,30,000-க்கு மேற்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும் இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத் தியதன் விளைவுதான்.

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு, மனுநீதித் திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தைத் தமிழகத்திலே அறிமுகப் படுத்தி; மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து, அவர்களுடைய குறைகளை அறிந்து, உடனுக்குடன் அந்தக் குறைகளைத் தீர்த்து வைக்கும் இந்தத் திட்டம், தமிழ்நாட்டைத் தவிர, திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தவிர வேறு எந்த அரசிலும் இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதை இங்குப் பெருமையோடு சொல்லிக் கொள்ளுவேன். இது, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன் படுத்தியதால் வந்த விளைவு.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கும் சட்டம்—வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு முற்போக்கான சட்டம் செய்யப்படவில்லை என்ற நேரத்தில், இங்கே அந்தச் சட்டம் செய்யப்பட்டு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் (மனை) சொந்தமாக்கப்பட்டிருக்கின்றன என்றால், அது இருக்கின்ற அதி காரத்தைக் கொண்டு செய்யப்பட்டதுதான்.

நிலச் சீர்திருத்தம், இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டு செய்யப்பட்டதுதான். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூட்டிய முதலமைச்சர்களுடைய மாநாட்டில், அவர்கள் அந்த மாநாட்டில்

எதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக ஒரு வரைவுக் குறிப்பையே எங்களுக்கு அனுப்பினார்கள். அந்த வரைவுக் குறிப்பில், காங்கிரஸ் கட்சியால் தயாரிக்கப்பட்ட வரைவுக் குறிப்பு என்று அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். நான் தமிழக அரசின் சார்பாகச் சொன்னேன்: 'காங்கிரஸ் கட்சியினுடைய வரைவுக் குறிப்பை அங்கே நாங்கள் ஆராயத் தயாராக இல்லை ; உங்களுடைய கட்சி உங்களுக்கு வரைவுக் குறிப்பு தந்து, அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு, மத்திய சர்க்காரின் பரிந்துரைகள் இருக்குமானால் அதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்' என்று கூறி, அதற்குப் பிறகு மத்திய அரசு பரிந்துரைத்த குறிப்பின்படி விவாதிக்கப்படுவதற்கு அழைக்கப்பட்ட போது, அந்த நேரத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற உச்ச வரம்பு கொண்டு வர வேண்டுமென்பது வரைவுக் குறிப்பில் ஒரு முக்கியமான அம்சம். நான் அங்கே சொன்ன பதில் : 'இது, ஏற்கெனவே எங்கள் தமிழ் நாட்டில் 7, 8 மாதங்களுக்கு முன்பே அமல் படுத்தப்பட்ட சட்டமாகும் என்று எடுத்துச் சொல்லுகின்ற அளவுக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லா மாநிலங்களையும் முந்திக் கொண்டு நாங்கள் செய்து முடித்திருக்கின்றோம்!

குடிசை மாற்று வாரியமானாலும், இன்றைக்கு மற்ற மாநிலங்களிலே இருந்து வந்து பார்த்துப் பாராட்டுகின்ற அளவுக்கும், மைசூர் மாநிலத்திலுள்ள சட்டப் பேரவையிலே பாராட்டிப் பேசுகின்ற அளவுக்கும், மற்ற மாநிலத்தினுடைய அமைச்சர்கள், இங்கே இருக்கின்ற அமைச்சர்களை, வாரியத்தினுடைய தலைவர்களை அழைத்து, விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, இந்தியாவுக்கே வழிகாட்டியாக அறிமுகம் செய்கின்ற குடிசை மாற்று வாரியம் ஆனாலும், குடிநீர் வடிகால் வாரியம் ஆனாலும், மின்சார வசதி செய்யும் திட்டம் இவைகள்—இந்தியாவிலேயே இன்றைக்கு மூன்றில் ஒரு பங்கு பம்பு செட்டுகள், இந்தியா முழுவதும் 20 இலட்சம் பம்பு செட்டு என்றால் அதிலே மூன்றில் ஒரு பங்கு — 6 இலட்சப்

பம்பு செட்டுகள் : இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தந்திருக்கிற ஒரே ஒரு அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதையும் அது இந்தியாவிலே மற்ற மாநிலங்களுக்கு அறைகூவல் விடுகின்ற அளவுக்கு, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்த காரியம் என்பதையும், பின் தங்கியோருக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் 49 சதவிகிதம் — அதற்கு மேலே போக அரசியல் சட்டம் இடம் தராத காரணத்தால், வேலை வாய்ப்பு, கல்லூரியில் சேருதல் போன்றவைகளுக்காக 49 சதவிகிதம் வரையிலே இன்றைக்கு அவர்களது விகிதாசாரத்தை உயர்த்தியிருப்பதும்—இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தியதாகும்! இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, ஏன் உலகத்தில் கூட ஓரிரு நாடுகளில்தான் இருக்க முடியும் என்று கூறுகின்ற அளவுக்கு, ஒரு காலத்திலே தேர்தல் பிரகடனத்தில் முஜிபூர் ரகுமான் வெளியிட்டு, அதை இப்போது ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றினார்களோ இல்லையோ எங்களுக்குத் தெரியாது — ஆனால் தமிழ்நாட்டிலே போக்குவரத்துத் தொழிலாளர் இடத்திலே அந்த அருமையான திட்டத்தை நாம் தேர்தல் பிரகடனத்திதிலே வெளியிடாமலே அந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றோம். தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு, முதலீட்டிலே பங்கு, என்கின்ற உலகிலேயே மிகப் பெரிய சாதனையை இங்கே நாம் செய்து காட்டியிருக்கின்றோம். தொழிலாளிகளுக்கு ஓய்வு ஊதியம் என்கின்ற திட்டம், அரசுத் துறையிலேயுள்ள தொழிலாளிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 35 ஆயிரம் பேர் பலன் அடைகின்ற அளவுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் தொழிலாளர்களுக்கான ஓய்வு ஊதியம் அறிமுகப்படுத்தப் படாத நேரத்திலே, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தை நாம் செய்திருக்கின்றோம். அரசு அலுவலாளர்களுக்குக் குடும்ப நலத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை ; நம்முடைய மாநிலத்திலேதான்! 10 ரூபாயை ஒருவருடைய ஊதியத்தில் பிடித்துக் கொண்டு, இடையில் திடீரென்று காலமாவாரானால் அவருடைய குடும்பத்தாருக்கு 10,000 ரூபாய் அளிக்கப்பட வேண்டுமென்ற திட்டம் — அதை அறிமுகப்படுத்தி 4,5, மாதங்கள் ஆகின்றன. இது வரையிலே 30 அலுவலாளர்கள்—அவர்களுடைய குடும்பத்தார்கள் 10 ஆயிரம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள் என்றால், இது அந்த அலுவலாளர்களின் குடும்ப நலத்திற்கு எவ்வளவு தேவையான திட்டம் என்பதையும், இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட திட்டம் என்பதையும் இந்த மாமன்றம் நன்றாக அறியும். இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் நம்முடைய சக்திக்கேற்ற அளவுக்கு, நம்முடைய அதிகாரத்கேற்ற அளவுக்கு, தொழில் வளர்ச்சியை இந்த மாநிலத்திலே நாம் செய்து காட்டியிருக்கின்றோம். சரி, இன்னும் செய்ய வேண்டிய சாதனைகளுக்கு அரசியல் சட்டத்தினுடைய குறுக்கீடு என்ன? இந்தக் கேள்வி எழுந்தது. அந்தக் கேள்விக்கு நான் தருகின்ற பதில்தான் இதே விவாதத்தில் பேசும்போது திரு கே. டி.கே. தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். 'கேரள மாநிலத்தில் தோட்டங்களையெல்லாம் அரசுடைமையாக்க வேண்டுமென்ற அவசரச் சட்டத்தை இன்றளவு மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ஒரு சம தர்மத் திட்டம் அங்கே முடங்கிப் போய்க் கிடக்கிறது' என்ற கருத்துப்பட ஒரு குறிப்பை எடுத்துச் சொன்னார்கள்.

அதைப் போலத்தான் 1969-ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் என்கின்ற ஒரு சட்டத்தை நாம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றினோம். ஆனால், அந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ''உச்ச நீதிமன்றம்'' அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்ற தீர்ப்பை வழங்கியது. இது போன்ற புரட்சிகரமான திட்டங்கள் செல்லுபடியாக வேண்டுமேயானால், அது அரசியல் சட்டத்தில் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டாக வேண்டும். 9-வது அட்டவணையிலே இந்தச் சட்டத்தைச் சேர்த்து 31-ஏ பிரிவின் கீழ் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று 26—2—72, 2 ஆண்டுகளுக்கு முன்புதான் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினேன். பல முறை மத்திய அமைச்சர்களைச் சந்தித்தபோது எல்லாம் இதைப் பற்றி விளக்கம் எடுத்துச் சொன்னேன். 24—11—73-லே கூட பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இது வரையிலே சாதகமான முடிவு எதுவும் மத்திய சர்க்காரிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை. இது 9-வது அட்டவணையிலே சேர்க்கப்படாத காரணத்தினால் யார் வேண்டுமானாலும் இது போன்ற புரட்சிகரமான சட்டங்களை எதிர்த்து உச்சநீதி மன்றத்திற்குச் செல்லலாம் என்கின்ற வழி வகையிருக்கிறது. அதைச் சேர்த்து விடுங்கள் என்று நம்முடைய அரசு விடுத்த கோரிக்கை சேர்க்கப்படாததால், ஒரு சமதர்மத் திட்டம் இன்றைக்கு முடங்கிக் கிடக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன்.

'73—'74-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 'மால்கோ' தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று அறிவித்தோம். அதை அறிவித்தவுடன் பிப்ரவரி மாதம் சட்ட நகலை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப் பெற்றுக் கொண்டதாக 2—3—'73-ல் நமக்குக் கடிதமும் வந்தது. ஆனால், இது வரையில் அந்தப் பிரச்சினை என்னவாயிற்று? முடியுமா, முடியாதா? என்கின்ற எந்தத் திட்டவட்டமான பதிலும் இல்லை. இதுவும் ஒரு சமதர்மத் திட்டம்.

1972-ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி இரவு, விடுதலை வெள்ளி விழாக் கொண்டாடப்பட்ட பொழுது, இந்த மன்றத்திலேதான் அறிவித்தேன், நான் ஏற்கெனவே சொன்னேனே, தொழிலாளிகளுக்கு நிர்வாகத்திலே பொறுப்பு, முதலீட்டில் பங்கு என்கின்ற அந்தத் திட்டம். அதற்கான விதிமுறைகளையெல்லாம் வகுத்து, இந்தச் சட்டப்பேரவையிலே, அது பற்றி விளக்கங்கள் தந்து, அது பற்றிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, இதை மாமன்றம் வரவேற்று, இன்றைக்கு அந்தச் சட்டம் ஒரு சிறிய காரியத்திற்காக மத்திய சர்க்காருடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கம்பெனிச் சட்டம் இதற்காகத் திருத்தப்பட வேண்டும். இந்தச் சட்டத்தை நாம் அங்கே அனுப்பி வைத்தபோது பிரதமர் அவர்கள் எனக்கு ஒரு பதிலே கூட எழுதினார்கள்; அதிலே சொன்னார்கள் :

The suggestion for the creation of a new class of shares called the "Employees Dividend Guaranteed Shares' is an interesting one. I am making the Ministries concerned to examine the question carefully". சொல்லிக் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேலாகிறது. இது நல்ல திட்டம் என்று பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், அதற்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு சமதர்மத் திட்டம் தொழிலாளர்களுக்கான திட்டம், பிரதமருடைய பாராட்டைப் பெற்றும் கூட, அனுமதிக்காகத் தவம் கிடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசியல் சட்டத்தில் நாம் சாதனைகள் செய்ய முடியாமல் எப்படி எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதற்கு இதை ஒரு எடுத்துக்காட்டாகச் சொன்னேன். உணவு உற்பத்தியிலே பிரதான் இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பது உரம். அதுபற்றி இந்த மாமன்றத்திலே ....

திரு எச். வி. ஹண்டே : இந்த விஷயத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த ஷரத்தை, நிர்மாணச் சட்டத்தில் எந்த முறையில், எப்படித் திருத்தினால் இந்த எம்ப்ளாயர்ஸ் ஸ்கீம் நடைமுறைக்குக் கொண்டு வர முடியும் என்று ஒரு தெளிவான கருத்தை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினார்களா? அப்படி என்றால் அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன் ....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதாவது டிவிடெண்ட் எடுக்கப்பட்ட பிறகுதான்—தொழிலாளிகளுக்குத் தரப்பட்ட டிவிடெண்டிற்குப் பிறகுதான் வருமான வரி இருக்க வேண்டும். வருமான வரி கொடுத்தால் டிவிடெண்ட் எடுக்க முடியாமல் போகும். அதற்கேற்ப எங்களுக்குக் கம்பெனிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று கேட்டோம். உரம் பற்றி இந்த மாமன்றத்திலே நிறையப் பேசப்பட்டிருக்கின்றது.

திரு எச். வி. ஹண்டே : Sir, for the last few days we have been discussing. This is the last day and the Chief Minister is replying. After that we won't get the opportunty for months together. I want further clarifications. What exactly does the Chief Minister recommend? I want to know from the Chief Minister, what is the specific Recommendation (amendment) he recommended? He wanted to put forth a scheme, we all accepted. He must come forward to this House, clearly telling us, what was the article that he wanted to be amended? In what way, he wants it to be amended? What was the word that he had recommended? It is his business to tell the House. And then I am asking in a good spirit only, not to simply disturb the Chief Minister. In a good right spirit I am asking. What was his specific recommendation ? He says என்னாலே செயலாற்ற முடியாத அளவுக்கு அங்கு செயல் பட்டது—அங்கே நடந்தது What is his recommendation ? Come on ! Let us know it!

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கம்பெனிச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டோம். எப்படிக் கடன்கள் மீதுள்ள வட்டியை (நிறுவன வருமான வரி) கார்ப்பரேஷன் டாக்ஸுக்கு முன்பு அனுமதிக்கிறோமோ, அதைப் போலவே தொழிலாளிகளுக்குச் சிறப்புப் பங்கு மீதான இலாப விகிதத்தையும்

(டிவிடெண்ட்) வருமான வரி அளிப்பதற்கு முன்பாகவே அனும திக்கப்பட வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கை. அதற்கேற்ப கம்பெனிச் சட்டத்தை மாற்றியமையுங்கள் என்று கேட்டோம். அதற்கு ஒரு கடிதம் எழுதினுர்கள். ஆலோசிப்பதாகச் சொன்னுர் கள். பிறகு எந்த விதமான பதிலும் இல்லே. பல முறை நாம் நினேவுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிருேம், நேரிலும் பேசியிருக்கி ருேம்.

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : ஒவ்வொரு பாயிண்டும் விவாதத்திற்குரியது. ஒவ்வொரு எடுத்துக் காட்டிற்கும் விளக்கம் கேட்டால் இந்த விவாதம் முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பஸ் கம்பெனிக்குக் கேட்டீர் கள். சரி. நாலேக்குத் தனி மனிதன் கார்ப்பரேஷனிடமிருந்து அங்கே வந்து போனஸ் கொடுப்பது பற்றிக் கேட்டால், அதை யெல்லாம் பார்த்துத்தான் பதில் அனுப்ப வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி** : அதையெல்லாம் பார்த்துத்தான் ஒரேயடியாக மாநில சுயாட்சி கேட்டுத் தொலேக் கிருேம் ....!

உணவு உற்பத்தியில் பிரதான தொடர்பு கொண்டது உரம்... இருப்புகளேக் கேட்கவும் — விநியோகத்தில் தவறு நடந்தால் உரத்தைப் பறிமுதல் செய்யவோ, நாம் கார்டுகள் கொடுத்து விவ சாயிகளுக்கு விநியோகம் செய்யவோ, நமக்கு அதிகாரம் தேவை என்றும் — உரத் தொழிற்சாலேகளின் இருப்புகளேச் சோதனேயிடு கிற அதிகாரம் தேவையென்றும் பல முறை கேட்டிருக்கின்ருேம். பலன் இல்லே. அதன் காரணமாக எவ்வளவு தவறுகள் தனியார் விநியோகத்தால் நடைபெற்றன என்பதை இந்த மாமன்றத்தி லேயே எடுத்துச் சொல்லியிருக்கின்ருேம்.

சிறு தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு (கேப்பை) போன்ற சிறு தானியங்களுக்கு மாநிலத்திற்கு மாநிலம் உள்ள தடை தளர்த்தப்பட்டது. யாரைக் கேட்டுக்கொண்டு? நம் முடைய மாநிலத்தைக் கலந்து கொண்டு செய்யப்பட்டதா? இல்லே....



இந்த மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குச் சிறு தானியங்களைக் கொண்டு செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப்பாட்டை — நம்முடைய மாநிலத்தைக் கலந்து கொள்ளாமலே — நமக்குச் சொல்லாமலே அவர்களே தளர்த்தி விட்டு, எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் கம்பு, கேழ்வரகு (கேப்பை) போன்ற தானியங்கள் செல்லலாம் — என்கின்ற ஒரு அறிவிப்பை — நம்மைக் கலந்து கொள்ளாமலேயே செய்துவிட்டார்கள்.

அதன் காரணமாக இன்றைக்கு அந்தச் சிறு தானியங்களின் விலை 50 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்திருக்கிறது. அப்படித் தளர்த்தியது தவறு என்று எதிர்த்தோம். கடிதம் எழுதினோம். அமைச்சர்கள் நேரிலே சென்று தெரிவித்தார்கள் — அதிகாரிகள் டெல்லிக்குப் பல முறை படையெடுத்தார்கள். சரி, ''கட்டுப்பாட்டைத் தான் தளர்த்தி விட்டீர்கள் — பரவாயில்லை — தயவு செய்து லெவி முறைக்காவது எங்களுக்கு அனுமதி கொடுங்கள்'' என்று கேட்டோம் — அதையும் மறுத்துவிட்டார்கள்.

இது, அடுத்து, இந்தச் சிறு தானியங்களிலிருந்து நெல், அரிசி போன்றவற்றுக்குள்ள மாநிலக் கட்டுப்பாடு தளர்த்தப்படுவதற்கு அடையாளமாக அமையக்கூடும் என்கின்ற அச்சம் நம்மைப் பிடித்து இன்றைக்கு வாட்டிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சிறு தானியங்களுக்கான கட்டுப்பாட்டைத்தளர்த்தியதற்கு — இந்த அரசைக் கலந்து கொள்ளாமல் மத்திய அரசு தளர்த்திவிட்டதன் காரணமாக இன்றைக்கு மாநிலத்தில் பல பகுதிகளில்—பல மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கலை — சங்கடங்களை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள் என்று நான் கருதுகிறேன்.

எண்ணெய் விலையை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தலாம் என்றுதான் வேர்க்கடலைக்கு லெவி வேண்டுமென்றும், வியாபாரத்திற்கு லைசென்சு தரப்பட வேண்டும் என்றும், அதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்றும் அனுமதி கேட்டோம். 12—4—73-ல் இருந்து கேட்டோம். கேட்டோம், இதுவரையில் அந்த அனுமதியும் தரப்படவில்லை.

மண்ணெண்ணெய் — மண்ணெண்ணெய் இல்லாத சங்கடத்தால் எவ்வளவு பேர் அந்தத் தட்டுப்பாட்டின் காரணத்தினால் பரிதவித்தார்கள் என்பதை நாம் அறிவோம் — இந்த அதிகாரங்கள் பொது மக்களோடு எவ்வளவு தொடர்பு கொண்டவை—எவ்வளவு தொடர்பு கொண்ட பிரச்சினைகளில் நாம் இன்றைக்குச் சிக்கித் தவிக்கிறோம் என்பதை முதலில் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இவைகளையெல்லாம் சொல்லுகின்றேன்.

மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமலேயே இதுவரை எண்ணெய்க் கம்பெனிகளில் இருந்து, எண்ணெய் டெப்போக்களுக்கு மண்ணெண்ணெய் அனுப்பும்படி உத்தரவிடுகின்ற அதிகாரம் இது வரையில் மாநிலத்திற்கு இருந்தது. எந்தக் கம்பெனியி

லிருந்தும், எந்த ஜில்லாவிலிருக்கிற டெப்போவுக்கும் மண்ணெண்ணெய் அனுப்பலாம் என்று உத்தரவிடுகின்ற அதிகாரம் இது வரையிலே மாநிலத்திற்கு இருந்தது. ஆனால், திடீரென்று அதை 1972-லே மாற்றி, அந்த அதிகாரத்தை மத்திய அரசினர் எடுத்துக் கொண்டார்கள். அதனால் ஏற்படுகின்ற கஷ்டம் என்ன? எண்ணெய்த் தட்டுப்பாடு எங்கே ஏற்படுகிறது என்று நமக்குத் தெரியும். உடனடியாக அந்தக் கம்பெனிக்கு மாநில அரசு தொடர்பு கொள்வது சுலபம். திருச்சிக்கு அனுப்புங்கள் — தஞ்சைக்கு அனுப்புங்கள் — கோவைக்கு அனுப்புங்கள் என்று சொல்லிவிடுகின்ற அந்தத் தொலைவு இல்லாத இடத்தில் நாம் இருக்கின்றோம். ஆனால் மத்திய சர்க்கார் அந்த அதிகாரத்தையும் பறித்து வைத்துக் கொண்டார்கள்.

அந்த அதிகாரத்தை மீண்டும் மாநிலத்திற்குத் தாருங்கள் என்று கேட்டோம். 26—4—73-ல் கடிதம் எழுதினோம்—நேரிலே கேட்டோம் — தந்திகள் கொடுத்தோம். தந்தி கொடுத்த பிறகு ஒரு பதில் தந்தி கொடுத்தார்கள் ! என்ன தந்தி தெரியுமா?

'எண்ணெய்க் கம்பெனியில் இருந்து நேராக டெப்போக்களுக்கு அனுப்புகிற அதிகாரம் உங்களுக்குத் தேவை என்று கேட்கிறீர்களா?' என்று ஒரு கேள்வியைத் தந்தியாக்கினார்கள். ''ஆமாம்'' என்று பதில் தந்தி கொடுத்தோம். அதற்குப் பிறகு பதிலே கிடையாது!

ஆக, மண்ணெண்ணெய் போன்ற பொது மக்களோடு தொடர்பு கொண்ட இந்த அத்தியாவசியப் பண்டங்களுக்குக் கூட —நம்மிடத்தில் அதிகாரம் இல்லாத காரணத்தினால் — இருக்கின்ற அதிகாரங்களும் பறித்துக் கொள்ளப்படுகின்ற காரணத்தினால் ஏற்படுகின்ற சங்கடங்களுக்கு இதைச் சொன்னேன்.

கரை போட்ட வேட்டி — வண்ணச் சேலைகள் ஆகியவற்றை நெய்வது கைத்தறிகளுக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்றும் — கைத்தறியாளர்களுக்குத் தங்கு தடையின்றி நூல் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்றும் — இன்றல்ல 1952-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ஆம் நாள் — டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது — இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். கிட்டத் தட்ட 20 ஆண்டுக் காலம் ஓடிவிட்டது. அந்தத் தீர்மானத்தினுடைய கதி என்ன?

கிருஷ்ணா ராவ் தொழில் துறை அமைச்சராக, தொழிலாளர் நல அமைச்சராக இருந்த காலத்தில் — 1952-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் — கரைபோட்ட வேட்டிகள் — வண்ணச் சேலைகள் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் —அந்தத் தீர்மானம் 20 ஆண்டுக் காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. நாமும் பல முறை இந்த அவையில் பேசியிருக்கிறோம் —எடுத்துச் சொல்லியிருக்கிறோம்—கவனிக்கப்படவில்லை.

இந்த அரசு, கைத்தறியாளர்களது துயரத்தைப் போக்க —பருத்தி நூல்—நெட்டிழைப் பருத்தி நூல்—பட்டு ஆகியவற்றின்

விநியோக அதிகாரம், விலையைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் —இதைக் கேட்டுப் பல முறை மத்திய சர்க்காரிடத்தில் பேசியிருக்கிறோம் — எழுதியிருக்கிறோம்—பலன் இல்லை. மாறாக, இருபது இலட்சம் கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத்தான் நாம் கண்டு வருகின்றோம் — அதிகாரம் இல்லாத காரணத்தினால் நாம் கேட்கின்ற அதிகாரத்தை — 1952 முதல் கொடுக்காத காரணத்தினால் இந்த அவல நிலைக்கு இந்த மாநிலம்—மாநிலத்தினுடைய கைத்தறியாளர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் உற்பத்தியாகின்ற நூல்களையெல்லாம் வெளி மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் அனுப்புகிற காரணத்தினால் கேரளாவில் இருக்கிற கைத்தறியாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் டி.ஐ.ஆர். சட்டத்தின் கீழ் அதை நிறுத்தி விட்டார்கள். அதேபோல், தேங்காயும், தேங்காய் எண்ணெய்யும் அந்த மாநிலத்தை விட்டு வெளியே போகக் கூடாது என்று சட்டம் போட்டார்கள்.

நம்முடைய மாநிலத்திலும் மதி அவர்கள் முன்னாள் உணவு அமைச்சராக இருந்தபோது ராஜஸ்தானில் இருந்து பருப்பு வரவில்லை என்றவுடன் வெல்லத்தை நிறுத்தினார்கள். அப்படி நீங்கள் உத்தரவு போடுங்கள். மத்திய சர்க்கார் என்ன செய்கிறது என்று பார்ப்போம். பிறகு வேண்டுமானால் நாம் உட்கார்ந்து பேசுவோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : உர விநியோகம் சம்பந்தமாக ஏற்கெனவே சொன்னார்கள். நான் அந்த நேரம் தலையிடக் கூடாது என்று நினைத்தேன். உர விநியோகத்திலே அது இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு ஏதாவது மறுப்பு மத்திய சர்க்கார் தெரிவித்ததா? அல்லது இன்ஸ்பெக்ஷனுக்காக எத்தனை இன்ஸ்பெக்டர்களைப் போட்டாலும்கூட அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்களா? இன்ஸ்பெக்ஷன் கோளாறு காரணத்தினால் இந்த விநியோகத்திலே ஏதாவது தவறு ஏற்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : உரத் தொழிற்சாலைக்குள் நுழைந்து அதனுடைய இருப்புகளைக் கணக்கெடுக்க நமக்கு அவர்கள் அதிகாரம் அளிக்கவில்லை. தவறாக விநியோகம் செய்யப்படுமேயானால், அப்படிப்பட்ட இடத்தில் உரத்தைப் பறிமுதல் செய்து, நாம் யாருக்குக் கார்டு வழங்கியிருக்கிறோமோ அந்த விவசாயிகளுக்கு வழங்குவதற்குரிய அதிகாரத்தைக் கேட்டோம். இன்னும் அவர்களிடமிருந்து பதில் இல்லை—மறுத்து விட்டார்கள்.

கேரளத்தைப் பற்றிச் சொன்னார்கள், நண்பர் செழியன், அவர்கள்! இங்கு நண்பர் மதி அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது போட்ட தடையைச் சொன்னார்கள். அது நீதிமன்றத்திற்குச் சென்று அந்த உத்தரவு செல்லாததாக ஆகிவிட்டது. மத்திய சர்க்காரோடு நாம் இப்படி அடிக்கடி சச்சரவுகள் எழுப்புவதில் எந்தவிதமான தடையில்லை. ஆனால் தடை செய்யப்பட்ட பத்து நாட்களுக்குள் நீதி மன்றத்திற்குச் சென்று அந்தத் தடைகளை நீக்க நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்றைக்கு இருக்கிற அரசியல்

சட்டத்தின் அடிப்படையில் யாரும் பெற்றுவிட முடியும். அதற்காகத்தான் இவைகளை மாற்ற வேண்டும், மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கின்றோம்.

இவ்வளவு — இருக்கிற அதிகாரங்களை வைத்தும் இல்லாத அதிகாரங்களுக்காக வாதாடியும் — இந்தச் சூழ்நிலையில் மாநில மக்களுக்காக இவ்வளவு நற்காரியங்களை நாம் செய்து வருகிறோம் என்றாலும் நாம் வருந்துகின்ற அளவுக்கு விலைவாசி கட்டுப்படுத்தப்பட முடியாமல் ஏறிக் கொண்டிருக்கின்றது.

இதற்கு யார் காரணம்? நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்களே — ஏ. ஆர். சி. ரிப்போர்ட்டை — அந்த ஏ. ஆர். சி. ரிப்போர்ட்டில் 18-ஆம் பக்கத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

In fact, it is the policies of the Central Government that are responsible for inflation and increases in prices and the cost of living.

மத்திய சர்க்கார்தான் இதற்குக் காரணம் என்பதை ஏ.ஆர். சி. ரிப்போர்ட் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றது.

ஆகவே, ‘மத்திய சர்க்கார் மீது பழி போடாதே!’, ‘மத்திய சர்க்காரைக் குறை சொல்லாதே’ என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல என்பதற்கான தெளிவான விளக்கத்தை ஏ.ஆர். சி. அறிக்கையே நமக்குத் தந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்டினேன்.

அதிக அதிகாரம் கேட்பது இங்கே அமர்ந்திருக்கிற இந்த அமைச்சர் பெரு மக்கள் அந்த அதிகாரத்தினை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா?

அல்லது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்த அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவா?

குடிநீர் வடிகால் வாரியம்
TAMIL NADU
WATER SUPPLY AND
DRAINAGE BOARD
நீரின்றி அமையாது உலகு

அல்ல! அதிகாரம் எங்களுக்கு அல்ல. மாநிலத்திற்குக் கேட்கிறோம். அது புரிய வேண்டும் என்பதற்காகத்தான் 'மாநில சுயாட்சி' என்று சொல்லுகிறோம்.

அது மேலும் தெளிவாகப் புரிய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி என்கிறோம்.

அது அழுத்தந் திருத்தமாகப் புரிய வேண்டும் என்பதற்காகத் தான் மத்தியிலே கூட்டாட்சி என்று சொல்லுகின்றோம்.

மத்தியிலே கூட்டாட்சி — மாநிலத்திலே சுயாட்சி என்று கூறுகிற நேரத்திலே அங்கு பிரிவினைக்கு எள்ளளவும் இடம் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் இங்கே நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியி னுடைய உறுப்பினர்கள் — அதன் தலைவர்கள் பேசுகின்ற நேரத் திலும் — வேறு ஓரிருவர் பேசுகின்ற நேரத்திலும் — 'உங்க ளுடைய வரலாறு அப்படி இருக்கிறதே! ஆகவே உங்களுடைய வரலாற்றுப் பின்னணியைப் பார்த்து நாங்கள் சந்தேகப் படு கிறோம்'' என்றார்கள். ''நீங்கள் ஏற்கெனவே திராவிட நாடு கேட்டவர்கள். பிரிவினை கேட்டவர்கள் — ஆகவே உங்களுடைய வரலாற்றை நாங்கள் பின்னணியாகக் கொண்டு உங்களைச் சந்தே கிக்கிறோம்'' என்று சொன்னார்கள்.

அப்படியானால் அந்த வரலாற்றுக்குரியவர்கள் இப்பொழுது யார், யார் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதெல்லாம் கூடப் பிரச்சினை. இங்கே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் 1937-ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலம் வரையிலும் காங்கிரஸ் கட்சியிலே இருந்து கொடி தூக்கி விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்தான். என் பின்னாலே அமர்ந்திருக்கின்ற அரங்கண்ணல் அவர்கள் காங்கி ரஸ் கட்சிப் போராட்டத்திலே — நான் மாணவனாக இருந்த அந்தக் காலத்திலேயே ஈடுபட்டிருந்தார்! திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் நானும் அவரும் ஒன்றாகப் படித்துக் கொண்டிருந்த நேரத்திலேயே — காங்கிரஸ் இயக்கத்திலே தீவிரமாக இருந்தவர் தான்! அதைப் போலவே செட்டி நாடு ராஜா அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தவர். காங்கிரஸில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந் தவர். இப்பொழுதும் பெற்றிருக்கிறவர் என்று கருதுகிறேன். ஆகவே திரு. டி. டி. கே. அவர்களும், ஜஸ்டிஸ் கட்சியின் பிரதான தூண்களில் ஒருவராக இருந்தவர் என்று வர்ணிக்கப்பட்ட திரு ஆர். கே. சண்முகம் செட்டியாரைத்தான் இந்தியா சுதந்திரம் பெற்றதும் மத்திய சர்க்காருடைய நிதியமைச்சராகப் பொறுப் பேற்றுக் கொள்ளும்படி வேண்டி, அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். யாரும் மறந்து விட முடியாது. ஜஸ்டிஸ் கட்சியினுடைய பிரதான தூண்களில் ஒருவர் என்று சிறப்பிக்கப் பட்ட டாக்டர் சுப்பராயன் தான், காங்கிரஸ் அமைச்சரவையிலே ஒரு அமைச்சர் ஆனார்; அதையும் மறந்துவிட முடியாது.... ஆகவே....

திரு. கே. டி. கே. தங்கமணி : டாக்டர் சுப்பராயன் என்றைக்கும் ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்ததில்லை. அவர் முதலமைச்சரானபோது அவர் சுயேச்சையாகத்தான் இருந்தார். அவர் எப்போதுமே அதைத் தெளிவுபடுத்திக் கொண்டு தான் வந்திருக்கிறார். நான், ஜஸ்டிஸ் பார்ட்டியைக் குறைத்துச் சொல்வதற்காக அல்ல; டாக்டர் சுப்பராயனைப் பொறுத்த அளவில் ஜஸ்டிஸ் பார்ட்டியிலே உறுப்பினராகவோ, ஜஸ்டிஸ் பார்ட்டி அமைச்சராகவோ இருக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஜஸ்டிஸ் கட்சியிலே அவர் உறுப்பினராக இல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவாளராகத்தான் இருந்தார். அவர் அமைச்சராக ஆனார்.

சரி, பிரிவினை கேட்காத கட்சிகள் அல்லது பிரிந்து போக வேண்டுமென்று சொல்லாத கட்சிகள், எந்தக் கட்சியாவது இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிறதா? அல்லது தமிழ் நாட்டிலே இருக்கிறதா? அல்லது இந்த அவையிலே இருக்கிறதா? இல்லை. நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1941-ஆம் ஆண்டு வரையில் பாகிஸ்தான் பிரிவினைக்கு எதிர்ப்பாக இருந்தது. 1941-ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யா போரிலே ஈடுபட்டதும் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு, முஸ்லீம் லீக், இந்தியாவில் இரண்டாவது பெரிய வகுப்பைப் பிரதிபலிக்கும் மகத்தான அரசியல் கட்சி என்று பிரகடனப்படுத்தி, பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவு தரப்பட்டது. ஜீ. அதிகாரி என்பார் ''பாகிஸ்தான் அண்ட் நேஷனல் யூனிட்டி'' என்ற ஒரு புத்தகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். ''முஸ்லீம் தேசிய இனம், முழு சுயாட்சி உரிமைகளுடனும், பிரிந்து போகும் உரிமையுடனும் விளங்க வேண்டும்'' — இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். இந்த பாகிஸ்தான் ஆதரவுக் கொள்கை காரணமாகத்தான், காங்கிரஸ் கட்சியிலிருந்து 1945-ஆம் ஆண்டு கம்யூனிஸ்டுகள் விலக்கப்பட வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது என்பதை மறந்திருக்க இயலாது. இதைவிட ஒருபடி அதிகமாகச் சென்று திரு. பி. சுந்தரய்யா, 1946-ஆம் ஆண்டு எழுதிய 'விசால ஆந்திரா' என்கின்ற ஒரு புத்தகத்திலே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கைகளைத் தெளிவாக்கியிருக்கிறார். 'மலையாளிகள், தமிழர்கள், ஆந்திரர்கள் போன்ற தனித் தன்மை படைத்த தேசிய இனங்கள், இயற்கையாகத் தோன்றி வளர்வதற்கு, பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை ஒன்றுபடுத்தியது தடையாகப் போய் விட்டது' என்று அவர் குறைப்படுகிறார். அப்போது ஆந்திரத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் மொழி அடிப்படையில் ஆந்திர மாகாணம் — தனி மாகாணம் வேண்டும் — மொழிவாரி மாகாணம் வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது சுந்தரய்யா எழுதுகின்றார், அந்தப் புத்தகத்தில் .... ''எதற்காக நீங்கள் தனி மாகாணம் மட்டும் கேட்கிறீர்கள்? நீண்ட வரலாறும், தனித்த மொழியும், கலாச்சாரப் பாரம்பரியமும் கொண்ட ஆந்திரா ஏன் தனி நாடாக இருக்கக் கூடாது?'' என்று கேட்டுவிட்டு, ''இத்தகைய கொள்கையை நீங்கள் ஒப்புக் கொண்டால்; பலுசிஸ்தானம், மேற்கு பஞ்சாப், சிந்து, வங்கத்தின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லீம் மக்களுடைய கோரிக்கையை நீங்கள் ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது?'' என்று அவர் அந்தப் புத்தகத்திலே கேட்டிருக்கிறார்.

*1942*, செப்டம்பர் *19*-ஆம் தேதி — அப்போது ஒன்ருக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு ஒரு தீர்மானம் போட்டது. அந்தத் தீர்மானம் *1943*-ஆம் ஆண்டு மே மாதம் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காங்கிரஸ் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. என்ன தீர்மானம்? ''தொடர்பான பூகோள பிராந்தியத்தைத் தாயகமாகக் கொண்ட பொதுவான வரலாற்றுப் பூர்வமான பாரம்பரியம், பொது மொழி, கலாச் சாரம், மனப்பூர்வமான ஒருமைப்பாடு, பொதுவான பொருளாதார வாழ்வு, ஆகியன கொண்ட இந்திய மக்களின் ஒவ்வொரு பிரிவும் தனித் தன்மை கொண்ட தேசிய இனமாகும். அத்தகைய தேசிய இனங்கள், சுதந்திரம் பெற்ற இந்திய யூனியன் அல்லது கூட்டாட்சிக்குள் சுயாட்சி பெற்ற மாநிலங்களாக இருப்பதற்கு உரிமை பெற்றவை. அவை விரும்பினுல் பிரிந்து போகும் உரிமை (The Right to Secede) அவர்களுக்கு உண்டு.'' இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டது. திராவிட முன்னேற்றக் கழகம், 'பிரிவினை வேண்டும் என்று தீர்மானம் போட்டது' குற்றம் என்ருல், அதே குற்றத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியும் செய்திருக்கிறது. ஆகவே, எங்கள் இருவருக்கும் ஒரே வரலாற்றுப் பின்னணி தான்!

**திரு. கே. டி. கே. தங்கமணி** : இந்த *1943*-ஆம் ஆண்டு பம்பாயிலே நடந்த அகில இந்திய மாநாட்டைப் பற்றிச் சொல்கிருர்கள் ; அந்த மாநாட்டினுடைய பின்னணி, நாளைக்குச் சுதந்திரம் வருகின்ற காலத்திலே ஒவ்வொரு மாநிலமும் மொழி அடிப்படையிலே அமைக்கப்பட வேண்டும். அப்படி மாநிலத்தினுடைய அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மாநிலத்தினுடைய தேசிய இனங்கள் என்ருல் என்ன என்று வரையறுத்துத்தான் அங்கு சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய வேறல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி** : நான் இப்போது உங்கள் கொள்கை என்று சொல்லவில்லை. கடந்த கால வரலாற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருேம். நீங்கள் முஸ்லீம் பற்றிச் சொன்னீர்கள், அவர்களுக்குக் கடந்த கால வரலாறு—பிரிந்து போகின்ற வரலாறு. ஆகவே அவர்கள் இதை ஆதரிப்பார்கள் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது சொன்ஞர்கள். அதற்காக ஞாபகப்படுத்துகிறேன். முஸ்லீம்கள் பிரிந்து போவது நியாயம்தான் என்று கம்யூனிஸ்ட் கட்சி 41-லே வாதாடியிருக்கிறது என்பதற்காகச் சொல்லுகின்றேன். அதைப்போல, திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட 'டிஸ்கவரி ஆஃப் இண்டியா' என்ற நூலில் — இதைப் பற்றி நாவலர் அவர்கள் கூட நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள் என்று கருதுகின்றேன் — 'இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு—அதாவது சுதந்திர இந்தியா அமைந்த சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு அதன் பகுதிகளுக்குப் பிரிந்து போகும் உரிமையை முறைப்படி வழங்கலாம்' என்று 'டிஸ்கவரி ஆஃப் இண்டியா' என்ற நூலில் நேரு எழுதினுர். நேரு தனிப்பட்ட கருத்தைச் சொன்ஞர் என்று கூட அல்ல. அவர் அதை எழுதியது —அகமது நகர் கோட்டைச் சிறைச் சாலையில் இருந்து எழுதினுர். அவரைச் சுற்றிப் பல காங்கிரஸ் தலைவர்கள் இருந்தார்கள். அந்தப் புத்தகத்தில் அவர் குறிப்பிடுகிருர் : ''இதை எல்லாரும்

படித்துப் பார்த்தார்கள். சிறைச் சாலையிலிருந்த காங்கிரஸ் தலைவர்கள் அத்தனை பேர்களும் இதைப் படித்துப் பார்த்தார்கள். ஆகவே இதைக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டதாகவே கருத வேண்டும்'' என்று நேரு அந்தப் புத்தகத்தைப்பற்றிக் குறிப்பையும் எழுதுகிறார். ஆகவே முன் வரலாற்றை மட்டும் வைத்துக்கொண்டு இப்பொழுது சொல்கிற எல்லா விஷயங்களுக்கும் தவறான கருத்துக்களைக் கற்பிக்கக் கூடாது.



போர், போர் என்று அலைந்த அசோகன் களம் பல கண்டான், அவனுடைய கட்டாரி பட்டு ஆயிரக் கணக்கானவர் பிணமாயினர். அவனுடைய ரத கஜ துரக பதாதி படைகளின் ஆர்வத்தால், வேகத்தால் சரிந்த சாம்ராஜ்யங்கள் எத்தனையோ? எத்தனை! கலிங்கம் வரை சென்றான் ; கலிங்கத்திலே களங்கண்டான். அங்கே பிணக் குவியல்களைப் பார்த்தான், அதற்குப் பிறகு, நான் இனி மேல் புத்தன்! என்று சொன்னான். உடனே அவனைப் பார்த்து, 'உன்னுடைய பழைய வரலாறு போர் வரலாறு, ஆகவே உன்னை ஒத்துக் கொள்ள மாட்டேன்' என்று அன்றைய இந்தியா சொல்லியிருந்தால் இன்றைக்கு அசோகச் சக்கரம் நம்முடைய கொடியிலே பறந்து கொண்டிருக்காது. இன்றைக்கு அசோகச் சின்னம் நம்முடைய இந்தியாவினுடைய தேசியச் சின்னமாக ஆகியிருக்காது.

வழிப்பறிக் கொள்ளையடித்த ரட்சன் இராமாயணம் பாடும் வால்மீகியானான். அவனை ஒத்துக் கொள்கிறீர்கள்! எங்களை ஒத்துக் கொள்ளக் கூடாதா? ரட்சன் வால்மீகியானானே! அவனை ஒத்துக் கொள்கிறீர்களே.. எங்களை ஒத்துக் கொள்ளக் கூடாதா?

நண்பர் கோவை செழியன் அவர்கள், 'நீங்கள ஆதித்தனாரிடத்திலும் சிலம்புச் செல்வரிடத்திலும் போயும் போயும் இந்தக் கொள்கையைக் கடன் வாங்கியுள்ளீர்களே!' என்றார். அவருக்கு வருத்தம். அவர் தமிழ் தேசியக் கட்சி என்று ஒன்று ஆரம்பித்திருந்தார். அந்தக் கட்சியின் கொள்கை என்னவென்றால், மொழி வழித் தேசியத் தன்னாட்சிகள், சம அந்தஸ்தோடு விரும்பி '(விரும்பினால்

தான்)' இணைந்த இந்தியக் கூட்டமைப்பில் பிரிந்து போகும் உரிமையோடு கூடிய தமிழ்த் தேசிய தன்னாட்சி காண்பதாகும்! "பிரதான தலைவராக ஈ.வி.கே. சம்பத்தும், அடுத்த தலைவராக கோவைச் செழியனும் இருந்த தமிழ் தேசியக் கட்சியின் கொள்கை இது. நாம் ஆதித்தனாரிடத்தில் கடன் வாங்கினோமா, ம.பொ.சி.யிடம் கடன் வாங்கினோமா என்பதை விட, செழியன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம், பரவாயில்லை, நாம் மறந்துவிட்டாலும் அதை அவர்கள் எடுத்து நம்மிடத்திலே கடன் வாங்கி இன்றைக்குப் போட்டுக் கொண்டார்கள்!'' என்று நினைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு திருத்தம். ''பிரிந்து போகும் உரிமையோடு"என்பதை மாத்திரம் நாங்கள் எடுத்து விட்டோம். நண்பர் கோவை செழியன் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் கோவைச்செழியன் அவர்கள் சொன்னார்கள்:"ம.பொ.சி. யிடமிருந்து இந்தக் கொள்கையை வாங்க வேண்டுமா? ஆகவே தான் மாநில சுயாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொன்னார்கள். திரு. ம. பொ. சி. அவர்கள் நடத்திய ''மாநில சுயாட்சி'' கருத்தரங்கிற்கு அண்ணா அவர்கள் சென்றார்கள்; அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்கள், என்னுடைய அன்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பெரியவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், இவர்களெல்லாம் அந்த மாநாட்டிற்குச் சென்றார்கள். அந்த மாநாடு 21—7—'68-ல் நடைபெற்றது. நம்மையெல்லாம் தவிக்கவிட்டு அண்ணா அவர்கள் பிரிவதற்கு 6 திங்களுக்கு முன்பு நடந்த மாநாடு, அந்த மாநாட்டுச் செய்திகள் செய்திப் பத்திரிகைகளிலும் வந்தன. அந்தப் பேச்சுக்கள் தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும் வெளி வந்தன. முழுப் பேச்சு 'முரசொலி'யில் 21—7—'68-ல் வந்தது. நான் அந்தப் பேச்சைப் படிப்பது மற்றவர்களுக்குப் பயன்படுமோ, இல்லையோ, என்னுடைய அன்புக்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்குப் பயன்படும் என்ற எண்ணத்தோடு சொல்கிறேன். திரு. எட்மண்ட் அவர்களைப் போல் எரிச்சல் கக்குகின்ற வார்த்தைகளை வீசுவதற்கு என்னால் இயலாது; பழக்கமும் இல்லை. டாக்டர் ஹண்டே சொன்னதைப் போல் நான் சோர்ந்து போய் விட்ட காரணத்தால், அந்த வார்த்தைகள் வராமலிருக்கலாம். ஆனால், அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள், என்ன பேசினார்கள் என்பதை மட்டும் நான் படித்துக் காட்ட விரும்புகின்றேன். சிலம்புச் செல்வர் நடத்திய மாநாடு—மாநில சுயாட்சி மாநாடு.

''மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது காமராசரும், சுப்பிரமணியமும், 'இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும்' என்று கூறுகிறார்கள். இது பற்றிய அவர்களது விளக்கத்தைக் கூறும் முன்பு அவர்களிடம் பணிவன்போடும், உறுதியோடும் கேட்டுக் கொள்ளுவேன்.

''நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும், நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும் — வழி காட்டும் திறமை

யும உங்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால், எந்தக் காரணத்தால், எப்போது உங்களுக்கு அளிக்கப்பட்டது?''

அண்ணா பாணி! கேட்கிறார் : 'உங்களுத்தான் நாட்டைக் காப்பாற்றும் உரிமை உண்டு என்று யாரால், எந்தக் காரணத்தால், எப்போது அந்தத் தகுதி உங்களுக்கு அளிக்கப்பட்டது!

'நாட்டைக் காப்பதில் ம.பொ.சி.-க்கு உள்ள உறுதியைவிட காமராசருக்கு உறுதி அதிகம் என்பது எந்த நியாயத்தின்பாற் பட்டது?

''குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதிவிடும்; அதற்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்ற எல்லாருக்கும் உரிமையுண்டு; தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும் —அவர்கள் தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

''காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவருக இருக்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால், சரி என்று கூறி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால், விழிப்படைந்த இந்தக் காலத்தில் கூட அப்படிப் பேசுவது — ஆணவத்திற்கு எடுத்துக் காட்டு என்றுதான் உலகம் கருதும். காங்கிரஸ்காரர் களைத் தவிர நாட்டின் மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது ; பொருத்தமற்றது ; ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய கருத்து. பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிறார்கள். மத்திய அரசுக்குப் பலம் எதற்காக? அந்தப் பலம் யாருக்கு எதிராக? — என்பதை நாம் சிந்திக்க வேண்டும்!

''பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம் ; தனிப் பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநிலத் துரைத்தனத்துக்கு இருக்கலாம், மத்தியத் துரைத்தனத்துக்கு இருக்கலாம். ஆனால் அந்தப் பலம் யாருக்காக — எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும், விளக்கிச் சொல்லாமலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

''சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால், ஒரு துளியும் தயக்கமில்லாமல் அந்த வலிவைச் சேர்த்துத் தரத் தயார். பாகிஸ்தானத்தின் படையெடுப்பை அடக்க மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால், நிச்சயம் அந்த வலிவைத் தேடித் தரத் தயார்.

''ஆனால் மத்திய அரசின் வலிவு, அசாமிற்கு அச்சத்தைத் தர—தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்திற்குக் கலக்கம் தருவதற் காகத்தான் என்றால் நமது சுதந்தரச் சிந்தனையைச் சிறுக சிறுக அழித்து, சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத்தான் என்றால்,

''நமது கூட்டுச் சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்ரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.

''மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்; மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்; ஆனால், இன்று அந்தச் சாம்ராஜ்யங்கள் எங்கே?

''சரிந்த சாம்ராஜ்யங்களோடு — இப்போது இருக்கின்ற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். அந்தச் சாம்ராஜ்யவாதிகள் — தமது சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவுதான் ஏற்பட்டது என்பதைச் சரித்திரமுணர்ந்தவர்கள் அறிவார்கள்.

''ஔரங்கசீப் காலத்தில் இருந்த வலிவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியைச் சரித்திரத்தில் காணமுடியாது. ஆனால் அந்தச் சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று, என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''நமக்கிருக்கின்ற கவலைகள் எல்லாம் — தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித் தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவு தான் என்றால் வாதத்திற்கு ஏற்றது ; அரசியலுக்கு நல்லது ; காரியத்திற்கு உகந்தது. ஆனால், மத்திய அரசு தான் எல்லா உரிமைகளையும் பலத்தையும் வைத்திருக்கும் ; மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம் தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல. மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு எதுவும் ஏற்பட்டுவிடாது.

''நாட்டுப் பாதுகாப்புத் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.''

திரு. எட்மண்ட் அவர்கள் கவனிக்க வேண்டும், ''பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும். தற்போதுள்ள அரசியல் சட்டத்தை ஆராய்ந்து மாநில மத்திய அரசுகளுக்குள்ள அதிகாரப் பங்கீடுகளை மாற்றி, அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தர வேண்டும். அதற்கான ஒரு குழு அமைத்து ஆராய வேண்டுமென்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்.

''இன்றைய தினம் மாநில அரசுக்குள்ள வேலை என்ன? மக்களுக்குச் சோறு போடுவது — வேலை வாய்ப்புத் தருவது — தொழில் நீதியை நிலை நாட்டுவது — சுகாதாரத்தைப் பேணுவது —கல்விச் செல்வத்தை வளர்ப்பது போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்ய வேண்டியது மாநில அரசு.

''ஆனால், மத்திய அரசின் வேலை என்ன? நாடக மேடையிலே வருகிற இராஜா, மந்திரியை அழைத்து, 'மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?' என்று கேட்பானும். அதுபோல் மாதம் ஒரு முறை மாநில மந்திரிகளை, மத்திய மந்திரி டில்லியில் கூட்டி, ''பள்ளிக் கூடங்களில் கல்வி எப்படி இருக்கிறது? காலரா நோய் தடுக்கப்பட்டு விட்டதா?' என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி தர்பார் பேச்சுப் பேசும் பொறுப்புத்தான் இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை!

''மக்களின் சுக துக்கங்களோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர — மத்திய அரசு அல்ல.''

''மக்கள் மீது அக்கறை இருக்கலாம் மத்திய அரசுக்கு. அது எப்படிப்பட்ட அக்கறை? — அண்ணா விளக்குகிறார்: ''குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் மூன்றாவது மாடியிலுள்ள சீமான் —ஏதோ புகை தெரிகிறதே; தீ விபத்துப் போலிருக்கிறதே!' என்று கூறுவானே, அதைப் போன்ற அக்கறைதான் மத்திய அரசின் அக்கறை.

"ஆனால் குடிசைப் பகுதியில் தீ பற்றியதும் பதறித் துடிப்பது யார்? அந்தக் குடிசைக்குப் பக்கத்தில் உள்ள குடிசை வாசிதான். அதைப்போல மாநில அரசு தான் மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியது.

"அதிகாரம் தேவைக்கு அதிகமாக்க் குவிந்து விட்டால் என்ன நடக்கிறது? நான்,''



(நான் என்ருல், அண்ணு சொல்கிருர்கள் : )

''நான் அண்மையில் டில்லி உணவு அமைச்சரோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டேன் . . .

''எனக்குத் தொலைபேசியில் பேசும் சக்தி அதிகம் இல்லையாதலால் (அண்ணு சொல்கிருர்) எனது நண்பரை விட்டுப் பேசச் சொன்னேன். உணவு அமைச்சர் ஜெகஜீவன் ராம் (அப்போது ஜெகஜீவன் ராம் உணவு அமைச்சர்) ஊரில் இல்லாததால் துணை அமைச்சர் ஷிண்டே பேசினுர். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து சர்க்கரையை வெளிக் கொணரும் உத்தரவு டில்லியில் இருந்து வராததால் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற விஷயத்தை அவருக்குக் கூற முயன்றேன். கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்துகொள்ள அவருக்கு 15 நிமிடங்கள் ஆயிற்று. பெயரைப் புரிந்து கொள்ளாததற்காக அவர் மீது நான் குற்றம் சாட்டவில்லை. சர்க்கரை ஆலை இருப்பது தமிழ்நாட்டில், அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லியில் என்று அதிகாரத்தைப் பிரித்துக் தந்தார்களே, அவர்கள் தான் குற்றவாளிகள்.

''இப்படி கள்ளக்குறிச்சிச் சர்க்கரை ஆலையில் இருந்து காட்பாடி சிறு தொழிற்சாலை வரை எல்லாவிதமான சிறு விஷயங்களிலும் அதிகாரத்தை வைத்துக் கொண்டிருப்பதன் விளைவு, பெரிய விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்த முடியாமல் போய் விடும் என்பதால் தான் அதிகாரங்கள் டில்லியில் குவிக்கப்படக் கூடாது என்கிருேம்.

"ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானுல் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் கூடச் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் என் சந்தேகம்.

''மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத் தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது. மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல.''

இது அண்ணு பேசியது. அதே மாநாட்டில் திரு. கல்யாண சுந்தரம் பேசியிருக்கிருர்கள். ''மத்திய அரசை எதிர்த்து மாநில சுயாட்சிக்காக நடக்கும் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கின்றேம்'' என்று பேசியிருக்கிருர்கள்.

'இது முரசொலியில்தானே வந்தது? இங்கே சொல்லா விட்டாலும் நாளைக்குப் போய்ச் சொல்லக்கூடும். அதற்காகத் தான் நான், 'இந்து' பத்திரிகையின் 'ஃபோட்டே ஸ்டெட்' காப்பி எடுத்து வந்துள்ளேன்.

"C.M. wants effective State Autonomy"

என்கின்ற தலைப்பில் அண்ணுவும், நம்பூதிரிப்பாத்தும் பேசிய பேச்சு அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

அதைப் போலவே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஜுலை 21, 1968 இதழில் :

'Annadurai wants panel to consider State Autonomy'

என்கின்ற அந்தச் செய்திகள் எல்லாம் அப்போதே பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.

இன்னொன்று!

செழியன் அவர்கள் சொன்னார்கள். 'கருணாநிதி, ம.பொ.சி. யினுடைய அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளலாமா'என்று. அந்த மாநாட்டிலே அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'இப்படி மத்திய—மாநில உறவுகளை ஆராய்ந்து அறிக்கை கொடுக்க ம. பொ. சி. அவர்களே முயற்சி எடுத்துக் கொண்டு ஒரு குழுவை அமைக்கலாம்.' இன்றைய தினம் ம.பொ.சி.-யே கேட்டுக் கொண்டிருக்கிறார். ம.பொ.சி.-க்குள்ள வசதியில் அது இயலாது என்ற காரணத்தால்தான் ம.பொ.சி.-க்குச் சொன்னால் என்ன, எனக்குச் சொன்னால் என்ன என்பதால் ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டது. அந்த அறிக்கையினுடைய அடிப்படையில் தமிழக அரசினுடைய கருத்துக்கள் இங்கு ஆராயப்பட்டு, விவாதிக்கப்பட்டுத் தீர்மான வடிவத்திலே உங்கள் முன்னால் வைத்திருக்கின்றேன் ; வைக்கப்பட்டிருக்கின்றது.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** Before you start that, may I know Sir, from the Honourable Chief Minister that when he has mentioned,

மத்தியிலே கூட்டாட்சி,

That is what he has mentioned it is important for the discussion—especially from the Raja Mannar's reply, what exact he means by கூட்டாட்சி, there, what is in his mind? The House would like to know.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தனியாக ஹண்டே அவர்கள் ஒரு நாள் வரட்டும். அவர்களிடத்தில் விளக்கமாகப் பேசுகிறேன். வாருங்கள் பேசலாம்.

(டாக்டர் ஹண்டே குறுக்கீடு)

எல்லா விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. இங்கே வைக்கப்பட்டிருக்கும் 'மாநில சுயாட்சி பற்றியும் ராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகள்' என்ற அறிக்கையிலே எல்லா விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி விளக்கம் கேட்கக் கூடாது.

டாக்டர் எச். வி. ஹண்டே : On a point of order Sir, I would like to know, whether the Honourable Chief Minister when he is tightly cornered can escape from explaining what exactly he means by the expression மத்தியிலே கூட்டாட்சி. Is it in order for him to escape from explaining that expression to this House. Is it not his duty to give a clear answer to that? என்று கேட்டால் 'நீங்கள் வீட்டுக்கு வாருங்கள்' என்று சொல்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐந்து நாட்கள் ஏற்கெனவே விவாதம் நடந்திருக்கிறது. இதிலே எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

(டாக்டர் ஹண்டே நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'Tamil Nadu Government views on State Autonomy and the Rajamannar Committee Report.' என்ற புத்தகம் அவையில் வைக்கப் பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹண்டே : மத்திய சர்க்கார் எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். லோக் சபா இருக்க வேண்டுமா, வேண்டாமா? கிளியராகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

டாக்டர் எச். வி. ஹண்டே : லோக் சபா கலைக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

(டாக்டர் ஹண்டே எழுந்து பேசிக் கொண்டே இருந்தார் —கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது தாங்கள் எழுந்து நின்று கொண்டு பேசிக்கொண்டே இருப்பது அவையில் நிகழ்ச்சியில் குறுக்கிடுவதாக இருக்கிறது. பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டுமென்பது மரபு. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால் மன்றத்திலுள்ள நிகழ்ச்சிகள் நடைபெறுவதிலுள்ள முறைகேடுகளைச் சுட்டிக் காட்டுவதாக இருக்க வேண்டும். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி விளக்கம் பெற எழுந்தால் பேசுகின்றவர்கள் இடம் அளித்தால்தான் குறுக்கிட முடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கருத்துக்களைத்தான் இந்த அவையில் எடுத்து வைத்திருக்கின்றோம். எங்களால் முடிந்தது கருத்துக்களைத் தருகின்ற சக்திதான். 'அதைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவையும் தா' என்று கேட்டால் அது எங்களால் இயலாத காரியம்.

டாக்டர் எச். வி. ஹண்டே : அந்தக் கருத்து என்ன என்று தான் விளக்கமாய்க் கேட்கிறேன்.

**திரு. குழ. செல்லையா :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். முதலமைச்சர் அவர்கள் அறிவு இல்லை என்று சொல்லுகிறாரா?

**திரு. முனு. ஆதி :** முதலமைச்சர் அவர்களே 'அறிவு இல்லை' என்று சொன்னால் நாங்கள் என்ன செய்வது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு பேர் அமர்ந்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இவ்வளவு பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். அண்ணா பேசிய பேச்சு முழுவதையும் படித்துக் காட்டினேன். நீங்கள் எல்லாம் அப்படியே இதிலே இணைந்தீர்கள். ஆனால், ஹண்டே அவர்களால் இணைய முடியவில்லை.' (ஆரவாரம்).

**டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் அண்ணா அவர்கள் பேசிய பேச்சை முழுவதும் கேட்டேன். நான் கேட்பது புதிது அல்ல. 1968-ஆம் ஆண்டிலேயே இந்த மன்றத்தில் கேட்டிருக்கிறேன். நம்மைப் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் முதலமைச்சருக்குத் தேவையில்லை. முதலமைச்சர் அவர்களுக்கு மிக்க மரியாதையோடு சொல்லிக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் சொன்னதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். அவர்களைக் கிண்டல் பண்ணுவதற்காகவோ வேறு எதற்காகவோ நான் இதைக்கேட்கவில்லை. உண்மையிலேயே ஒரு விளக்கத்தைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். மாநிலத்திற்கு சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றார்கள். அண்ணா பேசியதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கூட்டாட்சி என்று சொல்வதற்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அதை ஸ்பெல் அவுட் பண்ணிச் சொல்லட்டும். என்னை ஏன் பிரித்துப் பார்க்க வேண்டும்?



திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அண்ணு அவர்களுடைய பேச்சை நம்முடைய முதல்வர் அவர்கள் படிக்கும் போது நாங்களெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந் தோம். ஆனால் டாக்டர் ஹண்டே அவர்கள் பொறுமையாக இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இணைய முடியவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு டாக்டர் ஹண்டே அவர்கள் பதில் சொல்லிவிட்டார்களே.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஹண்டே அவர்கள் இணைய வில்லை என்று முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். எந்த ம. பொ. சி. காங்கிரஸ் கட்சியை ஆதரித்துக் கொண்டிருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து 'இந்திய நாட்டி னுடைய ஒருமைப்பாட்டைக் குலைக்க வந்த அநாகரிகக் கும்பல்' என்று சொன்னார்களோ, அந்த ம.பொ.சி. நடத்திய மாநாட்டைப் பற்றி இப்போது சொல்லுகிறார்களே என்பதைப் பற்றித்தான் அவர் வருத்தப்பட்டுப் பேசியது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த ம. பொ. சி. அவர்கள் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டது நான் அல்ல, அண்ணு கலந்து கொண்டார். அண்ணு கலந்து கொண்டுதான் பேசினார். அண்ணு கலந்து கொண்டு பேசிய பேச்சைத்தான் இங்கே படித்துக் காட்டினேன்.

அடுத்தபடியாக, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு கட்டளை இடுகின்ற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்! 'இது நியாயமா? இது இருக்கலாமா' என்ற வாதங்கள் நம்முடைய நண்பர் சுப்பிர மணியம் அவர்களாலும் மாரிமுத்து அவர்களாலும்—ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார் கள் என்று கருதுகிறேன்.— அனந்தநாயகி அம்மையார் அவர் களும் எடுத்துச் சொன்னார்கள்.

மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கீழ்ப்படிந்தே இருக்க வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் கிடையாது. எப்படி மாநில அரசுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைகிறதோ அதைப் போலத்தான் மத்திய அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைகின்ற அரசு. இதில், நாடாளு மன்றம் அவர்களுடைய கையில் இருக்கின்ற காரணத்தால், டில்லியில் அவர்கள் வீற்றிருக் கும் காரணத்தால் மத்திய அரசு என்பது, எஜமானர் நிலைமையி லும், மாநில அரசுகள் என்பது அடிமைகள் நிலைமையிலும் இருந்திடல் வேண்டும் என்று யாரும் தலையில் எழுதி வைக்க வில்லை.

நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் இங்கே பேசும்போது கூட அதை வெகு அழகாக எடுத்துக் காட்டினார்கள். ஒரு அடிமை

மனப்பான்மையோடும் முதலாளித்துவ மனப்பான்மையோடும் மத்திய மாநில உறவுகள் இருத்தலாகாது என்று எடுத்துக் காட்டினார்கள். அந்த அடிப்படையிலேதான் கட்டளையிடுகின்றவர்கள் என்றால் எஜமானர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தக் கட்டளையைப் பெற்று, அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய அவசியத்திலே மாநில அரசுகள் இருக்கத் தேவையில்லை. இது ஜனநாயக மரபுக்கு, முறைக்கு, ஏற்றதல்ல. மாநில அரசுகள் தவறு செய்தால், மக்கள்தான் அதற்காகத் தீர்ப்பை அளிக்க வேண்டுமே யல்லாமல், மத்திய அரசு தீர்ப்பளிப்பது என்பது முறையல்ல என்பதற்காகத்தான் அந்த விதி தேவையில்லை என்று தமிழக அரசினுடைய கருத்துரை, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி மத்திய அரசு கட்டளை பிறப்பித்து, மாநில அரசைக் கலைத்து விடுவது, 'ஏன் இந்தக் கட்டளையை நிறைவேற்றவில்லை?' என்று எஜமான் இடத்திலிருந்து பேசுவது, எல்லாம் கூட்டாட்சி முறைக்கு முரண்பட்டதாக ஆகும் என்கின்ற காரணத்தாலும் தான் அது விலக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றோம்.

இது குறித்து, மேற்கு வங்கத்தினுடைய தலைமை நீதிபதி முகர்ஜி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். 'இவைகளெல்லாம் இந்த டைரக்டிவ் கட்டளைகள் பிறப்பிக்கின்ற அரசியல் சட்டத்தின் விதிகள் எல்லாம். 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தில் அப்போது தேவைப்பட்டவைகள், தற்போதைய சூழ்நிலையில் இவைகளெல்லாம் தேவையில்லை' என்று முகர்ஜி குறிப்பிடுகிறார்.

ஐவர் ஜென்னிங்ஸ் பற்றிச் சொன்னார்கள். அவரும் அந்தக் கருத்தை எதிரொலிக்கிறார். மாகாண சுயாட்சி வழங்கிவிட்டு, அதை பிரிட்டிஷ்காரரர் காலத்தில் வைஸ்ராய் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். ஆகவே, அந்தப் பேரறிவாளருடைய கருத்து, நம்முடைய அனுபவங்கள் 1935-ஆம் ஆண்டுச் சட்டத்திற்கு அப்படியே பிரதிபலிக்கின்ற அரசியல் சட்டம்—இவைகளின் காரணமாகக் கட்டளை பிறப்பிக்கும் இந்தத் தன்மை உலகத்தில் எந்த அரசியல் சட்டத்திலும் இல்லை. இப்படி மாநிலங்களைத் தண்டிக்கின்ற தன்மை —சர்வாதிகார நாடு என்று சொல்லுகிறார்கள் — தங்கமணி அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன் — சோவியத் ரஷ்யாவை — அந்த ரஷ்யாவிலே கூட இதற்கு ஈடான விதி எதுவும் கிடையாது. மத்திய அரசு, மாநிலங்கள் சில சட்டங்களின்படி நடக்கத் தவறிவிட்டால் மத்திய அரசுக்கு என்று ஒதுக்கியிருக்கும் அதிகாரத்தின்படி — மாநில அரசு நடக்கத் தவறி, அதை மீறி நடந்தால் அப்படிப்பட்ட காரியங்களை ரத்து செய்கின்ற அதிகாரங்களைத்தான் ரஷ்யாவில் வைத்து இருக்கிறார்களே தவிர மாநில அரசை உடனே கலைத்து விடுவது என்கின்ற அதிகாரத்தை சோவியத் ரஷ்யாவும் பெற்றிருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இண்டர்-ஸ்டேட் கவுன்சில் பற்றிப் பேசப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த 1955-வது வருஷத்துச் சட்டத்தில் என்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப் பட்டதோ, அதே முறைதான் இங்கே வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய பழனிவேல் ராஜன் அவர்கள் சொன்னார்கள்—1935-ஆம் ஆண்டுச் சட்டத்திலே இருக்கும் அதிகாரம் கூட மாநிலத்துக்கு இல்லையே என்று சொன்னார்கள். அப்போது கூட — நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். 1935-வது வருடசட்டத்தைப் பொறுத்த வரையில் அது மாநிலம் சம்பந்தமான அளவுக்கு அமலுக்கு வந்ததேயொழிய அன்றைக்கு மத்தியில் பிரதம மந்திரி என்றோ மந்திரி சபை என்றோ இல்லையே! இப்போது நாடு சுதந்திர மடைந்த பிறகு, பிரதம மந்திரியும் மத்திய சர்க்காரும் ஏற் பட்டு அதன் அடிப்படையிலேயே வந்ததல்லவா மாநிலங்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : '55 என்றார்கள். '55 அல்ல. '35-ஆம் ஆண்டுச் சட்டம். '35-ஆம் ஆண்டுச் சட்டத்தில் நல்லவைகள் சிலவற்றை விளக்கியிருக்கலாம். அதைப் பழனிவேல் ராஜன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக்கூடும். ஆனால் எவையெவை இன்றுள்ள சூழ்நிலைக்குத் தேவை இல்லையோ அவைகளையெல்லாம் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளிலே ஒன்று தான் இந்தக் கட்டளையிடும் அதிகாரம் என்பதை நான் குறிப்பிட் டேனேயல்லாமல் வேறு அல்ல.

இண்டர்-ஸ்டேட் கவுன்சில் பற்றி கம்யூனிஸ்ட் கட்சியி னுடைய தலைவர் கே. டி.கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். இது,நாடாளுமன்றத்தினுடைய அதிகாரத்தையே எடுத்துவிடுகிறது என்று குறிப்பிட்டார்கள். மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களுக்கு, சட்ட மன்றம்தான் சுப்ரீமாக இருக்கிறது. அதுபோல, மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற அதிகாரங் களுக்கு நாடாளுமன்றம்தான் சுப்ரீம். அதை யாரும் மறந்து விடக் கூடாது. மறுத்துவிடக் கூடாது. இதிலே இரண்டு வித மான கருத்துக்கு எள்ளளவும் இடமில்லை.

ஆனால், நான் குறிப்பிட்டு இருக்கிற 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' வேறு : இது 263-வது பிரிவின்படி இப்போது அரசியல் சட்டத்திலே இருக்கின்ற 'இண்டர்-ஸ்டேட் கவுன்சிலை' நாம் குறிப்பிட்டு இருக்கிறோமா என்றால் இல்லை. அந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் கூடவே இல்லை. அதைப் பற்றிப் பல பேர் முறையிட்டு இருக்கிறார்கள். கூடவே இல்லை. ஆனால் அதே இண்டர்-ஸ்டேட் கவுன்சில் இருக்கலாம் என்கின்ற ஒரு வாதம் வந்தபோது கூட நம்முடைய இ.எம்.எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் 'அந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் இப்போது இருப்பதுபோல் இருக்கக் கூடாது. அது இருந்தால் மாநிலங்களுடைய உரிமை பறிக்கப்பட்டு விடக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடக் கூடும்' என் கின்ற ஒரு மறுப்புக் கருத்தைக் கூட ஒரு காலத்திலே தெரிவித்து இருக்கின்றார்கள்.

இப்போது 263-வது பிரிவில் குறிப்பிட்டு இருக்கின்ற 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' இப்போது இருப்பதுபோல் குறிப்பிட்டிருக்கிற கவுன்சில் உருவாகுமானல் நம்முடைய ஹண்டே அவர்கள் நேற்று எழுப்பிய பிரச்சினை, அந்த சந்தேகம் வரக்கூடும். ஆனல் நாம் நம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' வேறு மாதிரியானது. எல்லா அதிகாரங்களும் பங்கீடு செய்யப்பட்ட பிறகு நாம் அந்த 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' உருவாக வேண்டுமென்று சொல்கிறேம். அப்போது மத்திய அரசிடம் தரப்பட்டிருக்கிற நான்கு அதிகாரங்களில் ஏதாவது ஒரு நடவடிக்கை ஒரு மாநிலத்தையோ அல்லது பல மாநிலங்களையோ அல்லது மத்திய மாநில உறவுகளையோ பாதிக்குமேயானல், அவைகள் மட்டுமே நாம் குறிப்பிடுகின்ற இண்டர்-ஸ்டேட் கவுன்சிலில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

உதாரணத்திற்கு, கச்சத் தீவுப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். அது வெளிநாட்டு விவகாரம் பற்றியது. நாம் முழுக்க முழுக்க இன்று இங்கேயிருக்கும் கருத்துக்களைப் பற்றி மத்திய அரசிடம் கொடுத்து விடுகிறேம். ஆனலும், கச்சத் தீவு தமிழ் நாட்டு மக்களுடைய உணர்ச்சிகளைத் தொடக் கூடியது என்பதை யாரும் மறுத்திடல் இயலாது. இது சம்பந்தமாக மத்திய அரசு அந்தரங்கமான முடிவு எடுக்க வேண்டுமானல், அதன் பலாபலன்களைப் பற்றி 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். இதுதான் நாம் நம்முடைய இண்டர்-ஸ்டேட் கவுன்சிலில் நாம் சொல்லியிருக்கும் விளக்கமாகும். அப்படி இப்போது கலந்து ஆலோசிக்கப்படவில்லை. மாநிலங்கள் கலந்து ஆலோசிக்கப்படவில்லை என்பதற்கு நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அகில இந்தியத் தலைவர் அசோக் மேத்தா கூட அண்மையில் ஒரு கருத்தை அறிவித்தார்.



திராவிட முன்னேற்றக் கழகம் விழுப்புரத்திலே நடத்திய மாநாட்டில் கச்சத் தீவு பற்றிய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைப் பற்றி அச்சுத மேனன் அவர்களைக் கேட்டபோது, அச்சுத மேனன் சொன்னார்கள். ''பிரதம மந்திரி இலங்கைக்குப் போகும் போதோ, அல்லது போய் வந்த பிறகோ முதலமைச்சர் கருணாநிதியைக் கலந்து பேசியிருந்தால் அவர் பகிரங்கமாக இது பற்றி மாநாட்டில் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்காது. வெளி நாட்டு விவகாரங்களில் கூட முதலமைச்சர்களைக் கலந்து பேச வேண்டும். இதற்கான ''போரம்' இப்போது இல்லை. இதனால்தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் தம்முடைய முறையையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் மாநாட்டிலே பேசி வெளிப்படுத்தியிருக்கிறார்' என்று அச்சுத மேனன்—அசோக் மேத்தா—குறிப்பிட்டார்—மன்னிக்கவும்—இதை அசோக் மேத்தா குறிப்பிட்டார்கள். அச்சுத மேனனுக்கும் அந்தக் கருத்து இருப்பதால் அந்தப் பெயர் பின்னி வந்துவிட்டது. அத்தகைய 'போரம்' தான் நாம் நினைக்கிற 'இண்டர்-ஸ்டேட் கவுன்சில்' ஆகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதைப் போல், மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' என்ற புத்தகத்தைப் படித்துக் காட்டி, 'இப்படி நினைத்தால் தமிழ்நாட்டையே துண்டு துண்டாகப் போட்டுப் பல பேருக்குக் கொடுத்து விடலாம்' என்று மாறன் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கற்பனை என்றெல்லாம் சொன்னார்கள். அந்தக் கற்பனைக்கு எடுத்துக்காட்டு இல்லாமல் இல்லை. கற்பனையாக இருக்கலாம். நடந்தாவிடப் போகிறது! வேறு விஷயம். ஆனால், இப்போது இருக்கின்ற அரசியல் சட்டத்தின் மத்தியிலே அவர்கள் பெற்று இருக்கின்ற அதிகாரங்களுக்கு—அது போன்ற காரியங்களைச் செய்ய முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு இருந்து இருக்கிறது. டாக்டர் பி. சி. ராய் மேற்கு வங்க சட்ட சபையில் முதலமைச்சராக வீற்றிருக்கின்றார். அந்த நேரத்தில் மேற்கு வங்கத்திற்குச் சொந்தமான பெருபாரியை, அவரைக் கேட்காமலேயே பாகிஸ்தானத்துக்குக் கொடுத்துவிடப் பண்டித ஜவஹர்லால் நேரு சம்மதித்து விடுகிறார். நடந்ததா இல்லையா?

மேற்கு வங்கத்திலே இருக்கின்ற பெருபாரியை மேற்கு வங்கத்தினுடைய முதல்வர் பி.சி. ராயைக் கலந்து கொள்ளாமலே பாகிஸ்தானத்துக்கு கொடுத்துவிட நேரு சம்மதம் கொடுக்கிறார். முடிவாகிவிடுகிறது. உடனே பி.சி. ராய்க்கு வேறு வழியில்லை. அவர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். பி.சி. ராய் காங்கிரஸ்காரர் தான்! மேற்கு வங்கத்தின் முதல்வர், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். மத்திய அரசை எதிர்த்து முதன் முதலாக வழக்குத் தொடுத்தவர் டாக்டர் பி. சி. ராய் என்று அன்றைக்கு இந்திய நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் எழுதின. அவ்வளவு புகழ் மிக்க வழக்கு அந்த வழக்கு. அந்த வழக்கினுடைய தீர்ப்பு என்ன தெரியுமா? அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தமில்லாமல் பெருபாரியை பாகிஸ்தானத்துக்குக் கொடுத்திருக்கக் கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. அதற்குப் பிறகாவது, பி.சி. ராய் இடத்திலே மத்திய அரசு வருத்தம் தெரிவித்துக் கொண்டதா? இல்லை! என்ன செய்தார்கள்? 'அப்படியா சங்கதி! திருத்து அரசியல் சட்டத்தை!' என்று நாடாளு மன்றத்திலே கொண்டு வந்து

அரசியல் சட்டத்தைத் திருத்திப் பெருபாரியை பாகிஸ்தானத்துக்குத் தானம் அளித்தது சரிதான் என்கின்ற அளவுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்திக் கொண்டார்களே தவிர, பெருபாரி மேற்கு வங்கத்தின் பகுதி ஆயிற்றே என்கின்ற சிந்தனை அவர்களுக்கு எழவில்லை. அந்த அதிகார ஆணவத்தைத்தான் குறைக்க வேண்டும்-அந்த நிலைமையைத்தான் மாற்ற வேண்டும் என்று இன்றைக்கு நாம் கூறுகிறோமே யல்லமால் வேறு அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : பெருபாரி எப்படி சரியான உதாரணம் என்று எனக்குத் தெரியவில்லை. இந்திய நாட்டினுடைய எல்லையை மாற்றவேண்டுமென்றாலோ அல்லது Territories-ஐ எடுத்து மற்றவர்களுக்குக் கொடுக்கும்போதோ அரசியல் சட்டத்தை மாற்றவேண்டுமென்று இருக்கிறது. அந்தக் காரியத்தைச் செய்யாமல் போய்விட்டார்கள் என்பதைத்தான் பி.சி. ராய் அவர்கள் சுட்டிக் காட்டினார்களே ஒழிய அது எந்தப் பகுதியிலே இருக்கின்ற இடத்தை எடுத்தார்கள் என்ற பிரச்சினைக்கு அல்ல என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : நீங்கள் இருக்கின்ற அதிகாரங்களுக்கு வக்கீலாகிறீர்கள். நான் இருக்க வேண்டிய அதிகாரங்களுக்கு வக்கீலாக இருக்கின்றேன். அவ்வளவுதான் வித்தியாசம். நீங்கள், இருக்கின்ற அதிகாரங்களுக்காக வாதாடுகிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் மாற்றப்பட வேண்டிய அதிகாரங்களைப் பற்றி நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய அக்கறை, கவனம் யாவும் நாட்டு மொத்தமாக இருந்தது. பி.சி. ராய் அவர்கள் ஒரு சீஃப் மினிஸ்டர் ஆஃப் ஏ ஸ்டேட். அவருடைய ஒரு மாகாணத்தினுடைய இன்டரெஸ்டுதான். ஆனால் நேஷனல் இன்டரெஸ்டில் அந்த டெசிஷன் வந்திருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தேச பக்தி குறைவானது, அதை எடுத்துக் கொடுத்து விட்டார்—நாங்கள் தடுத்து நிறுத்திவிடுவோம் என்று சொன்னால் என்ன, அவரைவிட தேசபக்தி நமக்கெல்லாம் இருக்கிறதா, என்பது கேள்விக்குரியதாகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : பி. சி. ராய் என்றால் சாதாரணமான ஆள் அல்ல. பி.சி. ராய் என்பவர் நேருவை 'மிஸ்டர் நேரு' என்று அழைக்கக்கூடிய அளவுக்கு வல்லமை பொருந்தியவர், ஆவார். சாதாரணமானவர் அல்ல. நான் நேரு அவர்களைத் தாழ்த்திச் சொல்லவில்லை. 'ஆஃப்டர் ஆல் சீஃப் மினிஸ்டர்' என்றால் அவ்வளவு சாதாரணமா? கிள்ளுக் கீரையா? சீஃப் மினிஸ்டர் என்றால்....

(பலத்த சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி**: பாகிஸ்தானத்தோடு இந்தியா ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கின்றது. இரண்டு நாடுகளின் நன்மையை மனத்தில் வைத்து ஒரு முடிவுக்கு வருகிறார் பண்டித ஜவஹர்லால் நேரு. அப்படி முடிவுக்கு வந்து பெருபாரி கொடுக்கப்பட்டதால் தேசம் பாழாகிவிட வேண்டும் அல்லது பி.சி. ராய் அவர்கள் கெட்டுவிட வேண்டும், வங்கம் குறைந்துவிட வேண்டும் என்று கொடுத்திருப்பார்?

திரு. கே. டி. கே. தங்கமணி : பி. சி. ராயைப் பொறுத்த அளவில், ஜவஹர்லாலைப் பற்றிச் சொல்லும்போது, 'மை பாய் ஜவஹர்லால்' என்றுதான் சொல்லுவார்கள். அவர் வயதிலே முதிர்ந்தவர் (கரவொலி).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மணி ஓசை இந்தப் பக்கம் கேட்கிறது. அதுவும் தங்க மணி ஓசை கேட்கிறது (கரவொலி).

அது மாத்திரமல்ல. இலங்கைத் தமிழர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்களே, யாரைக் கேட்டார்கள்? கேட்டார்களா? எவ்வளவு பேர்களை இன்றைக்கு நாம் சுமந்து தீர வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம்? இலங்கைத் தமிழர்கள் இங்கே வருவதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை! ஆனால், அவர்கள் பற்றிய ஒரு ஒப்பந்தம் நடைபெறுகிறபொழுது யாரைக் கலந்து கொண்டார்கள்? இந்த மாநிலம் கலந்து கொள்ளப்பட்டதா? ஏதோ போனால் போகிறது என்று டெல்லிக்கு ராமையா போய், தானும் கலந்து கொண்டது போல் பாவனை காட்டப்பட்டதே அல்லாமல், யார் மதித்தார்கள்? இல்லை! இப்பொழுது இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளிலே நம்முடைய மாநில அரசு ஏதாவது கலந்து கொள்ளப்பட்டதா ? கச்சத் தீவுப் பிரச்சினையில் இந்த மாநில அரசு ஏதாவது கலந்துகொள்ளப் படுகிறதா? எங்கேயாவது விருந்துக்குப் போகிற நேரத்திலே இரண்டு மந்திரிகள் சந்தித்துப் பேசுகிறார்கள், கச்சத் தீவு பற்றி, 'என்ன, சௌக்கியமா?' என்று கேட்பது போல! அதைத் தவிர, இன்றைக்குக் கச்சத் தீவு, தமிழ்நாட்டு மக்களினுடைய உணர்ச்சி பூர்வமான ஒரு பிரச்சினை! அந்தக் கச்சத் தீவு பற்றிய உரிமையை விடக் கூடாது என்பது தமிழ்நாட்டு மக்களுடைய ஆழ்ந்த, மிகக் கொள்கைப் பிடிப்பு நிறைந்த ஒரு கோஷமாக இருக்கிறது. அதிலே எத்தனையோ செய்திகள் தினம் தினம் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு அரசு இதில் கலந்து கொள்ளப்பட்டிருக்கிறதா? இல்லை!

திரு. பி. சி. ராய் அவர்கள் நம்முடைய நேருதானே — அம்மையார் அவர்களை விட பி.சி. ராய் பண்டித நேரு அவர்களுக்கு நெருக்கமானவர் — நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னது போல, அவர், அவ்வளவு நெருங்கிப் பழகுகின்ற தன்மை வாய்ந்தவர். நேரு, பி.சி. ராயை மிகுந்த பெருமைக்கு உரியவராக்கி வைத்திருந்தார். அந்த பி.சி. ராய் அவர்களே, 'நேருதானே செய்தார்! நமது பிள்ளை தானே, நமது பையன் தானே' என்று கருதிக் கொள்ளாமல் அந்த மாநிலத்தின் உரிமையைக் காப்பாற்றுவதற்காக 'நான் மத்திய அரசை எதிர்த்துச் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வேன்' என்று போர்ப் புறை கொட்டினாரே அந்த பி.சி. ராய், காங்கிரஸ்காரராக இருந்தாலும், அந்த மாநில உணர்ச்சிக்கு வாரிசாகத்தான் இன்றைக்குத் தமிழ்நாடு தி.மு.க. அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் குறித்து மத்திய அரசு நாடாளு மன்றத்தில் சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு இண்டர்-ஸ்டேட் கவுன்சிலிலேயும், மாநிலங்களேயும் கலக்க வேண்டும் என்று நாம் கூறியிருப்பதிலும் எந்தத் தவறும் கிடையாது. உதாரணம் சொல்ல வேண்டுமானால், கௌரவ மாஜிஸ்ட்ரேட்கள்! நம்மைக் கலந்து கொண்டு சட்டம் கொண்டுவரப்படவில்லே. இங்கே டாக்டர் ஹண்டே கூட அதைப் பற்றிப் பேசினார்கள். மற்றும் எல்லோரும் கூடச் சொன்னார்கள். கௌரவ மாஜிஸ்ரேட்களே ரத்து செய்யக்கூடிய பிரச்சினை இந்த அவையிலே எழுப்பப்பட்டது. மாநில அரசுகளோடு கலந்து கொண்டிருக்கலாம். இது போல பிரச்சினைகள் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலுக்கு வந்திருக்குமேயானால் ஒவ்வொரு மாநிலத்தின் சார்பாகக் கருத்துக்களேச் சொல்லியிருக்க முடியும். அதன் காரணமாக இப்பொழுது எடுத்த முடிவு மாறி இருக்க இயலும். இவைகளேத்தான் இண்டர்-ஸ்டேட் கவுன்சிலில் ஆராய வேண்டும் என்று சொல்லுகின்றோமேயல்லாமல் வேறு அல்ல.

**திரு. கோவை செழியன்** : பேரவைத் தலேவர் அவர்களே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கச்சத் தீவு சம்பந்தமாக மத்திய அரசு எந்த விதமான முடிவும் எடுக்கவில்லே, தமிழகத்தைக் கவனிக்கவில்லே என்று சொன்னார்கள். அது வேதனேக்குரிய செய்திதான். ஆனால் அதே நேரத்தில் இலங்கையில் இருக்கிற தமிழர்களேக் கொடுமைப்படுத்தினார்கள் என்ற செய்தியும் வந்து கொண்டிருக்கிற நேரத்தில் — வெளிநாட்டுப் பிரச்சினையைப் பற்றிப்பேசவில்லே — கச்சத் தீவு தமிழகத்திற்கு சேர வேண்டிய ஒன்று. அதற்காக மத்திய அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லே.

**மாண்புமிகு பேரவைத் தலேவர்** : புதுக் கருத்து சொல்கிறீர்கள்.



**திரு. கோவை செழியன் :** இதற்காக மத்திய அரசை எதிர்த்து நீங்கள் ஏதாவது போராட்டம் நடத்தினீர்களா? அந்த நேரத்தில் இலங்கையிலிருந்து வந்த பிரதம மந்திரிக்கு நீங்கள் மாலை போட்டு வரவேற்பு தந்திருக்கிறீர்கள். முடியாது என்று சொன்னால் மத்திய அரசு கழுத்தை வெட்டிவிடுவார்களா? முடியாது என்று ஏன் சொல்லவில்லை?

**திரு. பெ. சீனிவாசன் :** நான் கூட அதைத்தான் சொல்ல நினைத்தேன். இலங்கைப் பிரதமர் வந்தார்கள். அந்தப் பிரதம அமைச்சரை வரவேற்க வேண்டியது நம்முடைய முதல் அமைச்சர் கடமை. ஆனாலும், தமிழர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் 'வரவேற்க முடியாது; தமிழ்நாட்டின் சார்பில் பொது மக்கள் கறுப்புக்கொடி காட்டுவார்கள்' என்று ஜாடை காட்டியிருந்தால் அன்றைக்கு திருமதி பண்டார நாயகா அவர்கள் இங்கே இறங்கியிருக்க முடியாது. பிரதமர் அவர்கள் நம்முடைய புண்பட்ட உள்ளத்தைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அதைச் செய்திருக்கலாமே?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பி. சி. ராய் அவர்கள் தன்னுடைய மாநிலத்தைக் காப்பாற்றுவதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றது மாதிரி கச்சத் தீவுப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாது? அதை சுப்ரீம் கோர்ட்டின் கவனத்திற்குக் கொண்டு போவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கச்சத் தீவுப் பிரச்சினையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மாநில சுயாட்சி தேவை. அதுகூடப் போதாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாநில சுயாட்சி இல்லாமல் டாக்டர் பி.சி. ராய் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறாரே? அதே மாதிரி நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர் நடவடிக்கை எடுக்கின்ற உணர்வோடு கேட்டாரே தவிர, நடவடிக்கை வெற்றி பெறவில்லை. அம்மையார் அவர்கள் முழுவதும் கவனிக்காமல் அரைகுறையாகப் பேசுவது நல்லது அல்ல.

(மறுபடி திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்திருந்தார்கள்).

லாவணி பாடிக் கொண்டேயிருக்கக் கூடாது. நீங்கள் பேசும் பொழுது நான் உட்கார்ந்திருந்த மாதிரி, நான் பேசும்பொழுது நீங்கள் உட்கார்ந்திருக்க வேண்டும்.

தலைவர் அவர்களே, இலங்கைப் பிரதமருக்கு நான் வரவேற்பு அளித்தது சரியா என்று கேட்டார்கள். ஒரு நாட்டினுடைய பிரதமர் வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு மரியாதை காட்டுவது என்பது வேறு, அதே நேரத்தில் நம்முடைய உரிமைக்குக் குரல் கொடுப்பது என்பது வேறு. அன்றைக்கே இலங்கையில் நடை

பெற்ற பிரச்சினையைக் கண்டித்து, சூழ்நிலைகள்—சம்பவங்களைக் கண்டித்து நான் அறிக்கை விடுத்திருக்கின்றேன். இந்தியாவுக்கு வருகின்ற ஒருவரை வரவேற்பது நம்முடைய பண்பாட்டைப் பொறுத்த விஷயம். 'வராதே போ' என்று சொல்லுகின்ற உரிமையை நாம் பெற்றிருக்கவுமில்லை. அந்த நாகரிகத்தை நாம் பெற்றிருக்கவும் இல்லை. அதற்காக இலங்கையில் நடைபெற்ற சம்பவத்தை நாம் ஆதரித்துவிட்டதாக அர்த்தம் அல்ல. இங்கே எவ்வளவோ காரசாரமாகப் பேசிக் கொள்கிறோம் நம்முடைய உரிமைகளைப் பற்றி. இங்கிருந்து தாழ்வாரத்திற்குப் போனதும், இங்கே மோதிக் கொண்ட தோழர்களெல்லாம் எப்படி எப்படிச் சுமுகமாகப் பழகுகிறார்கள் என்பதை நாம் பார்க்காமலா இருக்கின்றோம்? ஆகவே, பண்பாடு வேறு, ஒருவரை ஒருவர் மதிப்பது என்பது வேறு. நம்முடைய உணர்வுகளைக் காட்ட வேண்டிய இடத்திலே காட்டுவது என்பது வேறு. கச்சத் தீவுப் பிரச்சினையில் நாம் டெல்லியோடு போராட வேண்டுமே தவிர, இலங்கையோடு போராட என்ன சக்தி நமக்கு இருக்கிறது? என்ன உரிமை நமக்கு இருக்கிறது? என்ன அதிகாரம் நமக்கு இருக்கிறது? கச்சத் தீவு பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வந்துவிட வில்லை, இன்னும் நம்மைக் கலக்கவும் இல்லை. இன்றைக்கு இதைப்பற்றி இங்கே பேசியிருப்பது நம்மைக் கலந்து பேசுவதற்கு ஒரு வேளை அவர்களுக்கு மனத்தில் அந்த எண்ணத்தை உருவாக்கும் என்று கருதுகிறேன். நம்மையும் மீறி கச்சத் தீவு விஷயத்திலே ஒரு முடிவு எடுப்பார்களேயானால், அதே நேரத்தில் நீங்கள் போராடுவீர்களா என்று என்னைப் பார்த்து அண்ணா தி.மு.க. நண்பர்கள் கேட்பதைவிட, 'நாம் அனைவரும் சேர்ந்து போராடுவோம், வாருங்கள்' என்று விடுக்கின்ற அழைப்பை — 'நீ எதிர்க்கட்சி, நான் ஆளும் கட்சி!' 'நீ அழைத்து நான் வருதா' என்று பிகுவெல்லாம் காட்டாமல் — 'அதிகாரத்தை உன்னிடத்திலே கொடுப்பதா' என்று நீங்கள் கேட்கிறீர்களே அதுபோலெல்லாம் கேட்காமல் — 'நல்ல பிரச்சினைக்காக அழைக்கிறீர்களா! வருகிறோம், வரத் தயாராக இருப்போம்' என்பதை நான் எடுத்துக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதே உணர்வு அங்கும் இருக்க வேண்டும். 'அதிகாரங்களைக் கொடுங்கள், ஆனால் கருணாநிதி கையிலே கொடுக்காதீர்கள், நாவலர் கையிலே, பேராசிரியர் கையிலே, மற்றவர்கள் கையிலே கொடுக்காதீர்கள்' என்று சொல்கிறீர்களே, அந்தக் குறுகிய நோக்கத்திலிருந்து விடுபட்டு, 'கூட்டுக்கு வெளியே வா, கிளியே!' என்று நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

**திரு. கோவை செழியன்** : தலைவரவர்களே, கிளி கூட்டை விட்டுப் பறந்து ஆறு மாதம் ஆகிவிட்டது.

**டாக்டர் எச். வி. ஹண்டே** : சபாநாயகர் அவர்களே, மாண்பு மிகு முதலமைச்சர் சொல்லக்கூடியதில் வரவேற்கக் கூடிய கருத்து, இந்த இண்டர்-ஸ்டேட் கவுன்சில் இருப்பது நல்லது. எனக்கொரு விளக்கம் தேவைப்படுகிறது. இண்டர்-ஸ்டேட் கவுன்சிலில் அங்கே என்னென்ன விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள்? சீப் மினிஸ்டரின் கான்பிரன்ஸ் நடக்கிறது. என்னென்ன விஷயங்களைப் பற்றி அதிலே விவாதிக்கிறார்கள்? இந்த இந்த சப்ஜெக்ட் பற்றித்தான் விவாதிக்க வேண்டுமென்று ஏதாவது வரயறை செய்திருக்கிறார்

களா? நம்முடைய ரூல்ஸ் கமிட்டியிலே வைத்திருப்பது போல சிப் மினிஸ்டரின் கான்பிரன்ஸ் வைத்திருக்கிறார்களா அல்லது வேறு மாதிரி வைத்திருக்கிறார்களா? நாங்கள் உங்களை இடையிடையே மடக்கிக் கேள்வி கேட்பதுபோல நீங்கள் அங்கே பிரதமரை மடக்கிக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறதா? இந்த மாதிரி கச்சாத்தீவு பிரச்சினையைப் பொறுத்த வரையில் நாங்கள் உங்களை மடக்கிக் கேட்பதுபோல நீங்கள் பிரதமரை மடக்கிக் கேட்கிறீர்களா? அதன் விளைவு என்ன என்பதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கச்சாத்தீவு என்றார்கள், கச்சத் தீவு அது! கச்சா என்றால் ரொம்ப சில்லறை என்று ஆகி விடும். (குறுக்கீடு) நான் பதிவேட்டுக்காகச் சொன்னேன்; வேறல்ல. அவர்கள் திருத்திக் கொள்வதற்காகச் சொன்னேன்.

கச்சத் தீவைப் பொறுத்தவரையில் நானும் தொழிலமைச்சர் அவர்களும் டில்லிக்குப் போயிருந்தபோது நாங்களே பிரதமரைச் சந்தித்துக் கேட்டோம். அவர்கள் அழைத்துப் பேசவில்லை. போகும் போதோ, வரும் போதோ கச்சத் தீவு பற்றிய பிரச்சினையை எங்களிடத்திலே விவாதிக்கவில்லை. டில்லிக்குப் போயிருந்தபோது நானும் தொழிலமைச்சர் மாதவன் அவர்களும் பிரதமரிடத்தில் பேசிக் கொண்டிருந்தபொழுது இது பற்றிக் கேட்டோம். அப்போது எங்களுக்கு விவரமான பதில் எதுவும் சொல்லவில்லை. அந்த அளவோடுதான் இருக்கிறது.

முதலமைச்சர்கள் மாநாட்டில் இன்ன இன்ன பற்றி விவாதிப்பது என்று அவர்களே வரையறை தருகிறார்கள். நாமும் சில நேரங்களில் அனுப்பலாம். ஆனால் கூடுமான வரையில் நிதிப் பிரச்சினைகள்—திட்டங்கள் இவைகளைப் பற்றித்தான் பேசப்படுகின்றதே யல்லாமல் இதுபோன்ற வெளிநாட்டு உறவு விவகாரங்கள் பற்றியெல்லாம் முதலமைச்சர்கள் மாநாட்டிலே பேசப்படுவதில்லை.



பாகிஸ்தான் போரின்போது முதலமைச்சர்கள் மாநாடு நடந்து முடிந்த போது, சில முதலமைச்சர்களை அழைத்திருந்தார்கள்; என்னை யும் அழைத்திருந்தார்கள். அப்போது நாட்டுப் பாதுகாப்பைப் பற்றி என்னிடத்தில் பேசினார்கள். வேறு எந்த விவகாரமும் நடைபெறவில்லை. அது அதிகார பூர்வமான மாநாடாகக் கூட நடைபெறவில்லை.

ஆகவே கச்சத்தீவு போன்ற பிரச்சினைகளை எழுப்புவதற்கு வழி இருக்கிறதா இதுபோன்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே, என்பதை இனிமேல்தான் யோசிக்க வேண்டும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

நிதி ஆணைக்குழு, நிரந்தரமாக இருப்பதைப் பற்றிச் சில மறுப்புரைகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. நிதிக் குழு நிரந்தர மாக இருப்பதில்தான் நன்மைகள் நிறைய உண்டு என்பதை நாம் ஆராய்ந்து பார்த்து அந்த முடிவுக்கு வந்திருக்கின்றோம். நண்பர் ஹண்டே சொன்னார். நிரந்தரமான நிதி ஆணைக்குழு இருக்க வேண்டுமென்று சொன்னது, ''சிந்தனை இல்லாமல் தீட்டப் பட்ட ஒரு கருத்து''

Without any thought the whole thing has been drafted. It has been drafted in an ill--fashioned manner.

என்றுகூடக் கொஞ்சம் வேகமாகச் சொன்னார்கள். அந்த நிரந்தரமான நிதி ஆணைக்குழு இருக்க வேண்டுமென்ற கருத்தை ராஜமன்னார் குழு நிறைய எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அர்ச்சனைகள் எல்லாம் அவர்களைப் போய்ச் சேரக்கூடாது என்பதற்காக-நான் வாங்கிக் கொண்டாலும் பரவாயில்லை......!

ராஜமன்னார் 1965-ஆம் ஆண்டு நிதி ஆணைக் குழுவினுடைய தலைவராக இருந்தபோதே இந்தக் கருத்தை அப்பொழுதே வலி யுறுத்தி யிருக்கிறார்கள். அந்தக் கருத்தைத்தான் இப்போது இவர்கள் சொன்னார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். பல்வேறு பொருளாதார நிபுணர்களும் இந்தக் கருத்தைப் பிரதி பலிக்கின்றார்கள். ஆகவே இது பெரிய புதுமையான ஒரு கருத்து என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆஸ்திரேலியாவில் இப்படித்தான் 'காமன்வெல்த் கிரான்ட்ஸ் கமிஷன்' என்கின்ற இதைப்போன்ற ஒரு நிதிக்குழு நிரந்தரமானதாக இருக்கிறது.

இப்போது, உதாரணமாக ஹண்டே அவர்களே சொன்னார் கள். 'நீங்கள் நிதிக்குழுவோடு சரியாக வாதாடவில்லை; ஆகவே உங்களுக்கு வர வேண்டிய பணம் வரவில்லை' என்று குற்றஞ்சாட்டி னார்கள். வாதாடினோமா இல்லையா என்பது வேறு விஷயம். வாதாடவில்லை என்பதை வாதத்திற்காக வைத்துக்கொள்வோம்; நிதிக் குழு ஐந்தாண்டுக்கு ஒருமுறை கூடி, இந்த ஆண்டு நடக்கிற தவறை-ஹண்டே அவர்களின் அறிவுரைப்படி, அடுத்தாண்டு நிதிக் குழு நிரந்தரமாக இருந்தால்தானே, அடுத்தாண்டு போய் வாதாடி தேவையான பணத்தைப் பெற முடியும்! ஐந்தாண்டுக்கு ஒருமுறை

நிதிக்குழு கூடிக் கலந்து விட்டால் பிறகு மறுபடியும் ஐந்தாண்டுக் காலம் காத்திருக்க வேண்டும், வாதாடுவதற்காக! ஆகவேதான் அவ்வப்போது இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, தேவைக்கேற்ப நம்முடைய கோரிக்கையை எடுத்துச் சொல்லி, அதைப் பரிசீலிப்பதற்கு ஏற்றவகையில் நிதி ஆணைக்குழு நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று நாம் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறோமே யல்லாமல் வேறல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹண்டே: ஒரே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் நிதி ஆணைக்குழு நிரந்தரமாக இருக்க வேண்டும்-இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. நான் இங்கே நோட்ஸில் கூட எழுதியிருக்கிறேன்.

நான் சொன்னது வந்து, loans and indebtedness to states there should be a Federal Debt Commission. அதை நான் சொன்னது சரியான வகையிலே, அவர் அதே நேரத்தில் முழுமையாக நான் பேசியதைக் கேட்கவில்லையோ தெரியவில்லை. ஆனால் நான் சொன்னது — Permanent Finance Commission இருக்க வேண்டுமா இருக்க வேண்டாமா என்று நான் சொல்லவில்லை. I personnaly prefer a permanent Finance Commission என்னைப் பொறுத்த அளவிலே I agree with the Chief Minister. We should have a permanent Finance Commission. நான் என்ன ஆதாய கமிஷனிலேயே நமக்குச் சரியான வகையிலே—நல்ல வகையிலே—பாதுகாப்பு கிடைக்கவில்லை—We have not got the relief even in that Commission. ஆகவே நீங்கள் இன்னும் loans and indebtedness. அதுகூட அதே. பணியைக் கூட Finance கமிஷனே செய்யலாமே என்று சொன்னேன். அதுக்காக நான் Thoughtless என்று சொன்னேன். சரியான வகையிலே ஒரு பெர்மனன்ட் கமிஷன் இருக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற கமிஷனால் நமக்கு சரியான வகையில் பாதுகாப்பு கிடைக்கவில்லை 'லோல்ன்ஸ் அண்டு இன்டெட்டட்னெஸ் என்று கேட்டும் அந்தப் பணத்தை பைனான்ஸ் கமிஷன் தரவில்லையே என்பதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது உள்ள முறையில் 'பெடரல் டெட் கமிஷன்' தேவைப்படுகிறது. ஆஸ்திரேலியாவிலே எப்படி நிரந்தர நிதி ஆணைக்குழு இருக்கிறதோ அதைப் போலவே ஆஸ்திரேலியாவில் 'லோன்ஸ் கவுன்சில்' என்கின்ற ஒரு குழுவும் அங்கே இருக்கிறது. அதைத்தான் 'பென்டாஸ்டிக்' என்று சொன்னார்கள். பெடரல் டெட் கமிஷன் தேவையில்லையென்பது அவர்களுடைய வாதம். ஆனால் நான் சொல்லுகின்ற 'பெடரல் டெட் கமிஷன்' மாநிலங்கள், மத்திய அரசிடம் பட்டிருக்கிற கடன்களுக்கு எல்லாம் நிரந்தரமான ஒரு பரிகாரத்தைக் காண்பதற்காக இருக்க வேண்டும் என்றும் அதற்குப் பிறகு அந்தக் குழு வளர்ச்சிப் பணிகளுக்காக தன்னை மா[illegible]ச் செயல்பட வேண்டும் என்பதுதான். இதுவும் புதுமை அ[illegible] ஆஸ்திரேலியாவில் 'லோன்ஸ் கவுன்சில்' என்ற பெயரால் '[illegible]ரல் டெட் கமிஷன்' இருக்கிறது என்பதையும் நான் இங்கே [illegible]வித்துக் கொள்கிறேன்.

'அகில இந்திய சர்வீஸ் வேண்டாம் என்று சொல்லுகிறீர்களே என்றுகூடக் கேட்டார்கள். அகில இந்திய சர்வீஸ் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், இருப்பதுபோல அண்ணு அவர்கள் காலத்திலேயே-அகில இந்தியப் பணியாக-அகில இந்திய எஞ்சினியர் பணி (ஐ.இ.எஸ்)-இந்தியன் எஞ்சினீயரிங் சர்வீஸ்-வேண்டும் என்று அவர்களிடத்திலே அந்தப் பொறியியல் துறையினர் எல்லாம் தூது கூட வந்தார்கள். அதைப்போலவே அகில இந்திய மெடிக்கல் சர்வீஸ் வேண்டும் என்று அண்ணு அவர்களிடத்திலே சொன்ஞர்கள். அதற்கு மத்திய சர்க்காரும், தமிழக அரசிடம் அபிப்பிராயம் கேட்டபோது, அண்ணு முதலமைச்சராக இருந்த காலத்தில் அவர்கள், 'அகில இந்திய அளவில் எஞ்ஜினியரிங் சர்வீஸை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்' என்று சொல்லி விட்டார்கள். அதைப் போலவே, 'அகில இந்திய மெடிக்கல் சர்வீஸையும் ஒத்துக் கொள்ள மாட்டேன்' என்று சொல்லிவிட்டார்கள். ஆனுல் அண்ணு அவர்கள் அன்று சொன்ஞலும் இன்றும் அந்தத் தொல்லை விட்டபாடில்லை. அடிக்கடி மத்திய அரசு நம்மைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியன் என்சினியரிங் சர்வீசுக்கு நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்; இந்தியன் மெடிக்கல் சர்வீசுக்கு நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்கார் நம்மை வலியுறுத்திக் கொண்டே வருகிறது.

ரயில்வேயைப் பற்றிச் சொன்ஞர்கள். 'இன்டர் ஸ்டேட் ரயில்வே'-மாநிலங்களுக்குள் ரயில்வே என்ருல் ஏதோ கல்கத்தாவிலிருந்து ஹவுரா மெயில் சென்னைக்கு வரும்—இது எப்படிச் சாத்தியம்' என்றெல்லாம் ஹண்டே அவர்கள் தனக்கே உரிய கேலியுடன் அன்றைய தினம் பேசிஞர்கள். இப்பொழுது கேலி, கண்டனம், ஏசல், இழிமொழி, குப்பைக்கூடை, திருடன், கொலைகாரன்-இப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் அந்தப் பக்கத்தில் இருந்து நிறைய விழுந்திருக்கின்றன. எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று அண்ணு சொன்ன பொன்மொழியை மனத்திலே வைத்துக் கொண்டு அதையெல்லாம் தாங்கிக்கொண்டுதான் இந்த பதிலை நான் அளித்துக்கொண்டிருக்கிறேன்.

இது ஒன்றும் ஏதோ அப்படி மாநில அளவில் ரயில்வே-இன்டர் ஸ்டேட் ரயில்வே மோதிக்கொள்ளும்-மோதிக்கொள்ளக் கூடிய கருத்துக்கள் என்று கூறப்படுமேயாஞல், நான் அவர்களுக்குச் சொல்லுவேன், பாண்டிச்சேரியும் காரைக்காலும் பிரெஞ்சுக் காலனியாக இருந்தபோது தினசரி ரயில் போய்வந்து கொண்டுதான் இருந்தது. மாநில சுயாட்சி வந்துவிட்டால் இந்த ரயில் அங்கே போகுமா? அந்த இஞ்சின் இங்கே போகுமா என்றெல்லாம் கேட்க வேண்டியதில்லை.

'ஃப்ரான்ஸ்-காண்டினன்டல் ரயில்வே என்கின்ற ஒரு ரயில்வே பாரிசிலிருந்து புறப்பட்டு ரஷ்யாவில் உள்ள விளாடிவாஸ்டாக் வரையில் போய் வருவதாக நான் அறிகிறேன். நான் போனதில்லை. மற்ற எல்லா இடங்களுக்கும் போயிருக்கிறேன். இன்னும் ரஷியாவுக்குப் போகவில்லை. நான், ரயில் அப்படிப் போவதாகப் படித்து இருக்கிறேன். மாநிலத்திற்கு மாநிலம் கூட அல்ல; பல நாடுகளைக் கடந்து அந்த ரயில் போய் வருகிறது. ஆகவே, இங்கே ரயில்வே துறையைப் பொறுத்த வரையில் கருத்துக் குழப்பம் அடைய வேண்டிய அவசியம் இல்லை.

(ஹண்டே எழுந்து நிற்கிறார்)


**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுக்கீடு இருக்கலாம். ஆனால் எடுத்ததெற்கெல்லாம் ஒவ்வொரு முறையும் குறுக்கீடு இருந்தால் நல்லதல்ல.

**திரு. எச். வி. ஹண்டே :** நான் விளக்கம் பெறுவதற்காகக் கேடகிறேன். அது திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. என் வாதத்திலே ஒரே நாடாக இருக்கிறது. ஒரே நாடாக இருந்த காலத்தில் அங்கே இன்டர்-ஸ்டேட் ரயில்வேஸ் ஒரு கம்பெனியாக இருந்தது. இவர் சொல்வது வெவ்வேறு நாடாக இருக்க கூடிய அந்த இடத்தில் கூட ஒரே ரயில்வே கம்பெனிதான் இருக்கிறது. இங்கே அந்தக் கஷ்டம் கிடையாது என்று சொல்லுகிறேன்.

In fact, he is strengthening my argument. Though this is there are different states, one train is looking after. Here it is one country; why not one train look after?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இங்கேகூட பல கம்பனிகளுடைய பஸ்கள் இருக்கின்றன. இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்கு பஸ்கள் போகின்றன. பாண்டிச்சேரிக்குப் போகிறது. ஆந்திராவுக்குப் போகிறது. ஆந்திராவிலிருந்து பஸ் இங்கே வருகிறது. ஏற்கெனவே ரயில்வே கூட டிஸ்டிரிக்ட் போர்டு அளவில் கூட நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் குழப்பமடையக் கூடிய அளவுக்குப் பெரிய பிரச்சினை அல்ல என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. விரைவில் முடிக்க வேண்டுமென்று தங்கள் அனுமதியோடு பேசுகின்றேன்.

மத்திய அரசு, மாநில அரசைச் சுரண்டுகிறது என்ற மிக முக்கியமான வாதத்தை நாம் அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ளுவேன். மத்திய அரசிடம் திரண்ட நிதி ஆதாரங்கள் இருக்கின்றன.



கொழுத்த வருமானங்களைக் கொடுக்கக்கூடிய வரி அமைப்புக்களெல்லாம் அவர்களுடைய கையிலிருக்கின்றன. நண்பர் ஆலடி அருணா அவர்களும், கந்தப்பன் அவர்களும், எல். கணேசன் அவர்களும், பழனிவேல் ராஜன் அவர்களும் பேசுகிற நேரத்தில் அவைகளையெல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். நேற்றைய தினம் நாவலர் அவர்கள் ஆற்றிய நீண்ட உரையிலும் அது பற்றிக் குறிப்பிட்டார்கள். இதற்கும் என்ன காரணமென்றால் 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தை அப்படியே பெரும்பாலும் காப்பி அடித்திருக்கின்ற காரணத்தினாலேதான் நாம் இந்த சங்கடத்துக்கு ஆளாகியிருக்கின்றோம். வேறு சில விஷயங்களிலே மாற்றங்கள் 1935-வது ஆண்டுச் சட்டத்தில் செய்திருந்தாலும்கூட, நிதி உறவுகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மாற்றமும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் செய்திருக்கிற ஒரே ஒரு மாற்றம், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு ஏற்படும் என்பதுதான். இதைத் தவிர, மத்திய, மாநில நிதி உறவுகளைப் பொறுத்தவரையில், கொச்சையாகச் சொல்ல வேண்டுமானால், ஈயடிச்சான் காப்பி என்று சொல்வார்களே அதைத்தான் செய்திருக்கிறார்கள். 1935-ஆம் ஆண்டுச் சட்டம் எந்தச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டது? அப்பொழுது நடைபெற்றது போலீஸ் ராஜ்யம். ஆகவே, அந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்கள் வகுக்கப்பட்டன—வரைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் இப்பொழுது நடப்பது 'வெல்பேர் ஸ்டேட்' என்று சொல்லுகின்றோம். மக்கள் சேமநல சர்க்கார் என்று சொல்லுகின்றோம். ஆகவே போலீஸ் ராஜ்யத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் ஒரு வெல்ஃபேர் ஸ்டேட்டுக்குப் பொருந்தும் என்று வாதிப்பது சரியானதல்ல. மத்திய அரசு திரண்ட நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, மாநிலங்களை ஆட்டிப் படைக்கிறது. மாநில முதலமைச்சர்கள் பிச்சைப் பாத்திரங்களோடு அடிக்கடி டெல்லிக்குச் செல்லவேண்டிய நிலையிருக்கிறது என்று நானல்ல, மைசூர் முதலமைச்சராக இருந்த வீரேந்திர பட்டில், பதவியிலே இருக்கும்போதே இதைக் குறிப்பிட்டார். மத்திய அரசினிடத்திலே இருக்கிற பணம் யாருடைய பணம்? மக்கள் தருகின்ற பணம். மாநில அரசுகளின் வாயிலாகப் போய்ச் சேருகின்ற



பணம். அந்தக் கணக்கைக் கொஞ்சம் பார்த்தால் மத்திய அரசுக்கு வருமான வரி, எக்ஸைஸ் வரி, எஸ்டேட் வரி இப்படி, வரிகளின் மூலமாகப் பணம் வசூலாகிறது. சிறு சேமிப்பின் மூலம் மத்திய அரசுக்குப் பணம் கிடைக்கிறது. அதிலே ஒரு பகுதி மாநில அரசுக்குத் திருப்பித் தரப்படுகிறது. கூட்டுறவு வங்கி உட்பட, வங்கிகள் மூலமாகவும், இன்சூரன்ஸ் மூலமாகவும், பிராவிடண்ட் பண்ட் மூலமாகவும் மத்திய அரசு கடன் பெறுகிறது. இந்த இனங்களெல்லாம் சேர்ந்ததுதான் மத்திய அரசின் வருமானம். இப்பொழுது மாநில அரசின் வருமானத்தைப் பார்த்தால், தாங்களே வசூலிக்கும் வரி, மாநில அரசுகள் அவற்றின் கடமையை ஆற்றுவதற்குப் போதவில்லை. அரசியல் சட்டப்படி வருமான வரி, எக்சைஸ் வரி ஆகியவைகளில் மத்திய அரசு மாநில அரசுக்கு ஒரு பங்கு கொடுக்கிறது. ஆனால் இப்பொழுது நாம் சொல்லுகின்ற கணக்கின்படி தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 1974-75-ல் மாத்திரம் தமிழ்நாட்டிலேயிருந்து மத்திய அரசுக்கு மக்கள் தருகின்ற தொகை 356·75 கோடி ரூபாய். இவற்றில், வரிகளில் பங்குத் தொகையாகத் திருப்பித் தரப்படுவது 73·75 கோடி ரூபாய். சிறு சேமிப்பின் மூலம் 1974-'75-ல் தமிழ்நாட்டில் வசூலாகவிருக்கிற தொகை 14·58 கோடி. அதில் திரும்பி வருவது 8·75 கோடி. மீதித் தொகையை மத்திய அரசே வைத்துக் கொள்கிறது. வங்கிகளின் மூலம், இன்சூரன்ஸ் மூலம், பிராவிடெண்ட் ஃபண்ட் மூலம் மத்திய அரசு தமிழ்நாட்டிலே கடன் எழுப்பப் போகிற தொகை 24·6 கோடி ரூபாய்.

வருவாய் இனத்தைப் பார்த்தால் 1974-'75-ல் திட்டத்திற்கான மானியம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கப் போகிற தொகை 29 கோடி ரூபாய். திட்டமில்லாத மானியமாகக் கிடைக்கப் போகிற தொகை 20 கோடி. நேரடியாக மத்திய அரசு தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் போவது 111 கோடி. ஆக 1974-'75-ல் மத்திய அரசு தமிழ்நாட்டிலேயிருந்து பெறும் மொத்தத் தொகை 395·43 கோடி ரூபாய். இதிலே நமக்கு வந்தது போக மத்தியிலே தங்கிவிடுவது 153·43 கோடி. இந்த ஆண்டிற்கு மாத்திரம் தங்கப் போகிறது. 153 கோடி ரூபாய் தமிழ்நாட்டின் பணம் மத்திய அரசிலே தங்கிவிடப் போகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இந்தத் தொகை 732·5 கோடியாக இருக்கும். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தத் தொகை 1,748·58 கோடி ரூபாயாக இருக்கும். இந்தப் பணம் தமிழ்நாட்டிலேயேயிருந்தால்-ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்—நான் அதற்காகத் தமிழ்நாடு தனியாக ஆகவேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கேள்வியை எழுப்புவதாக அர்த்தமல்ல. தனிநாடு கேட்பதாக அர்த்தமல்ல! பாதுகாப்புச் செலவுக்கு மத்திய அரசுக்குப் பணம் வேண்டாமா? வேண்டும்! பாதுகாப்புச் செலவுக்கு எவ்வளவு பணம் தேவையோ, அதை மாநில அரசு கணக்கிட்டுத் தரும் என்று பி.சி. ராயே அப்போது சொல்லியிருக்கின்றார். அதற்குத் தேவையான பணத்தை ஒதுக்கலாம். 10 ஆண்டுக்காலத்தில் 1,700 கோடி ரூபாய் மத்திய அரசு தமிழ்நாட்டுப் பணத்தை வைத்துக் கொள்ளப்போகிறது.

அண்மையில் சச்சிதானந்த சின்கா என்ற ஓர் ஆசிரியர் எழுதிய ஒரு புத்தகத்தில் சொல்லுகிறார்—என்ன வர்ணிக்கிறார்

என்றால்,—''மாநிலங்களின் நிலையையும் மத்திய நிலையையும் ஒப்பிட்டுப் பேசும்போது, உள்நாட்டுக் காலனியாக இருக்கிறது.'' (இண்டர்னல் காலனி)-என்று இந்த மாநிலங்களின் நிலைமையைச் சச்சிதானந்த சின்கா என்பவர் வர்ணிக்கிறார். ஆகவே இந்த உள்நாட்டுக் காலனி நிலைமை இருக்கலாமா? 1,700 கோடி ரூபாய் மத்திய அரசிலே 10 ஆண்டுக் காலத்தில் ஒப்படைத்துவிட்டு, மாநில அரசு நம்முடைய வளத்தைப் பெருக்குவதற்காக வாட்டத்தோடு, வருத்தத்தோடு உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமா? இந்த உள்நாட்டுக் காலனி முறை ஒழிக்கப்பட வேண்டாமா?

**திரு. ஏ.ஆர். மாரிமுத்து**: தலைவர் அவர்களே, 10 ஆண்டு களிலே தமிழ்நாட்டுப் பணம் 1,700 கோடி மத்திய அரசுக்குச் செல்லுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாதுகாப்பிற்காக வருடத்திற்கு 3,000 கோடி செலவழிப்பதாக அறிகிறேன். அதிலே நமது பங்கு 1,700 கோடியாக இருக்கலாம். இதில் நம் பங்கு என்ன? பத்தாண்டுகளிலே நமக்குக் கிடைக்கக் கூடிய மிச்சம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அதற்காகத்தான் எல்லாவற்றையும் அங்கே கொடுத்து மறுபடியும் எடுத்துக் கொள் வதற்குப் பதிலாக, இந்த இரண்டு வழிப் போக்குவரத்துக்குப் பதி லாக எங்களுக்கு எவ்வளவு, உங்களுக்கு எவ்வளவு என்று நாம் கொடுத்துவிடலாம்—கொடுக்கின்ற அதிகாரம் நாம் வைத்திருக்க லாம்—என்பதுதான் மாநில சுயாட்சியின் தாத்பர்யம். அங்கே கொடுத்து விட்டு, மறுபடி எங்களுக்குப் பங்கு பிரித்துக் கொடு என்பதைவிட பின்தங்கிய மாநிலங்கள் கஷ்டப்பட்டால்கூட அவை களையும் கருத்திலே கொண்டு, மத்திய சர்க்காருக்குப் பணம் தேவைப்பட்டால் எவ்வளவு பணம் தேவைப்படுகிறது என்பதைக் கருத்திலே கொண்டு, இந்த மாநில சுயாட்சி அடிப்படையில் அளிக்கலாம் என்பதுதான் நம்முடைய கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விரிவாகச் சொல்ல வேண்டுமானால் மத்திய அரசு இன்றைக்கு ஒரு கண்ணுக்குத் தெரியாத மாய அரசாக இருக்கிறது. அத னுடைய நடவடிக்கைகளினுடைய விளைவுதான் நம்முடைய கண் ணுக்குத் தெரிகிறதே தவிர, அதன் வலிமையான கரங்கள்தான் நமக்குத் தெரிகிறதே தவிர, மத்திய அரசு என்பது பாமர மனிதனுடைய கண்ணுக்கே தெரிவதில்லை. மத்திய அரசு எப் போது தெரிகிறது என்றால், பட்ஜெட் வாரத்தில் பாமர மனித னுக்குத் தெரிகிறது. அதைத் தவிர மற்ற நேரங்களில் மத்திய அரசு தெரிவதில்லை. பணக்காரர்கள், தொழில் அதிபர்கள், மத்திய அரசினுடைய வருமான வரிக் கொள்கையை நம்பியிருக் கின்றவர்கள் இவர்களெல்லாம் அடிக்கடி டெல்லி செல்லுகிறார் கள். அவர்களுக்குத்தான் மத்திய அரசு தெரிகிறது. பாமர மனிதனுக்கு பட்ஜெட் நேரத்திலேதான் மத்திய அரசு தெரிகிறது. பாமரனுக்கு மத்திய அரசினுடைய பிரதமரைத் தெரியும். பட்ஜெட் வாரத்தில் நிதியமைச்சரைத் தெரியும். அதைத் தவிர மற்றவர்கள் நெருக்கமானவர்கள் அல்ல. பாமர மனிதனுக்குக்

கோபம் வந்தால் ரெயில்வே தெரியும். இதைத் தவிர மத்திய சர்க்காரைப்பற்றி மாநிலங்களிலே இருக்கிற பாமர மனிதன் அறிந்து கொள்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை.

ஆகவேதான் மத்திய அரசு நெடும் தூரத்திலிருக்கிறது. மக்களுடைய சுக துக்கங்களைப் பற்றிச் சிந்திக்கின்ற இடத்தைத் தாண்டி வெகு தொலைவிலே இருக்கிறது. ஆகவே மத்திய அரசினுடைய துறைகள் குறைக்கப்பட்டு மக்களோடு தொடர்புகொண்ருக்கிற மாநில அரசுக்கு அதிகாரங்கள் மிகைப்படுத்தப்பட்டு, வலுவுக்குத் தேவையான அதிகாரங்கள் அங்கே வைக்கப்பட்டு, வளத்தைப் பெருக்குவதற்குத் தேவையான அதிகாரங்கள் இங்கே வைக்கப்பட்டு, அதிகாரங்கள் கொடு என்று சொல்லுகிறார்கள். அதிக அதிகாரங்கள் தேவை என்று சொல்லுகிறார்கள். நாம் கேட்கிற மாநில சுயாட்சியிலே என்ன ஒரே ஒரு சிறிய வேறுபாடு என்னவென்றால்—அதிகாரங்களைக் கொடுத்தால் திரும்ப எடுத்துக் கொள்கிற உரிமை அவர்களுக்கு உண்டு. மாநில சுயாட்சியிலே அது அல்ல. அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால் மறுபடியும் தொட முடியாது, அவர்கள் அந்த அதிகாரங்களை! அதுதான் மாநில சுயாட்சிக் கொள்கை. அதிகாரங்களைக்கொடு என்று சொன்னால் கொடுத்து, அதிகாரங்களைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியும். 5, 6 உதாரணங்கள் இங்கே சொன்னேன். கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் எப்படி எப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன என்று! ஆகவே தான், மாநில சுயாட்சிக் கொள்கையிலே, கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் எடுத்துக் கொள்ளப்பட முடியாது என்பதுதான் நம்முடைய கருத்து. அந்த அடிப்படையிலே தான் மாநில சுயாட்சி நாம் கோருகின்றோம்.

இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு ஊறு தேட வேண்டுமென்பது நம்முடைய நோக்கம் அல்ல. இந்தியாவினுடைய ஒற்றுமையை இன்றைக்கு நாம் பிரதானமாகக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவினுடைய வலிமையை—இந்தியாவினுடைய பாதுகாப்பை—இந்தியாவினுடையபலத்தை—இன்றைக்கு திராவிடமுன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு அக்கறையோடு கவனிக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால்-நான் என்னுடைய தீர்மானத்தின் முன்னுரையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல—போர்மேகம் இந்தியாவைச்சூழ்ந்த நேரத்தில் பங்களா தேஷ் பிரச்சினையின்போது பிரதமரை அழைத்து 6 கோடி ரூபாய் யுத்த நிதிக்காகக் கொடுத்த ஒரே ஒரு மாநிலம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற மாநிலம்தான். தென்னிந்தியாவில் வேறு எந்த மாநிலமும் தரவில்லை. இலட்சக்கணக்கிலேதான் தந்தார்கள். நாம் 6 கோடி ரூபாய் போர் நிதிக்காகத் தந்தோம்; நம்முடைய போராட்ட வீரர்களுக்கு எவ்வளவு ஊக்கம் தரவேண்டுமோ அவ்வளவு ஊக்கம் தந்தோம். ஆகவே இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டுக்கு நாம் என்றைக்கும் எதிரிகள் அல்ல-நாம் பிரிவினைவாதிகள் அல்ல என்று அழுத்தந்திருத்தமாக ஆயிரம் முறை சொல்லிவிட்டோம். யாருடைய தேசபக்திக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்




களுடைய தேசபக்தி எள்ளளவும்-இம்மியளவும் குறைந்துவிடவில்லை —குறைந்ததல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு நிறைவேற்றப்படுகின்ற இந்தத் தீர்மானம் சரித்திரப் பிரசித்திபெற்ற தீர்மானம். திரு. பழனிவேல் ராஜன் சொன்னதைப்போல் சுடர் விளக்கை ஏற்றி வைத்திருக்கின்றோம். நம்முடைய மணலி அவர்கள் சொன்னதுபோல—இது எந்த ஒரு கட்சிக்கும் உரிய தீர்மானம் அல்ல. தமிழகத்தில் இருக்கிற எல்லாக் கட்சிக்கும்—இந்தியாவில் இருக்கிற எல்லாக் கட்சிக்கும் உரிய தீர்மானம். பொதுவானது. இந்த ஒரு கட்சி எடுத்துக் கொண்டு, 'இது எங்கள் கட்சிக்கு உரியது' என்று வாதிட மாட்டோம். நான் மணலி போன்ற பெரியவர்களுக்கு உத்தர வாதம் அளிக்கிறேன்—இது அனைவருக்கும் பொதுவான தீர்மானம்—தமிழ்ச் சமுதாயத்தைக் காக்க—இந்தியாவிலிருக்கிற தேசிய இனங்களைக் காக்க—இந்தியாவிலுள்ள மாநிலங்களின் உரிமைகளைக்காக்க —இந்தியாவிலுள்ள மாநிலங்கள் சுயமரியாதையோடு வாழ இந்தத் தீர்மானம் மெத்தவும் பயன்படும்.

பொருளாதாரத்திலே வளமும்—சுயமரியாதைத் தன்மையிலே தன்னிகரற்ற நிலையும் விட்டுக் கொடுக்கின்ற நேரத்தில்-மத்திய சர்க்காருக்கு அடிமைகளாக இருக்க மாட்டோம்-'உறவுக்குக் கை கொடுப்போம்—அதே நேரத்தில் உரிமைக்குக்குரல் கொடுப்போம்' —என்கின்ற அளவிலேதான் 'மத்தியிலே கூட்டாட்சி—மாநிலத்தில் சுயாட்சி' என்கின்ற முழக்கத்தை—பேரறிஞர் அண்ணா அவர்களின் பேரால்—நான் இந்த மாமன்றத்திலே இன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை நீங்கள் எல்லாம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன் வணக்கம்.

# சட்ட மேலவையில்

தலைவர் அவர்களே!

பெருமைக்குரிய இந்த மன்றத்தின் முன் வைத்த மாநில சுயாட்சித் தீர்மானம் குறித்து நான்கு நாட்களாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றக் கட்சியினுடைய தலைவர்களும் நல்ல செழிப்பான கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, ஆளுங் கட்சியின் சார்பிலும்—ஆளுங் கட்சியின் தோழமைக் கட்சிகளான தமிழரசுக் கழகத்தின் சார்பிலும், முஸ்லீம் லீக்—பார்வர்டு பிளாக்—உழைப்பாளர் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பிலும் ஆதரவுக் கருத்துக்கள் பலவற்றை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

இந்த மன்றத்தில் சுயேச்சை உறுப்பினராக அமர்ந்திருக்கின்ற நண்பர் டிமாண்டி அவர்கள், தீர்மானத்தை அப்படியே ஒத்துக் கொள்ளாவிட்டாலும் 'தமிழக அரசு எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படுகின்ற நேரம் வந்து விட்டது' என்பதைச் சுட்டிக் காட்டினார். நண்பர் சித்ரா நாராயணசாமி அவர்கள்—'மக்களோடு நெருங்கியிருப்பது மாநில அரசுதான், மத்திய அரசு மக்கள் பிரச்சினையில் வெகு தொலைவில் இருக்கிறது' என்ற கருத்தை வெளியிட்டதன் வாயிலாக இந்தத் தீர்மானத்துக்கான அடிப்படையை ஒப்புக் கொண்டார் என்றே நான் நம்புகின்றேன்.

நம்முடைய நண்பர் சுவாமிநாதன் அவர்கள் என்றும்போல் மிகுந்த ஆர்வத்தோடு, இது போன்ற ஒரு தீர்மானம் எப்போது வரும் என்று காத்திருந்தவரைப் போல், 'மாநில சுயாட்சி தேவை என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றை நேற்றைய தினம் இங்கே வாரி வழங்கியிருக்கிறார்கள்.

இந்தியாவிலே உள்ள அரசுகளில் நம்முடைய மாநில அரசுதான் சிறந்தது என்பதைச் சுட்டிக் காட்டி, 'இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை' என்று குறிப்பிட்டு — ஆனால், மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் மோதுதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்,' என்கின்ற எச்சரிக்கையை நேற்றைய தினம் பேசிய நண்பர் வசந்த பாய் அவர்கள் தெரிவித்தார்கள். பத்திரிகைகளில் வேறு விதமாக வந்திருந்தாலும், அவைக் குறிப்பிலே அவர்களது பேச்சு அப்படித்தான் ஏறியிருக்கிறது என்பதை அனைவரும் படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.

பழைய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில், மத்திய மாநில உறவில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதைச் சூசகமாக அறிவித்து, ஒரு திருத்தத்தை எதிர்க் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கு அளித்திருப்பது மாத்திரமல்ல, நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டபோது, ''அதிகச் சுதந்திர

முள்ள — மாநில சுயாட்சியை நான் விரும்புகிறேன்' என்றும் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பது நம்முடைய தீர் மானத்துக்கு நல்ல வலிவையும் — பொலிவையும் சேர்க்கும் என்பதை நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் இன்றைக்கு அதிக அதிகாரங் களை வகித்துக் கொண்டிருக்கின்ற டெல்லியின் ஆளுங் கட்சிக்குச் சொந்தக்காரர் என்கின்ற காரணத்தால், ''நீங்கள் கேட்பதெல்லாம் சரி; ஆனால் இப்போது கேட்காதீர்கள்! சூழ்நிலை சரியில்லை — பிறகு கேளுங்கள்'' என்று, நேற்றைய தினம் அவர்கள் நமக்கு அறிவுரையை வழங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே ஆளுங் கட்சி — தோழமைக் கட்சிகள் — எதிர்க் கட்சிகள் — சுயேச்சை உறுப்பினர்கள் அனைவருமே இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானத்தை முழுக்க ஆதரித்தும், முக்கால் பகுதியில் சில பேர் ஆதரித்தும் 'இது போதாது இன்னும் வேகமாக இந்தத் தீர்மானம் இருக்கவேண்டும்' என்கின்ற அளவிலே தங்களுடைய திருத்தங்களை எழுதி, இந்த மன்றத்திலே வைக்காவிட்டாலும், விளக்கிக் கூறியும் ஆதரவுகள் தந்திருக்கிறார்கள் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மத்தியிலே கூட்டாட்சி — மாநிலத்திலே சுயாட்சி என்கின்ற தீர்மானம் சட்டப் பேரவையிலும் ஐந்து நாட்கள் மிகக் கடுமை யாக விவாதிக்கப்பட்டு, இங்கே நான்கு நாட்கள் விவாதிக்கப்பட்டு, அது நிறைவேறுகின்ற தருணத்திலே நாம் எல்லாம் இங்கே இருக் கிறோம்.

சுயாட்சியுள்ள மாநிலங்கள் இருந்தால்தான், கூட்டாட்சி மத்தியிலே இருப்பதாகப் பொருள். ஆகவேதான் உண்மையான கூட்டாட்சி மத்தியிலே இருக்க வேண்டுமென்றால் மாநிலங்கள் சுயாட்சி பெற்றவைகளாக இருக்க வேண்டும் என்கின்ற இந்தத் தீர்மானத்தை; நான் முன்மொழிந்து, அதன் தொடர்பான கருத் துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

கூட்டாட்சி என்கின்ற பெயரில் — உண்மையான கூட்டாட்சி இல்லாமல் இன்றைக்கு இந்தியாவில் ஒற்றை யாட்சிதான் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒற்றுமைக்கும் — ஒன்றிவிடுவதற் கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். ஒற்றுமை என்பது வேறு — ஒன்றிவிடுவது என்பது வேறு. வேற்றுமையிலே ஒற்றுமை — அந்த ஒற்றுமையைத்தான் 'மாநிலத் தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி' என்கின்ற முழக்கத்தின் மூலமாக — என்கின்ற கோரிக்கையின் மூலமாக தி.மு. கழகமும் அதனுடைய தோழமைக் கட்சிகளும் இன்றைக்கு எடுத்துச் சொல்லி வருகின்றன.

இந்தியாவினுடைய தேசிய கீதத்தில் — ஜனகனமண கீதத் தில் — பஞ்சாப், சிந்து, குஜராத், மராட்டா, திராவிட, உத்கல, வங்கா என்கின்ற இந்த வார்த்தைகள் ஏன் வருகின்றன? ஏன் இந்தியாவைப் பற்றிப் பொதுவான ஒரு பாடலாக அது இல்லை?



பல நாகரிகங்கள் — பல பழக்க வழக்கங்கள் — பல பகுதி மக்கள்—பல கலாச்சாரங்கள்—பல மொழிகள்—மொழி உணர்வுகள் — இப்படிப்பட்ட மக்கள் இந்தியாவிலே வாழ்கின்ற காரணத்தினாலேதான் தாகூர் அவர்கள் எழுதிய அந்த தேசிய கீதத்தில் பஞ்சாபும் — சிந்தும் — குஜராத்தும் — மராட்டியமும் — திராவிட — உத்கல — வங்கம் என்றெல்லாம் பகுதிகளைப் பிரித்துப் பிரித்து எடுத்துக் காட்டி இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்ததுதான் இந்தியா என்கின்ற அளவிலேதான், அந்த தேசிய கீதம் அமைந்திருக்கின்றது.

நான் அடிக்கடி சொல்வதுண்டு — ஓவியம் ஒன்று தீட்டுவதென்றால்—இங்கே வைக்கப்பட்டு இருக்கின்ற திருவள்ளுவருடைய ஓவியத்தை எடுத்துக் கொண்டால் கூட அதிலே பல வித வண்ணங்கள் இருக்கின்றன — ஆடைக்கு வெண்மை நிறம் — உடலுக்குப் பழுப்பு நிறம் — சுற்றி நீல நிறம் அல்லது பச்சை நிறம் என்கின்ற வண்ணங்களைத் தனித் தனியாக ஓவியன் தீட்டினால்தான் நாம் அழகாகப் பார்க்கின்ற திருவள்ளுவருடைய இந்தப் படத்தை— இந்த ஓவியத்தை நாம் காண இயலும்.

அதற்குப் பதிலாக எல்லா வண்ணமும் ஒன்றுதான் என்று எல்லாவற்றையும் ஒரே கோப்பையிலே ஊற்றி — ஒரே தூரிகையால் எடுத்து, வள்ளுவருடைய ஓவியத்தை ஓர் ஓவியன் எழுத ஆரம்பித்தால் அது எப்படியிருக்குமோ அப்படித்தான் இந்தியா ஒன்றியிருப்பது என்கின்ற வாதமாகும். அதை மறுத்துத்தான்— இன்றைக்கு இந்த மாநில சுயாட்சி — மத்தியிலே கூட்டாட்சி என்கின்ற பெயரால் வேற்றுமையிலே நாம் ஒற்றுமையைக் காண்போம் என்று, கூறி வருகின்றோம்.

இந்த வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண்போம் என்று கூறுகின்ற நேரத்தில், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை இங்குக் குறிப்பிட்டார்கள் — 'நாங்கள் கூட ஒரு காலத்திலே பிரிந்து போகின்ற உரிமையோடு கூடிய மாநிலங்கள் இந்தியாவில் அமைய வேண்டும் என்று சொன்னோம். ஆனால் இந்தியா பிரிந்த பிறகு — பாகிஸ்தான் உருவான பிறகு, அதை நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்துக்கு ஆளானோம் இந்தியாவினுடைய வலிவுக்காக', என்று குறிப்பிட்டார்கள்.

கிணற்றிலே நம்முடைய வீட்டுப் பிள்ளை விழுந்து இறந்து விட்டால், அடுத்த பிள்ளை விழாமல் இருப்பதற்காக அந்தக் கிணற்றின் மீது இரும்புக் கம்பியால் ஆன ஒரு வலையைப் போடுவது சகஜம். அதற்குப் பதிலாகக் கிணற்றிலே தண்ணீர் இருப்பதால் தானே குழந்தை விழுந்து இறந்து விடுகின்றது என்று, அதனுடைய ஊற்றுக் கண்களை அடைத்துவிடுவது முறையல்ல.

பாகிஸ்தான் பிரிந்தபிறகு அதைத்தான் செய்தார்கள். மாநிலங்களினுடைய அதிகாரங்கள் அத்தனையையும் பிடுங்கிக்கொண்டு —மாநிலங்களினுடைய உரிமைகள் அத்தனையையும் அடைத்து விட்டு, எல்லாவற்றையும் கொண்டு போய் மத்தியிலே குவிக்கின்ற ஒரு மனப்பான்மை ஏற்பட்ட காரணத்தினாலேதான், இன்றைக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கை இந்த அளவுக்கு அவசியம் என்று உணரப்படுகிறது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

''மாநில சுயாட்சி என்று கேட்கிறீர்களே, அது இல்லையா? அது 1947-ஆம் ஆண்டே, அல்லது 1950-ஆம் ஆண்டே —அரசியல் சட்டத்திலே நாங்கள் சொல்லியிருக்கிறோமே! — State Autonomy இருக்கிறதே! நீங்கள் அதிகாரங்கள் வேண்டும் என்று கேளுங்கள். நீங்கள் ஏன் மாநில சுயாட்சி என்று கேட்கிறீர்கள்? மாநில சுயாட்சி தான் இருக்கிறதே'' என்று வாதிட்டார் எதிர்க் கட்சித் தலைவர். இருப்பதைக்கேட்கும்போது ஏன் இப்படிக் கோபிக்கிறீர்கள் என்று தான் எனக்குப் புரியவில்லை! இருப்பதைத்தான் வலியுறுத்துகிறோம்.

ஆனால் ஒன்று! நாலு வயதிலே தைக்கப்பட்ட சட்டை அந்த மாநில சுயாட்சி. இப்போது நாற்பது வயதிலே அதைப் போட்டுக் கொள் என்று சொல்கிறீர்கள். நாங்கள் சட்டை வேண்டும் என்று சொல்லுகிறோம். 'அதுதான் நாலு வயதிலேயே தைத்துத் தொலைத்து விட்டேனே, அதைப் போட்டுக்கொள்ளேன்' என்று சொல்லுவதைப் போல், நீங்கள் நாலாவது வயதில் எனக்குத் தைத்த சட்டையை நாற்பது வயதைத் தாண்டிய பிறகும் — போட்டுக் கொள் என்று சொல்லுகிறீர்கள். 'சட்டை தானே வேண்டும் என்று கேட்கிறாய்! இதோ இருக்கிறது சட்டை' என்று சொல்லுகிறீர்கள்!

நான் சொல்வது, நான் இப்போது போட்டுக் கொள்ளத் தக்க சட்டை எனக்கு வேண்டும் என்று கேட்கின்றேன். அதுதான்

இன்றைக்கு — நானே — தி.மு. கழகமோ — சிலம்புச் செல்வரோ — அல்லது மற்றவர்களோ இங்கே மாநில சுயாட்சிக்காக வாதிடுகிறோம் என்றால் — மாநில சுயாட்சி என்பது இப்போதிருக்கின்ற அரசியல் சட்டத்திலே இருக்கின்ற சொல் என்பதைப் புரிந்து கொண்டுதான் கேட்கிறோம்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்போது தாம் தந்த விளக்கத்தின் மூலமாகக் காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்களுக்கு ஒரு நல்ல அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

காங்கிரஸிலே இருக்கின்ற பல பேருக்கு மாநில சுயாட்சி என்பது ஒரு பொல்லாத சொல்—ஒரு பாவகரமான வார்த்தை என்கின்ற எண்ணம் இருந்து வருகிறது. அதைப் போக்குகின்ற வகையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 'மாநில சுயாட்சி என்கின்ற வார்த்தை புதிய வார்த்தையல்ல; அது ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட வார்த்தைதான்; இருக்கின்ற வார்த்தைதான்' என்று குறிப்பிட்டதற்காக, நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. கே. ராஜாராம்:** சட்டையை உவமானம் சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள் — அதையே நான் திருப்பிச் சொல்லுகிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டை சின்னச் சட்டை. இப்போது பெரிய சட்டை வேண்டும் என்று கேட்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. அதைத்தான் நானும் சொன்னேன். ஏற்கெனவே இருக்கிற மாநில சுயாட்சி போதாது — அதிக மாநில சுயாட்சி வேண்டும் — அதிக அதிகாரமுள்ள சுயாட்சி வேண்டும் என்று கேளுங்கள்; முழுக்க, முழுக்க வேறு எந்த வார்த்தையும் —அடைமொழியே இல்லாமல் மாநில சுயாட்சி வேண்டும் என்று சொன்னால் அது வேறுவிதமான அர்த்தத்தைப் பிறர் கற்பிக்கும் படியாக ஏற்படுகிறது. அது வேண்டாம்! 'அதிக அதிகாரம் உள்ள சுயாட்சி வேண்டும். பெரிய சட்டை வேண்டும்' என்று கேளுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுதான் தீர்மானத்திலேயே போட்டிருக்கின்றோம். ராஜமன்னார் குழு அறிக்கை மீது தமிழக அரசு பரிந்துரை செய்துள்ள கருத்துரைகளை ஏற்று, 'உண்மையான கூட்டாட்சி மத்தியிலும், மாநில சுயாட்சி மாநிலங்களிலே மலரவும் வேண்டும்' என்கின்ற தீர்மானம்தான் போட்டிருக்கின்றோம். ஆகவே சட்டை கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிவிட்ட பிறகு எங்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லை என்பதை நான் மிகுந்த நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கூட்டாட்சி, எப்பொழுது உருவாயிற்று? கூட்டாட்சி என்றால் என்ன? அது எப்படி உருவாயிற்று? என்பவைகளைப் பற்றியெல்லாம் நம்முடைய தமிழரசுக் கழகத்தினுடைய தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் இங்கே விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அமெரிக்க நாட்டில்—முதலில் அங்குக் குடியேறியவர்கள், 13

குடியேற்ற நாடுகளாகத்தான் அமெரிக்க நாட்டைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்த 13 குடியேற்ற நாடுகள் பிரிட்டனை எதிர்க்க வேண்டிய சூழ்நிலைக்காளானபோது, அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் தங்களுக்குள்ளே ஒவ்வொரு குடியேற்ற நாட்டினுடையபிரதிநிதியையும் சந்தித்து,தங்களுடைய எதிரிகளை எப்படி மடக்குவது, அல்லது வெற்றி கொள்வது என்பதை விவாதிப்பதற்குச் சந்திப்பதற்கு ஏற்ற ஓர் இடம் தேவை என்று கருதினார்கள். அப்படிக் கருதியபோதுதான் 'காண்டிநென்டல் காங்கிரஸ்' என்ற ஓர் அமைப்பு அமெரிக்காவிலே உதயம் ஆயிற்று. 1776-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ஆம் தேதி 13 காலனிகளும் பிரிட்டனோடு போர் புரிந்ததற்குப் பிறகு சுதந்தர நாடுகள் என்கின்ற அந்தஸ்தைப் பெற்றன. அந்த அந்தஸ்து அவைகளுக்குக் கிடைத்த பிறகு, அந்த 13 சுதந்தர அரசுகளின் பிரதிநிதிகள் அடங்கிய 'கான்ஃபெடரேஷன்' ஒன்று அமைக்கப் பட்டது. ஆனால், அந்த கான்ஃபெடரேஷன் எப்படி இருந்தது என்றால், அதற்கும் பொது மக்களுக்கும் எள்ளளவும் தொடர்பும் இல்லாமலிருந்தது. அது மாத்திரம் அல்ல, அந்தக் கான்ஃபெடரேஷனுக்கு ஒரு கட்டுக்கோப்பான இராணுவப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. அந்தக் காலத்திலே வாஷிங்டன் தலைமை மாத்திரம் அந்தக் குடியேற்ற நாடுகளுக்குக் கிடைத்திராவிட்டால், அவர்கள் பிரிட்டானிய நாட்டோடு நடைபெற்ற அந்தப் போராட்டத்தில், அந்தக் குடியேற்ற நாடுகள் தோற்றுப் போயிருக்கக் கூடும் என்றுதான் சரித்திர ஆசிரியர்கள் எல்லாம் சொல்லுகின்றார்கள். அந்தப் போராட்டம் முடிந்த பிறகு, வாஷிங்டனே எடுத்துச் சொன்னார், 'நாடு முழுவதும் ஊடுருவிச் செல்லக் கூடிய அதிகாரம் எங்கேயாவது வைக்கப்பட வேண்டும்' என்கின்ற கருத்தை-வாஷிங்டனே வெளியிட்ட பிறகு 1787-ஆம் ஆண்டு அனபலிஸ் என்கின்ற நகரத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது.

அந்த மாநாட்டில்தான் இந்த 13 குடியேற்ற நாடுகளும் மறு சிந்தனை செய்தார்கள். நாம் பதின்மூன்று பிரதிநிதிகள் கூடிப் பேசும் அமைப்பாக இருப்பதா? அல்லது வேறு விதத்திலே இது அமைவதா? என்கின்ற மறு சிந்தனையை அங்கேதான் செய்தார்கள். முதன் முதலாக ஃபெடரல்-கூட்டாட்சி என்கின்ற சொல் அந்த மாநாட்டிலேதான் பயன்படுத்தப்பட்டது. பதின்மூன்று அரசுகளும், அந்த மாநாட்டிற்குப் பிறகு, தங்கள் தங்கள் அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொடுத்து, அந்த அதிகாரங்களை மத்திய அரசு என்கின்ற ஒரு புதிய அமைப்பினிடத்திலே சேர்த்து, மத்திய அரசு, மாநில அரசுகள் என்கின்ற கூட்டாட்சித் தத்துவம் அதற்குப் பிறகுதான் அமெரிக்காவிலே செயல்படத் தொடங்கியது. ஆனால், அமெரிக்க அரசியல் சட்டத்தில் ஃபெடரல்—கூட்டாட்சி என்கின்ற சொல்லுக்கு இடமில்லை என்றாலும், அந்தத் தத்துவம் அமெரிக்காவிலே செயல்படத் தொடங்கியது.

இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்தைப் பற்றி நம்முடைய நண்பர்—ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது, சொன்னார்கள், ''வியர் எழுதிய கருத்தில்

நம்முடைய இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்தை வெகுவாக சிலாகித்துப் பேசியிருக்கிறார்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். லியர் எழுதிய மகத்தான ஒரு நூல் "ஃபெடரல் கவர்ன்மெண்ட்"—அநேகமாக இந்த நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்களில் மிகச் சிறந்த நூல் லியர் எழுதிய அந்த நூல்தான் என்று பாராட்டப்படுகிறது. அந்த நூலில் அவர் சொல்லுகிறார்:

By the Federal Principle I mean that the method of dividing power though, that the Central and the Regional Governments are each within a sphere—co-ordination and independent.

அதாவது 'மத்திய அரசும் மாநில அரசுகளும் தன் ஆதிக்கத்திற்கு உட்பட்டவைகளில் கூட்டாகவும், ஆனால் சுதந்தரமாகவும் இயங்குகின்ற வகையில் அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ளும் முறைதான் கூட்டாட்சி முறைத் தத்துவமாகும்' என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்தை லியர் பாராட்டிப் பேசியதாக ஆறுமுகசாமி சொன்னார். ஆனால் கூட்டாட்சி என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தை லியர் தந்துள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது. அதே நூலில் இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார் :



Neither Central nor Regional Government is subordinate to the other, and each Government should be limited its own sphere and within the sphere should be independent of the other.

அதாவது 'மத்திய அரசும், மாநில அரசுகளும் தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்த வரையில் சுதந்தரமானவை; அந்த அதிகாரங்களைப் பொறுத்த வரையில் ஒன்றுக்கொன்று தாழ்ந்தவையல்ல; கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து நடக்கக் கூடியவை அல்ல, என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆறுமுகசாமி அவர்கள் நேற்றுப் புகழ்ந்துரைத்த இந்திய அரசியல் சட்டம் — இப்போது நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பாராட்டிய இந்திய அரசியல் சட்டம், எதனுடைய மையத்தை அடிப்படையாக வைத்து எழுந்தது?

1935-ஆம ஆண்டு வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்ட அரசியல் சட்டத்தினுடைய மறுபதிப்புத்தான் இன்றைக்கு இருக்கின்ற இந்திய அரசியல் சட்டம். பெரும்பான்மையான விஷயங்கள் அப்படியே பிரதிபலிக்கின்ற அரசியல் சட்டத்தைத்தான் இன்றைக்கு நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஓரிரு மாற்றங்கள் இருக்கலாம்.

ஆனால், அந்த அரசியல் சட்டம் உருவாகி, பிரகடனப்படுத்தப்பட்டபோது, அந்தச் சட்டத்தின்படி தேர்தலில் போட்டியிட்டாலும், சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தச் சட்டத்தின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாலும், சட்ட சபைக்கு உள்ளேயிருந்தும், வெளியே இருந்தும் அந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவது என்று 1936-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி 'பெய்ஸ்பூர்' மாநாட்டில் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியதாகப் பட்டாபி சீத்தாராமய்யா எழுதிய ''காங்கிரஸ் மகாசபை சரித்திரம்'' என்கின்ற புத்தகத்தில் நாம் தெளிவாகக் காணுகிறோம்.

அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பதவிப் பிரமாணம் செய்துவிட்டு, அதை எதிர்க்கலாமா என்கின்ற கேள்வி இந்த அவையிலே எழா விட்டாலும், வேறு அவைகளிலே எழுந்தது. மேடைகளிலே, ஏடுகளிலே இன்றைக்கு அந்தக் கேள்வி எழக் காணுகிறோம்.

1935-ல் வெள்ளைக்காரன் வகுத்துத் தந்த அரசியல் சட்டத்தை, சட்ட மன்றத் தேர்தலிலே போட்டியிட்டு உள்ளே சென்று, பதவிப் பிரமாணம் செய்து கொண்டு, அதை உள்ளிருந்தும் எதிர்ப்பது—வெளியேயிருந்தும் எதிர்ப்பது என்கின்ற முடிவினை, அன்றைக்கு காங்கிரஸ் கட்சி தன்னுடைய கமிட்டிக் கூட்டத்திலே மிக முக்கியமான தீர்மானமாக நிறைவேற்றியது.

அந்தத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு 1937 பிப்ரவரியில் வார்தாவிலே கூடி, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றிய ஒரு பெரிய கேள்விக்கு, ஆராய்ச்சி நடத்தினார்கள். அந்த ஆராய்ச்சியினுடைய முடிவில் 'ராஜவிசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொண்டு தான் தீர வேண்டும், அப்படி எடுத்துக் கொள்வதற்கு மாற்றாக

முதலிலே மக்களிடத்திலே ஒரு பிரமாணம் எடுத்துக் கொண்டு, மக்களுக்காக, நாட்டுச் சுதந்தரத்திற்காக நாங்கள் போராடுவோம் என்று ஒரு பிரமாணத்தை எடுத்துக் கொண்டு, அதற்குப் பிறகு சட்ட மன்றத்திற்குள்ளே சென்று, அந்த ராஜ விசுவரசப் பிரமாணத்தைஎடுத்துக் கொள்ளலாம்' என்று ஒரு திருத்தத்தோடு தீர்மானத்தை வார்தாவில் நிறைவேற்றினூர்கள்.

அதுவரையிலே மந்திரிப் பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதில்லை என்பதில் திட்டவட்டமாக இருந்தார்கள். அதற்குப் பிறகு—இரண்டு திங்களுக்குப் பிறகு ஜூலைத் திங்களில் அதே வார்தாவில் மீண்டும் அவர்கள் கூடி, 'மந்திரிப் பதவிகளையும் ஏற்றுக் கொள்ளலாம்' என்கின்ற முடிவிற்கு வந்து, இந்தியாவிலே சற்றேறப்ப ஆறு அல்லது ஏழு மாகாணங்களில் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டார்கள். அப்படி மந்திரிப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட மாகாணங்களில் ஒன்ருகத்தான் — இன்றைக்குத் தமிழ்நாடு என்று அழைக்கப்படுகின்ற—அன்றைய சென்னை மாகாணம், பிரதமர் ராஜாஜி அவர்களுடைய பரிபாலனத்தின் கீழ் முதன் முதலாக வந்தது.

அப்போது பிரதமர் என்று அழைக்கப்பட்டார்.. பிரதமர் ராஜாஜி அவர்கள் 1939-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5-ந் தேதி சட்ட சபையிலே பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார்.

''மத்திய போலீஸ் புலனுய்வுத் துறையை அறவே ஒழிக்க வேண்டுமென்று சென்னை மாகாணம் கேட்டுக் கொண்டது. அதை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது'' என்று, 1939-ஆம் ஆண்டு ராஜாஜி குறைபட்டுக் கொண்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாகாண அரசை நம்பாமல், மத்திய போலீஸ் துறை, மாகாண அரசாங்கங்களை வேவு பார்ப்பதைக் காங்கிரஸ் மந்திரிகள் அத்தனை பேரும் கண்டித்தார்கள். இவைகளை எல்லாம் பட்டாபி சீதாராமையா தம்முடைய நூலிலே பல இடங்களிலே குறிப்பிடுகிருர்கள். ஆனல் 1935-வது ஆண்டின் அரசியல் சட்டத்தை 1939-வது ஆண்டில் ராஜாஜி கண்டித்தார். 'மத்திய போலீஸ் புலனுய்வுத் துறை ஒன்று மாநில அரசுகளை வேவு பார்ப்பது கூடாது. அது உடனே நீக்கப்பட வேண்டும்' என்று கண்டித்தார்.

ஆனல், இன்றைக்கும் இருக்கின்ற அரசியல் சட்டத்தில் அதே அதிகாரம் மத்திய அரசிடத்தில்தான் இருக்கிறது. ஒரேயொரு வித்தியாசம் என்னவென்ருல் வெள்ளைக்காரன் சட்டம் போட்ட போது 1935-வது வருட சட்டத்தில் ''சென்ட்ரல் இன்டலிஜென்ஸ் ப்யூரோ'' என்று அதற்குப் பெயர். இப்போது அதை மாற்றி விட்டார்கள். ''சென்ட்ரல் ப்யூரோ ஆஃப் இன்டலிஜென்ஸ்'' என்று மாற்றியிருக்கிருர்கள். அவ்வளவுதான் வித்தியாசம்!

திரு. கே. ராஜாராம்: அப்போது மத்திய அரசாங்கத்தில் வெள்ளையர்களே இருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். வெள்ளையர்களுடைய ஆட்சி நடந்த காலத்தில் வெள்ளையர்களுடைய போலீசார் நம்மை வேவு பார்ப்பது கூடாது என்று ராஜாஜி அவர்கள் மறுத்தார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வெள்ளையர்கள் ஆட்சியை எங்கே கவிழ்த்துவிடுவார்களோ என்று பயந்து வேவு பார்த்தார்கள். நான் கேட்கிறேன், டெல்லியிலே இருக்கின்ற ஆட்சியைக் கவிழ்த்து விடுகின்ற அப்படிப்பட்ட துரோகிகளா மாநிலங்களிலே இருக்கிறார்கள்? அவ்வளவு பயத்தோடு டெல்லியிலே ஆட்சி இருக்கத் தேவைதானா? எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, மத்தியிலே இருப்பவர்கள் எல்லாம் யோக்கியமானவர்கள், புனிதமானவர்கள், தூய்மையானவர்கள்! மாநிலங்களிலே இருப்பவர்கள் எல்லாம் அயோக்கியர்கள், தூய்மையற்றவர்கள், களங்கமுள்ளவர்கள், கயவர்கள் என்கின்ற ஒரு எண்ணத்தோடு, ஒரு அரசு அமைப்பு இருக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய வாதம் ஆகும். அந்த வாதத்தைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாகாணங்களுக்குக் கொடுத்த அதிகாரங்கள், சுயாட்சி என்றுதான் அழைக்கப்பட்டது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட அதை ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அந்த மாகாண சுயாட்சியை அன்றைக்கு இருந்த தேசியவாதிகள், காங்கிரஸ் தலைவர்கள், யாரும் மாகாண சுயாட்சி என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அதை கவர்னர் சுயாட்சி என்கின்ற செல்லப் பெயரிட்டு அன்றைக்கு அழைத்திருக்கின்றார்கள். ஆனால், அந்த கவர்னர் சுயாட்சி—காங்கிரஸ்காரர்களால் கண்டிக்கப்பட்ட அந்த கவர்னர் சுயாட்சி, இந்தப் புதிய அரசியல் சட்டத்திலே நீக்கப்பட்டுவிட்டதா என்றால்—நீக்கப்படவில்லை.

ஆகவேதான் நாம் சொல்கின்றோம் — 1935-வது ஆண்டு வெள்ளைக்காரன் கொண்டு வந்த அதே சட்டம் தான் திரும்ப அரசியல் சட்டமாக, சில பல மாற்றங்களோடு நமக்குத் தரப்பட்டு இருக்கின்றது. ஆகவேதான் அதிலே பெருத்த திருத்தங்களை, மாற்றங்களை நாம் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம்.

ஒரு உதாரணம், நாம் எண்ணிப் பார்ப்போமேயானால் — 1935-வது ஆண்டு பிரிட்டிஷார் கொண்டு வந்த அந்தச் சட்டத்தில் மத்திய அரசினுடைய அதிகாரங்கள் 59. இது குறித்து மத்திய சட்டசபைதான் சட்டம் இயற்றும்; மாகாணங்களின் பட்டியல், சட்டம், ஒழுங்கு, கல்வி போன்ற 54 இனங்கள். இது குறித்து மாகாண சட்டசபை சட்டம் இயற்றும்.

இது தவிர, பிரிட்டிஷ் பார்லிமெண்டரி கூட்டுக் குழு — அது தெரிவித்த யோசனையின்படி சரித்திரத்திலே இது வரை எந்த முன் உதாரணமும் இல்லை. அதாவது பொதுப் பட்டியல் என்கின்ற ஒரு பட்டியலை — 1935-வது ஆண்டுச் சட்டத்தின்படி அவர்கள் கொண்டு வந்தார்கள். அதுதான் கன்கரண்ட் லிஸ்ட்.

**மக்களோடு நெருங்கியிருப்பது மாநில அரசுதான்**



அந்தப் பொதுப் பட்டியலில் 36 இனங்கள் அதிலே அடங்கும். மத்திய அரசின் முடிவுதான் இதிலே முடிந்த முடிவாக இருந்தது.

இந்த மூன்று பட்டியலிலும் அடங்காத புதிய அதிகாரங்கள்—அதாவது எஞ்சிய அதிகாரங்கள்—இவைகளை யார் வைத்துக் கொள்வது என்று தீர்மானிக்கும் பொறுப்பு 1935-வது ஆண்டுச் சட்டத்தில் வைஸ்ராய்க்கு விடப்பட்டிருந்தது. இப்போது மத்திய அரசுக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வளவுதான் அதிலே வித்தியாசம்.

''கண்கரண்ட் லிஸ்ட்'' என்கின்ற பொதுவாக சட்டம் இயற்றும் அதிகாரம் என்ற நீண்ட பட்டியல் இருக்கிறதே, அது உலகத்திலே எந்தக் கூட்டாட்சி முறையிலும், பொதுப்பட்டியல் இவ்வளவு நீளமான பட்டியல் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தை ஒப்பிட்டு திரு. கே. சந்தானம் அவர்கள் நம்முடைய அரசியல் சட்டத்தைப் பற்றிக் கூறுகிற நேரத்தில் அழகாகக் குறிப்பிடுகிறார் :

''பிரிட்டிஷ் அரசை வன்மையாக எதிர்த்து வந்த இந்தியத் தலைவர்கள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலை நாட்டும் நோக்கத்தோடு ஒரு அரசியல் சட்டத்தை அப்படியே அடிமைத் தனத்துடன் ஒப்புக்கொண்ட அசாதாரணமான உண்மையை விளக்குவது சுலபமானதல்ல.''

''பெடரல், பைனான்ஷியல் ரிலேஷன்ஸ் அண்டு அதர் எஸ்ஸேஸ்'' என்கின்ற நூலில் கே. சந்தானம் அவர்கள் இவ்வளவு தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

அந்தக் காலத்தில் எப்படி அந்தச் சட்டம் எதிர்க்கப்பட்ட தென்றால் இன்றைக்குச் சொல்லுகிறார்களே-அரசியல் சட்டத்தைப் பற்றிக் குறை கூறலாமா? அதைப் பற்றி வேகமாகத் தாக்கிப் பேசலாமா? என்று! பட்டாபி சீதாராமையா எழுதிய காங்கிரஸ் மகாசபை சரித்திரம் என்ற புத்தகத்தில் அன்றைக்கு இருந்த சட்டத்தைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையில், ''காங்கிரஸ்காரர்கள் பல்வேறு சமயங்களில் புதிய அரசியல் ஆக்டை (1935)வது ஆக்டை உடைத்தெறிய வேண்டும் என்றும், ஏற்பதில்லை என்றும் பிரச்சாரம் செய்தார்கள். அதை எதிர்த்து நாடெங்கும் அர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இருந்தும் ஏன் காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைக்கப்பெற்றன? இது அந்தப் புதிய இந்திய அரசியல் ஆக்ட்டை ஏற்றுக் கொள்வதாகாதா, என்கின்ற ஐயம் பலருக்குத் தோன்றியது. காரியக் கமிட்டியில் கூடப் பதவியேற்பை அங்கீகரிக்காத பலர் இருந்தனர். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்று சொல்லலாமே தவிர, வேறு எதுவும் சொல்ல இயலாது.

"அந்த நாளைய காங்கிரஸ் தீர்மானங்களை நன்கு ஊன்றிப்படிப்பவர்களுக்குத் தெரியும்-காங்கிரசின் நோக்கம் அந்தச் சந்தர்ப்பத்தில் ஒத்துழையாமை அல்ல: இந்தப் புது அரசியல் ஆக்ட்டுக்கு உட்பட்டு, செயல்பட்டே அதை உடைத்தெறிவதுதான் காங்கிரசின் நோக்கமாக அப்போதிருந்தது.''

அந்த 1935-வது ஆண்டுச் சட்டம்தான் இன்றைக்கும் இருக்கிறது. அன்றைக்கு உடைத்தெறியப்பட வேண்டும்—நொறுக்கப்பட வேண்டும்—கிழித்தெறியப்பட வேண்டும்—அதை எதிர்த்து நாடெங்கும் அர்த்தாலே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறினோம்: இன்றைக்கு திரு. கே. சந்தானம் அவர்களே ஒப்புக்கொள்ளுகின்றார். அடிமைத் தனமாக அதே சட்டத்தைத் தான் நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம் என்று! அது திருத்தப்பட வேண்டாமா என்பதுதான் நம்முடைய கேள்வி. இந்தக் கேள்வியை திசை திருப்பக் கூடாது என்றுதான் நான் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரையும் கேட்டுக் கொள்கிறேன்.

1935-ஆம் ஆண்டுச் சட்டத்தில் 59 ஆக இருந்த மத்திய அரசுப் பட்டியல் இப்போது 97 அதிகாரங்களாக உயர்ந்திருக்கின்றது. ஆக, 59 ஆக இருந்த மத்திய அரசின் அதிகாரங்கள், மேலும் 38 அதிகமாகி 97 அதிகாரங்களாக ஆகியிருக்கின்றன.

54 அதிகாரங்களைப் பெற்றிருந்த மாநில அரசுப் பட்டியல் மேலும் 12 அதிகாரங்களை மாத்திரம் பெற்று 66 அதிகாரங்கள் உடையதாக இன்றைக்கு இருக்கிறது.

36 அதிகாரங்களைக் கொண்டிருந்த பொதுப்பட்டியல் மேலும் 11 அதிகாரங்களைப்பெற்று 47 அதிகாரங்களுடன் இன்றைக்கு விளங்குகிறது.

இந்த 54 அதிகாரங்கள்—மாநில அரசின் அதிகாரங்கள் 66 ஆக ஆயிற்றே அது எப்படியென்றால், மத்திய அரசு ஏதாவது அதிகாரத்தை விட்டுக் கொடுத்துவிட்டதா என்றால், இல்லை! எந்த

அதிகாரத்தையும் மத்திய அரசு விட்டுக் கொடுக்கவில்லை. எஞ்சிய அதிகாரங்கள்—பொதுப்பட்டியலுக்கு வந்து, அவைகளிலேயிருந்து இந்த 10, 12 அதிகாரங்கள் மாநிலப் பட்டியலுக்கு வந்ததே தவிர வேறல்ல.

ஆகவே இப்படி 1935-வது ஆண்டுச் சட்டத்தின் பிரதிபலிப்பாக நேர் வாரிசாகத்தான் அரசியல் சட்டம் இருக்கிறதேயல்லாமல் வேறல்ல. இதைத்தான் நாம் இன்றைக்குப் பிரச்னைக்கு உரியதாக ஆக்கியிருக்கின்றோம்.

இந்த அரசியல் சட்டத்திலே கட்டளையிடுகின்ற அதிகாரங்கள் காங்கிரஸ்காரர்கள் அன்று எடுத்துச் சொன்னார்களே, இது மாகாண சுயாட்சி அல்ல, கவர்னர் சுயாட்சி என்று— அந்தக் கவர்னர் சுயாட்சித் தன்மைகள் இவைகள் தவறுதலாகப் பயன் படுத்தப்படுமா. இப்படி எல்லாம் நீங்கள் சந்தேகப்படலாமா, சட்டத்திலே தானே அப்படி இருக்கிறது? அதற்காகப் பயப்படலாமா?என்கின்ற கருத்துக்கள் எல்லாம் கூடத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நடைமுறை என்ன? 1957-ஆம் ஆண்டு கேரளத்தில் என்ன நடந்தது? தோழர் இ.எம்.எஸ் நம்பூதிரிபாத் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுகேரளத்திலே கம்யூனிஸ்டு கட்சியினுடைய ஆட்சி நடத்தி வந்தார். அந்த ஆட்சி எப்படிக் கவிழ்க்கப்பட்டது? மக்கள் இயக்கம் என்ற பெயரால் ஒரு இயக்கம்—அந்த இயக்கத்தின் காரணமாக சில கிளர்ச்சிகள்! கவர்னர் ஆட்சியைக் கலைக்கிறார், என்ன காரணங்கள் சொல்லி? கம்யூனிஸ்ட் கைதிகள் சில பேரை முதலமைச்சர் விடுதலை செய்து விட்டார்; கம்யூனிஸ்ட் ஆட்சி விடுதலை செய்து விட்டது. அரசியல் கொலைகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன; நிர்வாகத்திலே ஆட்சி அடிக்கடி தலையிடுகிறது. இப்படிப்பட்ட காரணங்கள் சொல்லப்பட்டு இ.எம்.எஸ் அவர்களுடைய ஆட்சி 1959-ஆம் ஆண்டு கேரளத்தில் கவிழ்க்கப்படுகிறது. இவைகள் எல்லாம் கலைக்கத் தகுந்த காரணங்கள் என்றால், அதற்குப் பிறகு இந்தியாவிலே காங்கிரஸ் கட்சி ஆண்ட அல்லது ஆளுகின்ற மாநிலங்களில் எத்தனை இடங்களில் இந்தக் கலைப்புகள் நடைபெற்று இருக்க வேண்டும்!

ஆகவே அரசியல் சட்டத்திலே இன்றைக்குக் கவர்னருக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் துர்விநியோகப்படுத்தப்படுகின்றன; துஷ் பிரயோகம் செய்யப்படுகின்றன.

கேட்கலாம், வேறு மாநிலங்களிலே கலைக்கப்படவில்லையா என்று! அங்கெல்லாம் சட்டசபைகள் கலைக்கப்படவில்லை. மந்திரி சபைகள் கலைக்கப்பட்டன. மந்திரி சபைகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டன. கேரளத்தில் அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, அப்பொழுது பஞ்சாப் மாகாணத்தின் கவர்னராக இருந்த என்.வி. காட்கில் அவர்கள், வன்மையாக அதைக் கண்டிக்கிறார்; என்ன சொல்லிக் கண்டிக்கிறார்? ‘‘ஐந்தாண்டுகள் பதவியில் தொடர்ந்து இருக்கக் கேரள கம்யூனிஸ்டுகளுக்கு முழு உரிமை இருக்கிறது. அவர்கள் தாமாக ராஜிநாமா செய்திருக்க வேண்டும் அல்லது சட்டசபையில் தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டில்

ஒன்று நடைபெற்றுலொழிய, அந்த அரசை டிஸ்மிஸ் செய்வது அநியாயம்" — பஞ்சாப் மாநிலத்தினுடைய கவர்னராக இருந்த என்.வி. காட்கில் இந்தக் கண்டனத்தைத் தெரிவிக்கிறார்.

நான் கேட்கிறேன். அதற்குக் குறைந்த புரட்சியா, 1965-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே இந்தி எதிர்ப்பின் காரணமாக நடைபெற்ற புரட்சி? அதை விடக் குறைவான கொலைகளா? அந்த அளவுக்கு இங்கே நாசம் ஏற்பட்டது. அந்த அளவுக்குப் புரட்சி ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த குல்ஜாரி லால் நந்தா நாடாளுமன்றத்திலே என்ன சொன்னார்? 'எவ்வளவு புரட்சிக்கும் ஈடுகொடுத்து அசையாத கற்பாறைபோல் பக்தவத்சலம் அமர்ந்திருக்கிறார்' என்று பாராட்டினரே தவிர, அதைப்போல் கவர்னருடைய தாக்கீது, பிறப்பிக்கப்பட்டு, அன்றைய ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதா? சட்டமன்றம் கலைக்கப்பட்டதா? கிடையாது!


அதே 1965-ல் நான் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலிருந்து கொண்டு பத்திரிகை படிக்கிறேன். என்ன செய்தி வருகிறது? கேரளாவிலே மீண்டும் தேர்தல் நடைபெறுகிறது. கேரள சட்டமன்றத்தினுடைய மொத்த உறுப்பினர்கள் 133 பேர். அந்த 133 பேருக்கும் நடைபெற்ற தேர்தலில், இடதுசாரி கம்யூனிஸ்டுகள் 40 பேர் வெற்றி பெற்றார்கள். காங்கிரஸ் 30 இடங்களைப் பெறுகிறது. கவர்னர் என்ன செய்திருக்க வேண்டும்? 40 பேராக உள்ளவர்களை அல்லது 30 பேராக உள்ளவர்களையே கூட அழைத்து, 'உங்களோடு எந்தெந்தக் கட்சிகள் சேருகிறார்கள்? ஆட்சி அமைக்கிறீர்களா?' கேட்டார்களா? இல்லை! அதற்குப் பதிலாக என்ன நடந்தது? சட்டசபையே கூட்டப்படவில்லை. எம்.எல்.ஏக்கள் பதவிப் பிரமாணமே செய்து கொள்ளவில்லை. சட்டசபை கலைக்கப்பட்டது. தேர்தல் முடிகிறது. இரண்டு நாளைக்கெல்லாம் அந்தத் தேர்தல் செல்லாது என்கின்ற வகையிலே சட்டசபை அங்கே கலைக்கப்படுகிறது.

குஜராத்திலே புரட்சி நடைபெற்றதே—முதலமைச்சர் ராஜினமா செய்கின்ற அளவுக்கு,—அவரை ராஜினமாச் செய்யச் சொல்லுகின்ற அளவுக்குப் புரட்சி நடைபெற்றதே! மந்திரி சபை டிஸ்மிஸ் செய்யப்பட்டதா? அது டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்றால் சட்டசபை ஏன் கலைக்கப்படவில்லை? சட்டசபையை ஜனதிபதியோ, கவர்னரோ கலைத்தார்களா? இல்லை! மொரார்ஜி தேசாயினுடைய உண்ணுவிரதம் தான் சட்டசபையைக் கலைத்ததே தவிர—அதற்குப் பிறகு மக்கள் ஆர்த்தெழுந்த அந்தப் போராட்டம் தான் சட்டசபையைக் கலைத்ததே தவிர, சட்டசபையை இந்த அரசியல் சட்டத்தைக் கொண்டு கலைத்தார்களா என்றால், கலைக்கவில்லை. ஆகவே அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய முடியும், அரசியல் காரணங்களுக்காக, என்பதற்கு இவைகள் எல்லாம் நல்ல சான்றுகள்.

உத்தரப் பிரதேசத்தில் என்ன? உத்தரப் பிரதேசத்திலும் மந்திரி சபையைக் கலைத்தார்கள். சட்டசபையைக் கலைக்கவில்லை. சட்டசபையைக் கலைக்காதது மாத்திரமல்ல. பிறகு ஒரு முத

லமைச்சரை டில்லியிலேயிருந்து அனுப்புகிறார்கள், நீங்கள் போய் முதலமைச்சராக இருங்கள் என்று! சரி, முதலமைச்சர் வருகிறார். 5 மாதம் அல்லது 6 மாத காலம் முதலமைச்சர் பொறுப்பேற்று அவர் ஒரு கேபினெட்-அமைச்சரவையை அமைத்து, சட்டசபைக் கூட்டம் நடைபெற்றதா என்றால் இல்லை? 6 மாத காலம் சட்ட சபைக் கூட்டமே நடைபெறவில்லை. முதலமைச்சர், அமைச்சர்கள் பொறுப்பேற்கிறார்கள். இவர்களை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள், எத்தனை பேர் எதிர்க்கிறார்கள், என்று தெரியாது. சட்டசபை கலைக்கப்படவில்லை. ஆனால், அது, கூடாமல் ஒத்தி வைக்கப்பட்டி ருக்கிறது. தேர்தலிலே அதிகாரத்தோடு அமைச்சர்கள் ஈடுபடு கிறார்கள். இதற்கு வழி வகுத்திருப்பது எது? இன்றைக்கிருக் கின்ற அரசியல் சட்டம் அல்லவா? ஆகவே, இந்த அரசியல் சட்டத்தில் இன்றைக்குக் கட்டளையிடுகிற அதிகாரம், கவர்னருக்கு இருக்கின்ற அதிகாரம் எதேச்சதிகாரம், ஏகாதிபத்திய அதிகாரம் என்று சொன்னார்கள்-எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவு உதாரணங்களுக்குப் பிறகும். ஆகவே இவ்வளவையும் வைத்துக் கொண்டு......

திரு. கே. ராஜாராம்: கேரளாவில் நம்பூதிரிபாட் அரசாங்கத் தைக் கலைத்தது தவறு என்று வேண்டுமானால் தாங்கள் வாதிடு வதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. வாதிடுங்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஏன் கலைக்கவில்லை என்று உங்கள் வாயால் சொன்னது ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல. அது நல்லதல்ல என்று குறிப்பிடு கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான், கலைத்திருக்கக்கூடாதா? கலைக்கவில்லையே என்று வருத்தப்படவில்லை! நான் கேட்பது, அங்கு ஒரு நியாயம் இங்கு ஒரு நியாயம் இருக்கிறது என்பதற்குத்தான்! கேரளாவிலே இ.எம்.எஸ். ஆட்சி கலைக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த ஆதாரத்தைச் சொல்லுகிறேனேயல் லாமல் அங்கே கலைத்தீர்களே, இங்கே ஏன் கலைக்கவில்லை என்று கேட்கவில்லை. இங்கே கலைக்கவில்லையே-அங்கே ஏன் கலைத்தீர்கள்! அதைத்தான் கேட்கிறேன்.

குஜராத்திலே சட்டசபையை மாத்திரம் விட்டு வைக்கிறீர்கள். அமைச்சரவையைக் கலேக்கிறீர்கள். பீகாரில் அதேகதிதான் இன்றைக்கு! அதேகதியா-அதோ கதியா? தெரியாது! ஆக, பீகாரிலும் இந்த நிலைமை தான். ஆக அவர்களிடத்திலே இன்றைக்கு குடியரசுத் தலைவருடைய அதிகாரம் அல்லது கவர்னருடைய அதிகாரம்......

திரு. கே. ராஜாராம்: குஜராத்தில் சட்டசபையைக் கலைத்துவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சட்டசபையைக் கலைக்கவில்லை. அப்படிப்பட்ட உத்தரவு ஏதும் போடப்படவில்லை. 80 பேர் அவர்களாகவே ராஜினாமா செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு எம்.எல்.ஏ.யை மொட்டையடித்ததாகச் செய்திகள் எல்லாம் வந்தது. இதையெல்லாம் விளக்கிப் பேச வேண்டாம் என்று கருதினேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதெல்லாம் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன். ஒருவேளை இந்திரா காங்கிரஸ்காரர்மீது அவருக்கு என்ன கோபமோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே ஏற்பட்டது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் ஒரு மாநிலத்திற்கு ஒரு நீதி இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கின்ற காரணத்தினாலேதான்! இவைகளெல்லாம் ஒரேயடியாக மாற்றப்பட்டு, மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு விளங்க வேண்டுமென்று நாம் கூறுகின்றோம். இதைச் சொன்னால் பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி-நல்லவேளை—எதிர்க்கட்சித் தலைவர் அந்தச் சந்தேகத்திற்குச் செல்லவில்லை. ஆனால் எங்களுடைய வரலாற்றை ஆராய்ந்து பார்த்து, 'நீங்கள் ஒருகாலத்திலே பிரிவினை கேட்டீர்களே, திராவிட நாடு கேட்டீர்களே, தமிழ்நாடு தமிழருக்கே என்று சொன்னீர்களே ஆகவே சந்தேகப்படுறோம்!"

பிரிவினை பேசுவதை நாங்கள் விட்டுப் பத்தாண்டு காலத்திற்கு மேலாகிறது. ஆனால் நீங்கள் விடமாட்டேன் என்கிறீர்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை!

மாநில சுயாட்சி என்றால் உடனே அது பிரிவினை-அது சுதந்தரம் என்கின்ற வகையிலே இன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்காரர்கள் பேசுவது நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்: ''உங்களில் சில சொற்பொழிவாளர்கள், அல்லது தோழமைக் கட்சியில் உள்ள சில பேர் இப்படிப் பேசுகிறார்கள் வேகமாக'' என்று!

காங்கிரஸ் கட்சி சுதந்திரம் கேட்டபோது, அல்லது உத்தமர் காந்தியடிகள் அவர்கள் விடுதலை கேட்டபோது, அவர் அகிம்சை முறையில் அதை எய்திட வேண்டுமென்று பணியாற்றியபோது, அவரைச் சுற்றியும் பலர் வேகமாக இருந்தார்கள். நேத்தாஜி சுபாஸ் சந்திரபோஸை விடவா? பகவத் சிங்கை விடவா? சுகதேவை

விடவா? அவர்கள் எல்லாம் வேகமாக இருந்தார்கள்—அவர்கள் எல்லாம் அப்படி வேகமாகப் பேசினூர்கள் என்பதற்காக விடுதலையை விட்டுவிடவில்லை காந்தியடிகள்—இந்திய சுதந்தரத் ரத்தை விட்டு விடவில்லை காந்தியடிகள்!

அதைப்போல, வேகமாகப் பேசுகின்றவர்கள் வேகமாகக் கருத்துக்களைச் சொல்கிறவர்கள் எந்த இயக்கத்திலும் இருப்பார் கள். அதற்காகக் கருத்தின் ஆழத்தை விட்டுவிட்டு, வேகமாகப் பேசப்பட்ட பேச்சுக்களை மாத்திரம் அதிலே கொண்டு வந்து இணைத்துக் கொண்டு, 'அதுதான் இது', என்று வாதிப்பது நல்லதல்ல.

கரும்பைச் சாப்பிடுகிற நேரத்தில் அந்தக் கரும்பினுடைய துணுக்குகள் ஈறுகளில் பட்டு ரத்தம் ஒழுகுகிறது. அதற்காகக் கரும்பினுடைய சுவையை நாம் விட்டுவிட முடியாது. அதைப் போலத்தான்! ரத்தம் ஒழுகுகின்ற அளவிற்கு 'கரும்பின் சக்கைகள் சில நேரங்களில் ஈறுகளிலே பட்டுவிடலாம். அதைப்போலக் கருதிக் கொள்ள வேண்டுமேயல்லாமல், 'கரும்பு சாப்பிட்டால் ரத்தம் வரும், ஆகவே கரும்பே சாப்பிடாதே' என்று கூறிவிடக் கூடாது.

கொஞ்சம் ஜாக்கிரதையாகச் சாப்பிடச் சொல்லுங்கள், சாப் பிடுகிறோம். அதற்காகக் கரும்பே சாப்பிடாதே என்று சொல்லா தீர்கள் என்றுதான் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்றைக்கு மாநில சுயாட்சி என்பது புதுமையாகத் தெரிய லாம். இன்றைக்கு கேலிக்கு உரியதாக இருக்கலாம். எள்ளி நகையாடப்படலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்,- நம்முடைய மேலவையின் துணைத்தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அவர்கள் நல்ல பண்பாளர்; இந்த அவையிலே மிகுந்த பண்போடு எதிர்க்கட்சியை நடத்தி வருகிறூர்கள் என்ற இயல்புக்கு ஏற்ப, அவர்கள் இதை கேலி புரியாமல் இருக்கலாம். ஆனூல் இன்றைக்கு இது கேலிக்குரியதாக, கண்டனத்துக்கு உரியதாக நாட்டிலே பேசப்படுகின்றது.

நான் இன்று காலையிலே காந்தியடிகள் எழுதிய 'சத்திய சோதனை' என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். அதிலே ஓர் இடத்தில் காந்தியடிகள் சொல்கிறூர்:

அவர் லண்டனிலே வாழ்ந்தபோது-கிட்டத்தட்ட 80 ஆண்டு களுக்கு முன்பு லண்டனில் வாழ்ந்தபோது, வங்காளத்திலிருந்து ஒரு எழுத்தாளர், அவரை வந்து சந்தித்தார். அவருடைய பெயர், நாராயண ஏமச்சந்திரர். அவரோடு கொஞ்ச நாட்கள் பழகினூர். நண்பர்களானூர்கள். மிகுந்த எளிய வாழ்க்கை வாழ்பவர் அந்த நாராயண ஏமச்சந்திரர். அவர் அமெரிக்காவுக்குப் போக வேண்டு மென்று ஆசைப்பட்டாராம். காந்தியடிகள் ''உங்களுடைய பழக்க வழக்கங்களை எல்லாம் அங்கே யாராலும் புரிந்துகொள்ள

முடியாதே! அங்கே ஏன் செல்ல வேண்டுமென்று, காந்தியடிகள் கேட்டாராம். இல்லை நான் போய்த்தான் தீருவேன் என்று அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

அங்கே ஒரு நாள் வேட்டியுடனும், பனியனுடனும் அவர் தெருவிலே நடந்து வந்திருக்கிறார். 'இது ஆபாசமான உடை' என்று அவரைக் கைது செய்துவிட்டார்கள். எப்போது? என்பது ஆண்டுகளுக்கு முன்பு! இப்போது அதுகூட ஏன் கட்டி யிருக்கிறாய் என்று கேட்பார்கள்! அது வேறு விஷயம். எண்பது ஆண்டுகளுக்கு முன்பு நாராயண ஏமச்சந்திரர் வேட்டியும், பனியனும் போட்டுக் கொண்டு போனதைப் பார்த்து, அமெரிக்கா விலேயுள்ளவர்கள் 'இது ஆபாசமான உடை, இது கண்டனத்துக்கு உரியது' என்று சொல்லி அவரைக் கைது செய்து-விசாரணை நடத்தி நீண்ட நாளைக்குப் பிறகு விடுதலை செய்ததாகக் காந்தியடிகள் எழுதியிருக்கிறார்.

அதைப்போலத்தான் இன்றைக்கு ஏதோ ஒற்றுமை, ஒருமைப் பாடு, இந்தியா என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பவர்களுக் கிடையே மாநில சுயாட்சி என்கின்ற வேட்டியும் பனியனும் கட்டிக் கொண்டு வருவது ஆபாசமாகத் தெரியலாம். அரு வருக்கத் தக்கதாகத் தெரியலாம். இது கண்டனத்துக்கு உரிய தாகத் தெரியலாம். ஆகவே இவர்களைக் கைது செய்யுங்கள், இவர்கள் நாட்டுக்கு விரோதிகள் என்றெல்லாம் சொல்லலாம். -ஆனால் அந்த நாராயண ஏமச்சந்திரரைப் போலத்தான் இன் றைக்கு தி.மு. கழகம்—அமெரிக்காவிற்குள்ளே ஏமச்சந்திரர் எவ் வளவு துணிவோடு வேட்டியும் பனியனும் கட்டிக்கொண்டு போனாரோ, அதைப்போல இன்றைக்கு இந்தியாவிலே ஒற்றுமை என்கின்ற பெயரால், ஒருமைப்பாடு என்கின்ற பெயரால், பெற்ற சுதந்தரத்தைப் பேணிக் காக்காமல் ஒரு புதிய ஏகாதிபத்திய ஆட்சியை, டெல்லியிலே உருவாக்குவதற்குக் காரணமாக இருக் கின்றவர்களால் எள்ளி நகையாடப்படுமேயானால், நான் அவர் களுக்காக வருந்துகின்றேன். நான் பேரவையிலும் சொன்னேன். என்னுடைய முன்னுரையிலும் குறிப்பிட்டிருக்கின்றேன்.

தி.மு. கழகத்தைப் பொறுத்த வரையிலே பிரிவினைக் கொள் கையை விட்டுவிட்டோம். நண்பர் ஏ.கே. வில்வம் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே சொன்னார். ''நாங்கள் எதைச் சொன்னாலும் பகிரங்கமாகச் சொல்லுவோம்'' நாங்கள் மறைந்து கொண்டு சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஒளிந்து கொண்டு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பிரிவினையை விட்டு விட் டோம் என்று சொன்னோம். பத்தாண்டுக் காலமாக இந்தப் பிரி வினைப் பேச்சுக் கிடையாது. எங்களுடைய சட்ட திட்டப் புத்தகத்திலே அதை ஏற்றி விட்டோம்.

இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கிறோம். இந்த மாநில சுயாட்சி கேட்கின்ற நேரத்தில், '1947-லே கேட்டார்கள் காங்கிர சார், இப்போது நிலைமை வேறு' என்றெல்லாம் சொல்லக்கூடும். இது இன்றைக்கு இந்த அவையிலே மாத்திரம் எழுந்த பிரச்சினை யல்ல.

நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், ஆந்திரப் பிரதேசச் சட்டப் பேரவையில் *1959*-ஆம் ஆண்டு ஒரு தீர்மானம்-வாவில்ல கோபாலகிருஷ்ணய்யா என்பவர் கொடுக்கிறார். அது என்னவென்றால்,

> "Assembly recommends to the Government to impress upon the Government of India the need to amend the Constitution of India, so as to confined to Foreign Affairs, Defence, Communications, Planning and its co-ordination of States to Centre and greatly enlarge the State lists to ensure Federal structure and real Democracy."

என்கிற ஒரு தீர்மானத்தை *1959*-லே கொடுத்து அதைத் திரும்பப் பெறுகிறார். பிறகு *1970*-ல் அது விவாதிக்கப்பட்டு விடப்படுகிறது. *13-2-1970*-ல் அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு விவாதிக்க நேரமில்லாமல் காலாவதியாகிறது. *27-11-1970*ல் விவாதிக்கப்பட்டு *4-12-1970* வரையிலே விவாதம் தொடர்ந்து, பிறகு அது விடப்படுகிறது. *1971*-ஆம் ஆண்டிலும் அந்த விவாதம் நடைபெற்றிருக்கின்றது.




ஆக, இந்த எண்ணங்கள், இந்தக் கருத்துக்கள், மாநில மத்திய உறவுகள் செம்மைப்பட வேண்டும், மாற்றியமைக்கப்பட்டாக வேண்டும், அதற்கேற்ப அரசியல் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்கின்ற இந்த எண்ணங்கள் எல்லாம் புதியவை அல்ல. ஆங்காங்கு இன்றைக்குக் கிளைத்துக் கொண்டிருக்கின்றன.

நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அனுசரணையாக ஒன்றைச் சொல்லுகின்றேன். *13—8—1973*-ல் புது டெல்லியிலே அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்திற்கு அசோக் மேத்தா வந்திருக்கிறார். சி.பி. குப்தா

வந்திருக்கிறார். பிறகு ராஜ் நாராயண், கர்ப்பூரி தாகூர், பட்நாய்க், பிலு மோடி, சாம்லால் யாதவ், சிவ்குமார் சாஸ்திரி, இரா. செழியன், எஸ். எஸ். மாரிசாமி, பிரகாஷ்வீர் பாதல், டாக்டர் பாரீபி ஆகியோர் கூடிப் பேசுகிறார்கள். அதிலே அவர்கள் National Protest day ''தேசிய கண்டன நாள்'' கொண்டாட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் இந்திய சர்க்காருக்கு எதிர்ப்பாக, இந்திய சர்க்கார் எதெதிலே தவறி விட்டது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக அவர்கள் சொல்கிறார்கள். "Failure to supply of food, failure to control prices, failure to maintain law and order," என்றெல்லாம் சொல்லிவிட்டு, அதிலே "failure to respect State Autonomy" என்றும் சொல்கிறார்கள். அசோக் மேத்தாவும், கிருபளானியும் மற்றவர்களும் கூடிப் பேசிய அந்த அனைத்துக் கட்சிகளுடைய கூட்டத்தில் இதே கருத்தை அவர்கள் பிரதிபலித்திருக்கின்றார்கள்.

ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு உடன்பாடற்ற கருத்து என்று நான் சொல்லவில்லை. தி.மு. கழகம் சொல்லுகின்ற 'காரணத்தால் —தமிழரசுக் கழகத்தினுடைய தலைவர் சொல்லுகின்ற காரணத்தால், அல்லது தி.மு. கழகத்தினுடைய தோழமைக் கட்சிகள் சொல்லுகின்ற காரணத்தால் — இந்தக் கருத்து எடுபடக் கூடாது என்கின்ற எண்ணம் காங்கிரஸ் தரப்பிலே இருப்பவர்களுக்கு ஏற்படலாகாது என்பதைத்தான் நான் மிகுந்த பணிவன்போடு இங்கே தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானம், திருத்தம், பேரவையிலே ஒன்றாகவும் மேலவையிலே ஒன்றாகவும் இருந்தாலும், நான் இரண்டினுடைய முரண்பாட்டை எடுத்துக் காட்டி அதை விமர்சிக்க விரும்பவில்லை. பேரவையை விட மேலவையில் — திருத்தம், திருத்தம் பெற்று, தெளிவு பெற்று, மாநில சுயாட்சிக் கொள்கைக்கு ஓரளவிற்கு ஏற்கத் தக்க வகையில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களால் காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானத்தின் பின்னணியோடு, கொண்டுவரப்பட்டிருப்பதற்காக நான் உள்ளபடியே பாராட்டுகின்றேன்.

ஆனால், அங்கே காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற கட்சிகளும் சேர்ந்து 'அரசியல் சட்டம் திருத்தப்படவே தேவையில்லை, மத்திய மாநில உறவுகளுக்காக! எந்த முயற்சியுமே எடுக்கத் தேவையில்லை'', என்கின்ற அளவிலே அங்கே திருத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவருடைய திருத்தத்திலே ''முதலமைச்சர்களுடைய மாநாடு கூட்டப்பட வேண்டும்; இதுபற்றி எல்லாம் பேசப்பட வேண்டுமென்'றெல்லாம் சொன்னார்கள். 'இந்தியாவில் எல்லோரையும் அழைத்தல்லவா பேச வேண்டும்? நாம் மாத்திரம் சொல்லி என்ன பயன்'? என்று கேட்டார்கள்.

இதே எண்ணம் — இதே கருத்து மதுவிலக்கிலே இருக்கிறதா என்றால், இல்லை! நீங்கள் ஏன் வழி காட்டக்கூடாது! கேட்கிறீர்கள்! அது போல — மதுவிலக்கிலே நீங்கள் கேட்டீர்கள், நீங்கள் ஏன் வழி காட்டக் கூடாது என்று! நாங்கள் ஒரு மூன்று ஒத்தி வைத்தோம் — பெரியவர்கள் எல்லாம் இப்படிக் கேட்கிறீர்

களே என்பதற்காக! மறுபடியும் நாங்கள் எங்களைத் திருத்தி கொண்டோம், நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்போ என்று! அதைப்போலவே இன்றைக்கு மாநில சுயாட்சியிலு வழிகாட்டியாக இருக்கிறோம்.

மதுவிலக்கை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இங்கே மது விலக்கு உண்டு; அதைப்போல மாநில சுயாட்சியை மற்றவ கள் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் — சிலம்புச் செல்வர் சொ னதைப் போல — இங்கே மாநில சுயாட்சிக்கான போராட்ட நிச்சயமாக உண்டு — அதற்கான — வெற்றி பெறுவதற்கான — அணி நிச்சயமாகத் திரளும். சிலம்புச் செல்வர் அவர்கள் இங்கே கேட்டார்கள்! 'தீர்மானத்தோடு சரியா? நாளைக்கு மயிலாப்பூர் கூட்டத்தோடு முடிகிறதா? முதலமைச்சர் என்ன செய்யப் போகி றார்? தி.மு.க. என்ன செய்யப் போகிறது? ஒரு நிபந்தனை போட்டு தேதி குறிக்க வேண்டாமா? நான் சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக இருக்கின்றேன்', என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்கும் சொல்லுகின்றேன், இந்த அவைக்கும் சொல்லுகின் றேன்; இந்த நாட்டுக்கும் சொல்லுகின்றேன்—என்னுடைய வாழ்க் கையிலே — பொது வாழ்க்கையிலே மிக முக்கியமான ஒரு கடமையை நான் முடித்திருப்பதாகக் கருதுகின்றேன். ஆகவே இந்தக் கடமைக்குப் பிறகு — இந்தக் கடமையை நிறைவேற்ற — இந்தப் பதவியைக் கூடத் தூக்கி எறிந்துவிட்டு நானும் சிலம்புச் செல்வரோடு — சிலம்புச் செல்வர் சிறைச்சாலைக்கு ஏகுகின்ற காலத்தில் நானும் அவரோடு ஒன்றாக இருக்கக் கூடிய சூழ்நிலையை நிச்சயமாக நான் உருவாக்கிக் கொள்வேன். அதை உருவாக்கிக் கொண்டு உங்களோடு சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

# தமிழரசு

இலவச
இணைப்பு

முத்து